# புதிய ஜனநாயகம்

நவ. 2009
ரூ. 7.00





## நக்சல் வேட்டை...

# அரசு பயங்கரவாத உள்நாட்டுப் போர்!

# “தில்லை நடராசர் கோயில் தெற்கு வாயிலை அடைத்து நிற்கும் தீண்டாமைச் சுவரைத் தகர்த்தெறிவோம்!”

## - மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) பிரச்சாரம்-ஆர்ப்பாட்டம்

சிவனடியார் ஆறுமுகசாமியை முன்னிலைப்படுத்தி மனித உரிமைப் பாதுகாப்பு மையமும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகளும் கடந்த ஐந்தாண்டுகளாக நடத்திய தொடர் போராட்டங்களின் விளைவாக, கடந்த 16.9.09 அன்று ''தில்லைக் கோயில் தீட்சிதர் சொத்தல்ல; மக்கள் சொத்து!'' என்று சென்னை உயர்நீதி மன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கியது.

இம்முதற்கட்ட வெற்றியோடு நில்லாமல், ''கொலை - கொள்ளை முதலான கிரிமினல் குற்றங்கள் புரிந்த பார்ப்பன தீட்சிதர்களைக் கைது செய்ய வேண்டும்! நந்தன் நுழைந்த தில்லை நடராசர் கோயில் தெற்கு வாயிலை அடைத்து நிற்கும் தீண்டாமைச் சுவரைத் தகர்த்தெறிய வேண்டும்!'' என்ற கோரிக்கைகளை முன்வைத்து, புரட்சிகர அமைப்புகளையும் பல்வேறு கட்சிகள் - தமிழின உணர்வாளர்களையும் கொண்ட ம.உ.பா.க. தலைமையிலான கூட்டமைப்பு தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகிறது. 6.10.2009 முதல் 13.10.2009 வரை சிதம்பரம் மற்றும் சுற்றியுள்ள சிறு நகரங்களில் இக்கூட்டமைப்பின் சார்பில் தெருமுனைக் கூட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகப் பிரச்சார இயக்கம் நடைபெற்றது.




அதன் தொடர்ச்சியாக, 21.10.2009 புதன் அன்று காலை 11.00 மணியளவில் சிதம்பரம் பெரியார் சிலை அருகில், ''தில்லை நடராசர் கோயில் தெற்கு வாயிலை அடைத்து நிற்கும் தீண்டாமை சுவரை தகர்த்தெறிவோம்!'' என்ற கோரிக்கை முழக்கத்துடன் 300க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த முன்னணியாளர்கள் பார்ப்பனத் தீண்டாமைக்கெதிராகக் கண்டன உரையாற்றினர்

''1400 ஆண்டுகளுக்கு முன்பே தீண்டாமை கொடுமைக்கு எதிராக ஆலய பிரவேசம் செய்து போராடிய முதல் மனிதன் தான் நந்தன். தெற்கு வாயில் தீண்டாமை சுவரை அகற்றாவிட்டால், மக்களே தகர்த்தெறிவார்கள் என்ற சூழல் வந்தால்தான், அரசு அதை அகற்றும். தீண்டாமை சுவரை தகர்த்தெறியும் மக்கள் போராட்டத்தில் முன்னணியில் நாங்கள் அர்ப்பணிப்போடு நிற்போம். பார்ப்பனியத்துக்கு எதிராகவும் தீண்டாமைக்கு எதிராகவும் அணி திரண்டு போராடுவோம்!'' என்று தமிழக மக்களைப் போராட அறைகூவிய இந்த ஆர்ப்பாட்டம், சிதம்பரம் நகரை அதிரவைத்ததோடு, பார்ப்பன கும்பலை அலறவும் வைத்துள்ளது.

— பு.ஜ.செய்தியாளர்,
சிதம்பரம்.

# 25-ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம்

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

இந்த இதழிலிருந்து ''புதிய ஜனநாயகம்'' 25-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

1985 நவம்பர் புரட்சி நாளில் வெளிவந்த ''புதிய ஜனநாயகம்'' வாசகர்களாகிய உங்களது உறுதியான ஆதரவால் கால்நூற்றாண்டைத் தொட்டிருப்பது, எமக்குப் பெருமையையும் நம்பிக்கையையும் அளிக்கிறது. மார்க்சிய-லெனினிய அரசியலை ஏந்தி, தொடர்ந்து 25 ஆண்டுகளாக ஒரு பத்திரிகை வெளிவருவது தமிழக புரட்சிகர இயக்க வரலாறில் இதுவே முதன்முறையாகும். கடந்த 24 ஆண்டுகளில் ''புதிய ஜனநாயம்'' இதழ் எதிர்கொண்ட இடர்ப்பாடுகள் ஏராளம். வாசகர்களாகிய நீங்கள் அளித்த உறுதியான ஆதரவும், மார்க்சிய-லெனினிய அரசியல் அளித்த ஊக்கமும் நம்பிக்கையும்தான் ''புதிய ஜனநாயகம்'' இதழ் தொடர்ந்து வெளிவர உதவியிருக்கிறது. மார்க்சிய-லெனினிய புரட்சிகர அரசியலைப் பற்றி நின்று பாதுகாத்து, பரந்துபட்ட மக்களிடம் பிரச்சாரம் செய்யும் இம்மகத்தான கடமைக்குத் தோள் கொடுத்து உதவிய வாசகர்களாகிய உங்களுக்கும், பல்வேறு நெருக்கடிகளுக்கிடையிலும் அயராது உழைத்த முகவர்கள்-விற்பனையாளர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியையும் புரட்சிகர வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாசகர்களின் கோரிக்கையை ஏற்று இவ்விதழிலிருந்து எழுத்துருவை மாற்றியுள்ளோம். வாசகர்களின் ஆலோசனைகள்-கருத்துக்களைப் பரிசீலித்து வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் அவசியமான மாற்றங்களைச் செய்ய விழைகிறோம். வாசகத் தோழர்களின் கோரிக்கையை ஏற்று, ''புதிய ஜனநாயகம்'' இதழின் கருவூலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அவசியமான அரசியல் கட்டுரைகளை இவ்விதழிலிருந்து தொடர்ந்து வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

மார்க்சிய-லெனினிய அரசியலை ஏந்தி, இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற, உங்களது உறுதியான ஆதரவுடன் 25-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

வாசகத் தோழர்கள் அனைவருக்கும் எமது நவம்பர் புரட்சி நாள் வாழ்த்துக்கள்!

— ஆசிரியர் குழு

## அலைக்கற்றை (ஸ்பெக்ட்ரம்) ஊழல்:

# தி.மு.க. - காங்கிரசின் கூட்டுக் களவாணித்தனம்

கிணற்றில் போடப்பட்டக் கல்லைப் போல் கிடந்த அலைக்கற்றை (ஸ்பெக்ட்ரம்) ஊழல் விவகாரம் மீண்டும் சூடுபிடித்திருக்கிறது. இந்தியா வெங்கிலுமான தொலைபேசி சேவை 122 மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டு, 2001-ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட உரிமக் கட்டணத்தின்படி, 2008 -இல் இந்த 122 மண்டலங்களும் முதலில் வருபவருக்கு முதலில் உரிமம் என்ற அடிப்படையில் 9 தனியார் நிறுவனங்களுக்கு (அந்நிய முதலீடும் இதில் உண்டு) விற்கப்பட்டுள்ளன.

ஒரு பொருள் 2001-இல் என்ன விலைக்கு விற்கப்பட்டதோ, அதே விலைக்கு 2008-இலும் விற்பதற்கு சந்தைப் பொருளாதாரம் இடம் தராது என்பது பாமரனுக்கும் தெரியும். ஆனால், சந்தையில் கிராக்கி அதிகமுள்ள இரண்டாம் தலைமுறை அலைக்கற்றை வரிசையின் உரிமக் கட்டணமோ, 2008-இல் நிலவிய சந்தை மதிப்புக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படாமல், 2001-இல் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தின்படி விற்கப்பட்டுள்ளது. சந்தைப் பொருளாதாரத்தில் நிபுணத்துவம் வாய்ந்த மன்மோகன் சிங் அரசு, இந்தத் தவறை அறியாமலா செய்திருக்கும்?

அலைக்கற்றை வரிசைகளைப் பெற்ற ஒன்பது தனியார் நிறுவனங்களுமே இந்தப் பொன்னான வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டன. 13 மண்டலங்களை 1,537 கோடி ரூபாய்க்குப் பெற்ற ''ஸ்வான்'' என்ற நிறுவனம், அதில் 45 சதவீதத்தை மட்டும் 4,200 கோடி ரூபாய்க்கு ''எடில்சலாட்'' என்ற நிறுவனத்துக்கு விற்றுக் கொள்ளை இலாபம் அடைந்திருக்கிறது. 22 மண்டலங்களை 1,658 கோடி ரூபாய்க்குப் பெற்ற ''யூனிடெக்'' நிறுவனம், தனது 60 சதவீதப் பங்குகளை 6,100 கோடி ரூபாய்க்கு விற்றிருக்கிறது. எனவே, அலைக்கற்றை விற்பனையில் ஊழலும், மோசடியும் நடந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க மூளையைக் கசக்கிப் புலனாய்வு நடத்த வேண்டிய அவசியமேயில்லை. தனியார்மயம் என்பதே சட்டப்படி நடக்கும் கொள்ளைதான் என்பதற்கு இந்த ஊழல் விவகாரம் இன்னுமொரு சான்றாய் அமைந்திருக்கிறது.

இந்த விற்பனையில் கிடைத்த இலஞ்சப் பணத்தை வாரியிறைத்துத்தான் தி.மு.க.-காங்கிரசு கூட்டணி, அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் எதிர்பாராத வெற்றியை அடைந்தது என்பது ஊரறிந்த உண்மை. எனவே, காங்கிரசும் இந்தக் கொள்ளையில் பலன் அடைந்திருக்கிறது என்பதை மறுத்துவிட முடியாது. ஆனால், கூட்டணியில் நிலவும் முட்டல் — மோதலின் காரணமாக, இந்த ஊழலின் முழுப் பொறுப்பையும் தி.மு.க.வைச் சேர்ந்த ராசாவின் தலையில் சுமத்திவிட முயலுகிறது, களவாணி காங்கிரசு. காங்கிரசின் இந்த நரித்தனத்திற்கு எதிர்க்கட்சிகளும் தேசியப் பத்திரிகைகளும் முட்டுக் கொடுக்கின்றன.

ராசா தொடர்புடைய இந்த ஊழல் பத்திரிகைகளில் அலசப்பட்ட அளவிற்கு, கடந்த அக்டோபர் மாதம் அம்பலமான வேறு இரண்டு ஊழல்கள் குறித்து விரிவாக அலசப்படவில்லை. ஜார்கண்ட் மாநில சுயேச்சை சட்டமன்ற உறுப்பினராக இருந்த மதுகோடா, பா.ஜ.க.வின் தயவில் அமைச்சராகி, பின்னர் காங்கிரசின் தயவில் அம்மாநில முதல்வராகி, ஆகஸ்டு 2006 முதல் ஜூன் 2008 முடிய ஆட்சி நடத்தினார். அவர் எம்.எல்.ஏ. ஆனபொழுது 40 இலட்சமாக இருந்த அவரது சொத்து மதிப்பு, அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்ட சமயத்தில் 400 கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறது. ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள தாதுப்பொருள் சுரங்கங்களைத் தரகு முதலாளிகளுக்கும்,

தொடர்ச்சி 13-ஆம் பக்கம்

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்: 1
நவம்பர் 2009

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561


## நக்சல் வேட்டை...

# அரசு பயங்கரவாத உள்நாட்டுப் போர்!

**மறுகாலனியாதிக்கத்தைத் தடையின்றித் திணிக்கவே, நக்சல் பீதியூட்டப்பட்டு நாட்டு மக்கள் மீது அரசு பயங்கரவாதம் ஏவப்படுகிறது.**

**நா**ட்டு மக்கள் மீது ஒரு கொடிய உள்நாட்டுப் போர் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. மாவோயிஸ்டு பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரால் கோடானுகோடி உழைக்கும் மக்கள் மீது அரசு பயங்கரவாதப் போர் ஏவி விடப்பட்டுள்ளது. மறுகாலனியச் சூறையாடலைத் தீவிரப்படுத்தவும், சொந்த மண்ணிலிருந்து உழைக்கும் மக்களைப் பிய்த்தெறிந்து விரட்டியடிக்கவும், பாசிச அடக்குமுறையைக் கேள்விமுறையின்றி நாட்டின் மீது திணிக்கவும், மாவோயிஸ்டு பூச்சாண்டி காட்டி ஒரு கொடிய போர் காங்கிரசு கூட்டணி ஆட்சியாளர்களால் தொடுக்கப்பட்டுள்ளது.

‘‘நக்சல் ஒழிப்பு கோப்ரா படை, மத்திய ரிசர்வ் போலீசு, எல்லைப் பாதுகாப்புப் படை மற்றும் இந்திய விமானப் படையின் ஹெலிகாப்டர்கள் இப்போரில் பயன்படுத்தப்படும். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் செயற்கைக் கோள் வழியே அனைத்து மாநிலங்களிலும் கண்காணிப்பு வலைப்பின்னல் ஏற்படுத்தப்படும். நக்சல்பாரிகள் மற்றும் பிற தீவிரவாதக் குழுக்களின் வன்முறையை முறியடிக்க உளவுத் துறை, இராணுவம், துணை இராணுவப் படைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தேசிய தீவிரவாத எதிர்ப்பு மையம் (NCTC) என்ற உயர்மட்ட அமைப்பு, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தலைமையில் நிறுவப்படும். தேசத்தின் பாதுகாப்பு நலனையொட்டி உருவாக்கப்படும் இத்தகைய அமைப்புக்கென தனியே சட்டம் இயற்றப்படும்’’ என்று பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்துள்ளார்.




நாடெங்கும் நக்சல் வன்முறை தீவிரமாகிவிட்டதாகப் பீதியூட்டி ஆளும் வர்க்கப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ள வரைபடம்.

கடந்த ஆகஸ்ட் 17-ஆம் நாளன்று நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசிய பிரதமர் மன்மோகன்சிங், ‘‘நாட்டின் 180 மாவட்டங்களில் நக்சல்பாரிகள் ஊடுருவி விட்டார்கள். நாட்டின் 40 சதவீதப் பகுதியில் அவர்கள் இணையான அரசு நடத்துகிறார்கள்’’ என்று அப்போதே பீதியூட்டினார். நக்சல்பாரிகளால்தான் நாட்டுக்கு மிகப் பெரிய அபாயம் ஏற்பட்டுள்ளதைப் போல காட்டுவதற்காகவும், இந்த உள்நாட்டுப் போருக்கு நியாயம் கற்பிக்கும் வகையிலும், ‘‘நக்சல் வன்முறைக்கு எதிரான போராட்டத்தில் நாங்கள் வெற்றியடைந்து விடவில்லை. தற்போதைய நடவடிக்கைகளின் மூலம் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நக்சல் பயங்கரவாதத்தை முறியடிப்போம்’’ என்கிறார் பிரதமர் மன்மோகன் சிங். ‘‘நக்சல் வன்முறையை நாங்கள் குறைத்து மதிப்பிட்டு விட்டோம். ஆனால், இப்போது எச்சரிக்கை மணி ஒலிக்கத் தொடங்கிவிட்டது. இனியும் தாமதிப்பதற்கில்லை. நக்சல்களுக்கு எதிரான தாக்குதல் தீவிரப்படுத்தப்படும் ’’ என்று கொக்கரிக்கிறார் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம். ‘‘மாவோயிஸ்டு பயங்கரவாதிகள் ஆயுதப் போராட்டம் நடத்தும் வரை, அவர்களுக்கெதிராக துணை இராணுவப் படைகள் தாக்குதல் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை; அவர்களோடு எந்தவித பேச்சுவார்த்தையுமில்லை’’ என்று அவர் சீறுகிறார். நேற்றுவரை இஸ்லாமிய தீவிரவாதிகளால்தான் நாட்டுக்கு ஆபத்து என்று கூப்பாடு போட்டுவந்த ஆட்சியாளர்கள், இப்போது மாவோயிஸ்டு பயங்கரவாதிகளால்தான் நாட்டுக்குப் பேராபத்து என்று அலறுகிறார்கள்.

‘‘நாடெங்கும் ஆளெடுப்பு நடத்தப்பட்டு 1,50,000 போலீசார் புதிதாகச் சேர்க்கப்படுவார்கள். இதேபோல, துணை இராணுவப் படைகளுக்கு 26,000 பேர் சேர்க்கப்படுவார்கள். அனைத்து மாநிலங்களிலும் வட்டார அளவில் உளவுத்துறை மையங்கள் நிறுவப்படும். முதற்கட்டமாக மகாராஷ்டிரா, சட்டிஸ்கர், ஜார்கந்து, பீகார் ஆகிய மாநிலங்களில் நக்சல் ஒழிப்பு கோப்ரா படையின் தலைமையகங்கள் நிறுவப்படும். அதன் தொடர்ச்சியாக உ.பி., ஒரிசா மாநிலங்களிலும், பின்னர் இதர மாநிலங்களிலும் நிறுவப்படும். இந்த கோப்ரா படை என்பது கைத்துப்பாக்கிகள், எந்திரத் துப்பாக்கிகள், கையெறி குண்டுகள், எரிகணைகள், வீடுகள்-கட்டிடங்களைத் தகர்க்கும் ஆற்றல் மிக்க துப்பாக்கிகள், கவச உடைகள் கொண்ட அதிநவீன அதிரடிப்படையாகக் கட்டியமைக்கப்படும்’’ என்று அரசு அறிவித்துள்ளது.

மே.வங்கத்தில் ஏற்கெனவே மாநில போலீசுப் படைகளும் மைய அரசின் துணை இராணுவப் படைகளும் நக்சல்பாரிகளுக்கு எதிராகத் தேடுதல் வேட்டையையும் தாக்குதலையும் தொடங்கிவிட்டன. 17 கம்பெனி படைகள் (ஒரு கம்பெனி என்பது ஏறத்தாழ 1,700 பேர்) அதாவது ஏறத்தாழ 28,000 பேர் கொண்ட படைகள் அம்மாநிலத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

மகாராஷ்டிர மாநில அரசு, நாட்டிலேயே முதன்முறையாக அமையும் ஃபோர்ஸ்-1 (force 1) என்ற இஸ்ரேலிய பாணியிலான பயங்கரவாத எதிர்ப்பு கமாண்டோ படையைக் கட்டியமைத்து, முதலில் மும்பையிலும் அதன் பிறகு புனே மற்றும் நாக்பூரிலும் நிறுவத் தீர்மானித்துள்ளது. நக்சல் வன்முறையால் போர்க்காலச் சூழல் ஏற்பட்டுள்ளதென்றும், நக்சல் வன்முறையை முறியடிக்க ரூ.100 கோடி செலவில் மாநிலப்

## சி.பி.எம்.அரசு ஏவிவிட்டுள்ள பயங்கரவாதச் சட்டம்:

# சொல்லில் சோசலிசம்! செயலில் பாசிசம்!

**சி.**பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக் குழு கூட்டம் கடந்த அக்டோபர் 11-ஆம் தேதியன்று நடைபெற்றபோது, மே.வங்கத்தில் பயங்கரவாத ''ஊபா'' (UAPA) சட்டம் செயல்படுத்தப்படுவதைப் பற்றிய விவாதம் நடக்கும்; மே.வங்க அரசு மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்படும் என்று 'இடதுசாரி' கூட்டணிக் கட்சிகள் பெரிதும் எதிர்பார்த்தன. ஆனால், அக்கூட்டத்தில் இது பற்றி எந்த விவாதமும் நடக்கவில்லை.

''மே.வங்க நிலைமை பற்றி அம்மாநில முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்ஜியோ, மாநிலச் செயலாளர் பீமன்போசோ எதையும் குறிப்பிடாததால், நாங்கள் அதைப் பற்றி எதுவும் விவாதிக்கவில்லை'' என்கிறார். சி.ஐ.டி.யு. பொதுச் செயலாளரான எம்.கே.பாண்டே. ''எங்கள் கட்சி ஊபா சட்டத்தையொட்டி சில முடிவுகள் எடுத்துள்ளது. ஆனால் மாநில அரசு, அரசியல் சட்டப்படிதான் இயங்க முடியும். தொழிற்தகராறு சட்டத்தை எங்கள் கட்சி கருப்புச் சட்டம் என்று அறிவித்துள்ள போதிலும், மே.வங்க அரசு அதை நடைமுறைப்படுத்தித்தான் வருகிறது. அதைப் போலவே ஊபா சட்டத்தை எங்கள் கட்சி எதிர்த்தாலும், மாநில அரசு அதை நடைமுறைப்படுத்துவதில் வியப்பொன்றும் இல்லை'' என்று விளக்கமளிக்கிறார் இந்த தொழிற்சங்க சுல்தான்.

சி.பி.எம். கட்சியின் அதிகாரபூர்வ வார இதழான ''பீப்பிள்ஸ் டெமாகிரசி''யில் (டிசம்பர் 21,2008 தேதியிட்ட இதழ்) அக்கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான சீதாராம் எச்சூரி, இந்தச் சட்டத்தைக் கடுமையாக விமர்சித்து கட்டுரை எழுதினார். இப்போது மே.வங்க அரசு, லால்கார் போராட்டத் தலைவரான சத்ரதார் மஹடோவை இப்பயங்கரவாத ஊபா சட்டப்படி 180 நாட்களுக்குப் பிணை வழங்காமல் சிறையிலடைத்துள்ளது. எச்சூரியோ ''கட்சியின் நிலைப்பாடு வேறு; மாநில அரசின் செயல்பாடு வேறு'' என்று தமது சந்தர்ப்பவாதத்துக்குப் புதுவிளக்கம் தருகிறார்.

''ஊபா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை எங்கள் கட்சி எதிர்க்கிறது. அதேசமயம் மைய அரசு மாவோயிஸ்டு பயங்கரவாதத்துக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எங்கள் கட்சி ஆதரிக்கிறது. மைய அரசு போட்டுள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டப்படிதான் மே.வங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்கிறது. மாநில அரசு எந்தக் கருப்புச் சட்டத்தையும் இயற்றவில்லை'' என்று தனி விளக்கம் அளிக்கிறார், மே.வங்க சி.பி.எம்.செயலாளரான பீமன்போஸ்.



மார்க்சிஸ்டுகளா? பாசிஸ்டுகளா?: பயங்கரவாத ''ஊபா'' சட்டத்தை மே.வங்கத்தில் ஏவுவதை நியாயப்படுத்தும் எம்.கே.பாண்டே, சீதாராம் எச்சூரி, பீமன்போஸ்.

''இதுதான் சி.பி.எம். கட்சியின் அப்பட்டமான இரட்டை நாக்கு'' என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகின்றனர், 'இடதுசாரி' கூட்டணியிலுள்ள புரட்சி சோசலிஸ்டு கட்சியினர். சொல்லில் சோசலிசம், செயலில் பாசிசம் என்ற பித்தலாட்டத்துக்கு மிகப் பொருத்தமான துரோகக் கும்பல்தான் சி.பி.எம். கட்சி என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்? ●

போலீசுப் படை வலுப்படுத்தப்படும் என்றும், நக்சல் ஆதிக்கம் நிலவும் பகுதிகளில் ரோந்துப் படைகளும் ஆயுதமேந்தியப் புறக்காவல் நிலையங்களும் நிறுவப்படும் என்றும் அம்மாநில முதல்வர் அறிவித்துள்ளார்.

ஆந்திராவில் நக்சல்பாரிகளை நரவேட்டையாட தனிச்சிறப்பாக போலீசு வேட்டைநாய்கள் படை (greyhounds) உருவாக்கப்பட்டுள்ளதைப் போலவே, சட்டிஸ்கர், ஒரிசா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஜார்கந்து ஆகிய மாநிலங்களில் இத்தகைய சிறப்புப் போலீசுப் படைகள் உருவாக்கப்படும் என்று மைய அரசு அறிவித்துள்ளது. இது தவிர கோப்ரா படைகளும் அதிரடிப் படைகளும் மூன்றாண்டுகளுக்கு இம்மாநிலங்களில் நிறுத்தப்படவுள்ளன. இராணுவத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த யு.பி.ஜி.எல். எனப்படும் எறிகுண்டு தாக்குதல் பீரங்கியை இனி மாநில அளவிலான தீவிரவாத எதிர்ப்புப் படைகளும் பயன்படுத்த மைய அரசு அனுமதித்துள்ளது. உ.பி.யின் மாயாவதி அரசு, சட்டிஸ்கரில் அரசே கட்டியமைத்துள்ள சல்வாஜூடும் குண்டர் படையைப் போல, 35,000 பேர் கொண்ட குண்டர் படையைக் கட்டியமைக்கத் தீர்மானித்துள்ளது. இதேபோல, மகாராஷ்டிராவிலும் கத்சிரோலி மாவட்டத்தில் பழங்குடியினரைக் கொண்ட குண்டர்படை கட்டியமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

> தனியார்மய–தாராளமயக் கொள்ளையை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராடுபவர்கள்தான் தீவிரவாதிகளாக, பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்படுகிறார்கள்.

# போராளி சத்ரதார் மஹடோ கைது: அவதூறு - பொய்வழக்குகள்!

மே.வங்கத்தில் லால்கார் மக்களின் போராட்டத்தை போலீசு அடக்குமுறைக்கு எதிரான மக்கள் கமிட்டி (PCAPA) தலைமைதாங்கி வழிநடத்தி வருகிறது. இப்போராட்டக் கமிட்டியின் தலைவரான சத்ரதார் மஹடோ, லால்கார் பகுதியில் மக்கள் மத்தியில் வெளிப்படையாகவும் அரசுக்குத் தலைமறைவாகவும் இருந்துகொண்டு போராட்டத்தை வழிநடத்தி வந்தார். உள்ளூர் பத்திரிகையாளர்கள் லால்கார் போராட்டம் பற்றிய செய்திகளைத் திரட்ட விரும்பினால், தனது இரகசிய இடத்துக்கு வருமாறு தகவல் அனுப்பி போராட்டச் செய்திகளையும் நேர்காணல்களையும் அவர் அளித்து வந்தார்.

இந்நிலையில், மே.வங்க உளவுத்துறை போலீசார் தம்மை வெளிநாட்டு செய்தி நிறுவனத்தின் செய்தியாளர்கள் என்றும் அவரிடம் நேர்காணல் நடத்த விரும்புவதாகவும் தகவல் அனுப்பினர். சத்ரதார் மஹடோவும் அவர்களைப் பத்திரிகையாளர்களாகக் கருதி லால்காரிலுள்ள தனது இரகசிய இடத்துக்கு வருமாறு அழைத்தார். பத்திரிகையாளர்களாகக் காட்டிக் கொண்ட உளவுத்துறை போலீசார், இரகசிய இடத்தில் அவரைச் சந்தித்ததும் கைத்துப்பாக்கியை அவரது நெற்றியில் அழுத்தி அவரைக் கடத்திச் சென்று, கைது செய்துள்ளதாக அறிவித்தனர். தலைமறைவாக இருந்து கொண்டு அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டு வந்த முக்கிய தீவிரவாதியைக் கைது செய்துள்ளதாக மே.வங்க அரசும் உளவுத்துறை போலீசும் தமது சாகசத்தைப் பெருமையாகக் குறிப்பிட்டன.

அதைத் தொடர்ந்து, லால்கார் மக்களின் போராட்டத் தலைவரான சத்ரதார் மஹடோ மிகக் கொடிய பயங்கரவாதி என்றும் அவர் மீது 22 கிரிமினல் வழக்குகள் உள்ளன என்றும் மே.வங்கப் போலீசு அறிவித்தது. இதில் வேடிக்கை என்னவென்றால், கடந்த ஜூன் 13-ஆம் தேதி வரை அவர் மீது எந்த வழக்கும் இல்லை. தேர்தலுக்கு இருநாட்கள் முன்புவரை, லால்கார் மக்கள் தேர்தல் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்த வேண்டாம் என்று கெஞ்சி தேர்தல் கமிசன் அதிகாரிகளும் மே.வங்க அரசு அதிகாரிகளும் மஹடோவிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். தேர்தல் முடிந்த பிறகு, அவர் இப்போது 'பயங்கரவாதி'யாகி விட்டார்.

லால்காரில் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டுள்ள, போலீசு அடக்குமுறைக்கு எதிரான மக்கள் கமிட்டியின் தலைவர் சத்ரதார் மஹடோ.



''மஹடோவுக்கு ஒரிசாவிலுள்ள மயூர்பன்ச் நகரில் அடுக்குமாடி வீடு உள்ளது; அவர் ஒரு கோடி ரூபாய்க்கு காப்பீடு பாலிசி வைத்துள்ளார். லால்கார் வட்டாரத்தில் அவருக்கு 5 வீடு

நாடெங்கும் ஏறத்தாழ 5,000 பேர் கொண்ட ஆயுத மேந்திய படையை மாவோயிஸ்டு பயங்கரவாதிகள் கட்டியமைத்துள்ளதாக அரசின் உளவுத்துறை மிகைப் படுத்தி மதிப்பிட்டுள்ள நிலையில், அவர்களை ஒழிக்க நாடெங்கும் இவ்வளவு பெரிய அதிநவீன ஆயுதப் படைகளை அரசு கட்டியமைத்துத் தாக்குதல் நடத்தக் கிளம்புவது ஏன்?

சுருக்கமாகச் சொன்னால், மே.வங்கத்திலிருந்து ஆந்திரா வரையில் நக்சல்பாரிகள் ''சிவப்புப் பிரதேசத்தை'' உருவாக்கிவிட்டார்கள் என்று அரசு பீதியூட்டி வரும் இப்பகுதியில்தான், நாட்டின் கனிமவளம் மிகுந்துள்ளது. ஜிண்டால், டாடா, எஸ்ஸார் முதலான ஏகபோக நிறுவனங்கள் இப்பகுதியில் கனிம வளத்தைச் சூறையாட அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டுள்ளன. 2005-ஆம் ஆண்டில் சல்வாஜூடும் என்ற குண்டர்படையை அரசு கட்டியமைத்த அதேநேரத்தில்தான், நூற்றுக்கணக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இம்மாநிலங்களில் போடப்பட்டன. சட்டிஸ்கரிலும்



பயங்கரவாத பீதியூட்டி, மையப்படுத்தப்பட்ட முறையில் ஆயுதப் படைகளைக் குவித்து நடத்தப்படும் நக்சல் வேட்டை.

ஜார்கந்திலும் நக்சல்பாரிகள் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறார்கள். இப்போது திடீரென நக்சல் வன்முறை பற்றிக் கூப்பாடு போடுவதற்குக்

கள் உள்ளன. அவர் தலைமையிலான போராட்டக் கமிட்டிக்கு வங்கி சேமிப்புக் கணக்கில் பல லட்ச ரூபாய் உள்ளது; மக்களைப் போராட்டத்துக்குத் தூண்டிய அவர், நகர்ப்புற அறிவுத்துறையினரிடம் கோடிக் கணக்கில் நன்கொடை வசூலித்தும் லால்கார் வட்டாரத்தில் கட்டாய வரி வசூலித்தும் சுகபோக வாழ்க்கையை நடத்தி வந்தார்'' — என்றெல்லாம் மே.வங்க இடதுசாரி அரசும் போலீசும் மஹடோ மீது அவதூறு சேற்றை வாரியிறைத்தன.

ஆனால், மஹடோவுக்கு ஒரு கோடி ரூபாய்க்கான காப்பீடு பாலிசி எதுவுமில்லை. ஒரிசாவிலுள்ள மயூர்பன்ச் நகரில் அவரது முன்னோர்களின் பழங்கால வீடு உள்ளது எனினும், உறவினர்கள் பங்கு போட்டுள்ளபடி அவருக்கு அதில் ஒரு சிறு அறை மட்டுமே கிடைக்கும். லால்கார் பகுதியில் உள்ள அம்லியா கிராமத்தில் உள்ள அவரது குடிசை இடிந்த நிலையில் உள்ளது. சால் மர இலைகளை விற்று அவர் தனது பிழைப்பை நடத்தி வந்துள்ளார். அண்மையில் அவரது மூக்குக் கண்ணாடி உடைந்து, புதிய கண்ணாடி வாங்கக்கூட அவரிடம் பணம் இல்லாமல் தவித்ததால், போராட்டக் கமிட்டிதான் அவருக்குக் கண்ணாடி வாங்கிக் கொடுத்துள்ளது. போராட்டக் கமிட்டிக்கு வங்கி சேமிப்புக் கணக்கில் சில ஆயிரங்கள் உள்ளன. அந்தக் கணக்குகள் மக்களின் பார்வைக்கு வெளிப்படையாக வைக்கப்பட்டுள்ளன. இந்த உண்மைகளை உள்ளூர் பத்திரிகைகள் அம்பலப்படுத்திய பின்னரும், இன்னமும் இந்த அண்டப்புளுகையும் அவதூறையும் வாரியிறைத்துக் கொண்டிருக்கிறது, மே.வங்க 'இடதுசாரி' அரசு.


எல்லாவற்றுக்கும் மேலாக, மஹடோவைக் கைது செய்த விதமே சட்டவிரோதமானது, மனித உரிமைகளுக்கு எதிரானது. உச்சநீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பின்படி (டி.கே.பாசு விசாரணை வழக்கையொட்டி), ஒருவரைக் கைது செய்யும்போது போலீசார் சீருடையும் தமது பெயர் பொறித்த அதிகாரபூர்வ வில்லையும் அணிந்திருக்க வேண்டும். எதற்காக கைது செய்கிறோம் என்ற விவர அறிக்கையையும் அளிக்க வேண்டும். இது அரசியல் சட்டத்தின் 22-வது விதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 2006 இந்தியக் குற்றவியல் சட்டத் திருத்த 50-ஏ விதியிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இச்சட்ட விதிகளை அப்பட்டமாக மீறி, பத்திரிகையாளர்கள் போல நடித்து உளவுத்துறைப் போலீசு அவரைக் கோழைத்தனமாகக் கைது செய்துள்ளது. இதன் மூலம் பத்திரிகையாளர்களின் தொழிலையே களங்கப்படுத்தியுள்ளது. அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் உண்மைச் செய்திகள் வெளிவருவதையே தடுக்க முயற்சிக்கிறது.

மஹடோ மட்டுமல்ல; மாவோயிஸ்டு கட்சி முன்னணியாளர்களும் லால்கார் போராட்டத்தை ஆதரித்து வந்த பலரும் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டுள்ளனர். கொலைமுயற்சி, அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தது, வெடி மருந்துகள் வைத்திருந்தது, சதிகளில் ஈடுபட்டது - என பயங்கரவாத ஊபா சட்டப்படி இவர்கள் மீது பொய்வழக்குகள் சோடிக்கப்பட்டுள்ளன.

இப்பயங்கரவாத அடக்குமுறையையும் சட்டவிரோத கைதுகளையும் எதிர்த்தும் போராளிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும் அருந்ததி ராய், நோம்சாம்ஸ்கி, பிரசாந்த் பூஷண், ஆனந்த் பட்வர்த்தன், சுமித் சர்க்கார், வந்தனா சிவா, மீரா நாயர் - என பிரபல எழுத்தாளர்கள், கலைஞர்கள், மூத்த வழக்குரைஞர்கள், பேராசிரியர்கள், சமூகவியலாளர்கள், சுற்றுச்சூழலாளர்கள், மனித உரிமை இயக்கத்தினர் பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டு மே.வங்க பாசிச அரசை எச்சரித்துள்ளனர். ●

காரணமே, இப்பகுதிவாழ் மக்களை வெளியேற்றிவிட்டு, இம்மாநிலங்களின் கனிம வளமிக்க வனப்பகுதியை உள்நாட்டு-வெளிநாட்டு முதலாளிகளின் சூறையாடலுக்குத் திறந்து விடுவதற்குத்தான். சட்டிஸ்கரிலுள்ள தண்டேவாடா மாவட்டத்தில் மட்டும் 644 கிராமங்களிலுள்ள மக்கள் கட்டாயமாக அரசால் வெளியேற்றப்பட்டுள்ளனர். 2005-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஏறத்தாழ மூன்றரை இலட்சம் மக்கள் அவர்களது சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

அரசு எந்திரம் இப்பகுதிகளில் பலவீனமாக உள்ளது என்று ப.சிதம்பரம் கூறுவது அப்பட்டமான பொய். ஏறத்தாழ 3 இலட்சம் தாழ்த்தப்பட்ட-பழங்குடியின மக்கள் இப்பகுதிகளிலிருந்து வனத்துறையாலும் போலீசாலும் கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அப்பாவிகள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டுள்ளனர். எல்லாவகையான அடக்குமுறைச் சட்டங்களும் இங்குதான் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதிகாரவர்க்க-போலீசு-இராணுவ ஆட்சி இங்குதான் முழுஅளவில் வீச்சாகச் செயல்படுத்தப்படுகிறது.



நக்சல்பாரிகள் என்ற சொல்லைக் கேட்டாலே, அதிரடிப் படையின் கொடிய தாக்குதல் நினைவுக்கு வரவேண்டும் என்ற நோக்கத்தில், லால்கார் பகுதியில் வீடுவீடாக நடத்தப்படும் தேடுதல் வேட்டை.

''காடுகளும் மலைகளும் சூழ்ந்த பின்தங்கிய இப்பகுதிகளில் வளர்ச்சிக்கான திட்டங்களை நக்சல்பாரிகள் எதிர்க்கிறார்கள்; முன்னேற்றத்தைத் தடுக்கிறார்கள்'' என்று வாதிடுகிறார் ப.சிதம்பரம். ஆனால், இப்பகுதிகளிலுள்ள உழைக்கும் மக்கள் நீண்டகாலமாக வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் போராடி வந்துள்ளார்கள். வன உரிமைப் பாதுகாப்பு, குறைந்தபட்சக் கூலி, வேலைக்கு உணவு, புறம்போக்கு நில உரிமை மற்றும் கல்வி, மருத்துவம், சுகாதாரம், குடிநீர், சாலை வசதி முதலானவற்றுக்காகப் போராடினார்கள். அவற்றை

## போலீசு அதிகாரி கடத்தல் விவகாரம்:

# பயங்கரவாதிகள் யார்?

மே.வங்கத்தின் லால்கார் வட்டாரத்தின் ஜங்கல் மகால் பகுதியிலிருந்து கைது செய்யப்பட்ட அப்பாவி பழங்குடியினப் பெண்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன், மேதினிப்பூர் பகுதியிலுள்ள சங்கராயில் போலீசு நிலையத்தைத் தாக்கி, அதிந்திரநாத் தத்தா என்ற போலீசு அதிகாரியைக் கடந்த அக். 20 அன்று மாவோயிஸ்டுகள் கடத்திச் சென்றனர். பி.பி.சி. செய்தியாளர்களின் முயற்சியால் அரசுக்கும் மாவோயிஸ்டுகளுக்குமிடையே பேரம்-பேச்சுவார்த்தை நடந்து அக்.22-ஆம் தேதியன்று போலீசு அதிகாரியான அதிந்திரநாத் தத்தா விடுவிக்கப்பட்டார். அதன் தொடர்ச்சியாக 14 பழங்குடியினப் பெண்கள் உள்ளிட்ட 23 பேர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செப் 3-ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டு, எவ்வித விசாரணையுமின்றி ஏறத்தாழ ஒன்றரை மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த லால்கார் வட்டார பழங்குடியினப் பெண்கள் மீது கொலை முயற்சி, அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தார்கள், சதி செய்தார்கள் என்றெல்லாம் பொய் வழக்குகள் சோடிக்கப்பட்டுள்ளன. தாங்கள் எதற்காகக் கைது செய்யப்பட்டோம், தற்போது எதற்காக விடுதலை செய்யப்படுகிறோம் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியவில்லை. பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள அந்த 14 பெண்களுக்கு ஊருக்குத் திரும்பிச் செல்வதற்குக் கூட போக்குவரத்து செலவுக்குக் கையில் காசில்லை. அவர்களது உற்றார்-உறவினர்கள் கூட, தங்களையும் மாவோயிஸ்டு பயங்கரவாதிகள் என்று கைது செய்வார்களோ என்ற அச்சத்தால் சிறையிடப்பட்ட அவர்களைப் பார்க்க வரவில்லை.

கைக்குழந்தையை கணவனிடம் தவிக்கவிட்டுக் கைதாகியுள்ள 22 வயதான பெண் முதல், இன்னொருவரின் தோளைப் பிடித்துக் கொண்டு தட்டுத்தடுமாறி நடக்கும் சுதாராணி பாஸ்கே என்ற 70 வயதான மூதாட்டி வரை அனைவருமே மாவோயிஸ்டு பயங்கரவாதிகளாம்! இவர்கள் போலீசுக்காரர்களைக் கொன்றொழிக்க முயற்சித்தார்களாம்!

''தேடுதல் வேட்டை என்ற பெயரில் போலீசார் எங்கள் குடிசைகளை இடித்துத் தள்ளிவிட்டார்கள். எங்களை ஆபாசமாகத் திட்டி அடித்து நொறுக்கிய

யெல்லாம் மிருகத்தனமாக ஒடுக்கி, அம்மக்களை இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே இருத்திவைத்து கடந்த 62 ஆண்டுகளாக வளர்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்து புறக்கணித்து வந்த ஆட்சியாளர்கள், இப்போது 'வளர்ச்சிக்கு' நக்சல்பாரிகள் தடையாக நிற்ப தாகப் பேசுகிறார்கள்.

நாட்டின் பாதுகாப்புக்கு நக்சல் வன்முறை மிகப் பெரிய அச்சுறுத்தலாகி விட்டதாம்! அதற்காகத்தான் இந்தப் போர் நடத்தப்படுகிறதாம்! நாட்டையும் மக்க ளையும் அமெரிக்க எஜமானர்களுக்கு அடிமைப்படுத் திவிட்ட சர்வகட்சி ஆட்சியாளர்கள் இப்படியொரு பூச் சாண்டி காட்டுகிறார்கள். நக்சல் வன்முறை தீவிரமாகி விட்டதாகக் கூறப்படும் பகுதிகளிலுள்ள காடுகளை அழித்த கிரிமினல் மாஃபியா குண்டர்கள், மலைகள்-குன்றுகளை அழித்த குவாரி மற்றும் சுரங்க முதலாளி கள், வனத்துறை அதிகாரவர்க்கக் கொள்ளையர்கள், இப் பகுதிவாழ் மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து அவர் களில் பலரைக் கொன்றொழித்தும் பலரை சொந்த மண் ணிலேயே அகதிகளாக்கியும் அரசு ஆதரவோடு அட்டூ ழியம் செய்து வரும் சல்வாஜூடும் குண்டர்படைகள் - என நாட்டின் பாதுகாப்புக்கே, மக்களின் பாதுகாப் புக்கே மிகப்பெரிய அபாயமாக நிற்கும் நாட்டுவிரோத -மக்கள்விரோத இச்சக்திகள் மீது எந்த அரசும் இன்று வரை எந்தத் தாக்குதலும் நடத்த முன்வரவில்லை. மாறாக, இப்பகுதிவாழ் மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து, அம்மண்ணையே சூறையாடிவரும் தனியார்மய-தாராயமயக் கொள்ளையை எதிர்த்து மக்க ளைத் திரட்டிப் போராடுபவர்கள்தான் தீவிரவாதிகளாக, பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்டு, அவர்களை ஒடுக்குவது என்ற பெயரில் இப்பகுதிகளில் உள் நாட்டுப் போர் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

ஆந்திரா, சட்டிஸ்கர், ஒரிசா ஆகிய மாநிலங்கள் சந்திக்கும் முக்கோணப் பகுதியில் நக்சல் ஒழிப்பு நட வடிக்கையில் ஈடுபட்டவரும், களநிலைமைகளில் அனு பவமிக்கவரும், இரு மாதங்களுக்கு முன்பு ஓய்வு பெற்ற எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) தலைமை இயக்குனருமான மகேந்திர குமாவத், ''இத்தகைய போரினால் நாட்டின் அப்பாவி ஏழை மக்கள் அநியாய மாகக் கொல்லப்படுவதும் இரத்த ஆறு ஓடுவதும்தான் நடக்கும். சொந்த நாட்டு மக்களின் மீதே இப்படியொரு போரை நடத்துவதால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. மாறாக, இப்பிரச்சினைகள் மேலும் தீவிரமா கவே செய்யும்'' என்று எச்சரிக்கிறார்.

ஆனாலும், எல்லா ஓட்டுக் கட்சிகளும் மைய அரசு தொடுக்கும் இந்தக் கொடிய உள்நாட்டுப் போருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு தெரிவிக்கின் றன. வலது கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளரான பரதன் மட்டுமே, மாவோயிஸ்டுகள் செயல்படும் பகுதி களில் ஆயுதப் படைகளைக் குவித்து தாக்குதல் நடத்து வதை எதிர்க்கிறார். அவரும் கூட, அந்தந்த மாநிலப் போலீசுப் படைகளைக் கொண்டு 'நக்சல் வன்முறை' யைத் தடுக்குமாறு உபதேசிக்கிறார்.




பிணைக் கைதியாகக் கடத்திச் செல்லப்பட்டு மாவோயிஸ்டுகளால் விடுதலை செய்யப்பட்ட போலீசு அதிகாரி அதிந்திரநாத் தத்தா.



அதிந்திரநாத் தத்தாவின் விடுதலைக்கு ஈடாகச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட அப்பாவி பழங்குடியினப் பெண்கள்.

போலீசார், எங்களது தட்டுமுட்டுச் சாமான்களைக்கூட நாசப்படுத்திவிட்டனர். எங்களிடம் சமைப்பதற்கு மண் பானை கூட இல்லை. மாவோயிஸ்டு தீவிரவா திகள் யார் என்று கேட்டு எங்களைச் சித்திரவதை செய் கிறார்கள். எங்களுக்கு அவர்கள் யாரென்றே தெரியாது என்று சொன்னதற்காக, போலீசார் எங்களை மானபங் கப்படுத்தி அடித்து இழுத்து வந்து, அவர்களைக் கொல்ல முயற்சித்ததாக வழக்கு போட்டுள்ளார்கள்'' என்று சிறை வாயிலில் குழுமியிருந்த செய்தியாளர் களிடம் கண்ணீர் மல்க குமுறினார், ஒரு பழங்குடி யினப் பெண். நக்சல்பாரி என்ற சொல்லைக் கேட் டாலே, மக்களுக்கு போலீசு அதிரடிப்படையின் கொடூர முகம் நினைவுக்கு வரவேண்டும் என்பதும், அவர்கள் அஞ்சி நடுங்கி நக்சல்பாரிகளை விட்டு ஒதுங்க வேண்டும் என்பதும்தான் இந்த நடவடிக்கை களின் நோக்கம். மே.வங்க போலி கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில், போலீசும் துணை இராணுவப் படை களும் நடத்திவரும் அரசு பயங்கரவாத அடக்குமுறைக் கும் அட்டூழியங்களுக்கும் இதைவிட வேறென்ன சாட்சியம் வேண்டும்?

●

வங்கத்திலிருந்து ஆந்திரா வரை இம்மாநிலங்களில் நடந்துவரும் மறுகாலனியாதிக்கச் சூறையாடலையும், பழங்குடியின மக்கள் அவர்களது சொந்த மண்ணிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்படுவதையும் எதிர்க்கும் எவரும் நக்சல்பாரிகள், தீவிரவாதிகள், அரசுக்கு எதிராகப் போர் தொடுப்பவர்கள், வன்முறையாளர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு ஒடுக்கப்படுகிறார்கள். இப்படித்தான், சட்டிஸ்கரில் மனித உரிமைப் போராளி டாக்டர் பினாயக் சென் சிறையிலடைக்கப்பட்டு வதைக்கப்பட்டார். அதாவது, ''நீ எங்களோடு இல்லையென்றால், நீ ஒரு பயங்கரவாதி!'' என்பதுதான் அரசின் வாதம். இதன்படியே, அரசின் பயங்கரவாதத்தை எதிர்த்து நக்சல்பாரிகளுக்கு தார்மீக ஆதரவளிப்போரைக் கூட மிரட்டும் நோக்கத்துடன் மருத்துவர்கள், கல்வியாளர்கள், மனித உரிமை இயக்கத்தினரின் பட்டியலைத் தயாரிக்கக் கிளம்பியுள்ளது, மைய அரசு.

இனி கம்யூனிஸ்ட், சோசலிஸ்ட் என்று பேசுவோரும், தோழர்களே என்று அழைப்போரும், செங்கொடி ஏந்துவோரும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்போரும் தீவிரவாதிகள், மாவோயிஸ்டு பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்படலாம். உள்நாட்டு-வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளின் சூறையாடலை எதிர்ப்போர் நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக நிற்கிறார்கள் என்று பயங்கரவாத ''ஊபா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்படலாம். எண்ணெய்க்காக ஈராக் மீது போர்தொடுத்து அந்நாட்டு மக்களைக் கொடூரமாக வதைத்து, ஆக்கிரமித்துள்ள அமெரிக்காவின் வழியில், இந்திய ஆட்சியாளர்கள் உள்நாட்டு - வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளின் சூறையாடலுக்காக உள்நாட்டு மக்கள் மீதே ஆயுதப் படைகளையும் அடக்குமுறையையும் ஏவி நாட்டை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கக் கிளம்பிவிட்டனர்.

இனி ஒளிந்து கொள்ளவோ, நடுநிலை வகிக்கவோ வாய்ப்பில்லை. மறுகாலனியாக்க உள்நாட்டுப் போரின் ஆணி வேராக உள்ள இன்றைய அரசியலமைப்பு முறையை வெட்டியெறியாதவரை, இந்தப் போர் நிற்கப் போவதுமில்லை.

ஆனால், மிக மூர்க்கமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இப்போருக்கு எதிராக நாட்டு மக்களை அணிதிரட்டிப் போராடும் மாபெரும் அரசியல் கடமையை மாவோயிஸ்டுகள் தொடர்ந்து புறக்கணிக்கிறார்கள். மக்களைப் புரட்சிக்கு அணியமாக்குவதும் தலைமை தாங்குவதும்தான் கம்யூனிஸ்டுகளுக்குரிய பணியே அன்றி, மக்களின் சார்பாக புரட்சி செய்வதல்ல. புரட்சி என்பது ஆளும் வர்க்கங்களுடன் புரட்சியாளர்கள் 'ஒண்டிக்கு ஒண்டி' நடத்தும் சண்டையுமல்ல. ஆனால், மக்களுக்குத் தாங்களே 'விடுதலையை வழங்கப் பொறுப்பேற்றிருக்கும்' இடது சாகசவாதிகளான மாவோயிஸ்டுகள் இப்படித்தான் கருதிக் கொள்கிறார்கள். அவர்களுடைய சுத்த இராணுவவாதக் கண்ணோட்டம், மக்களின் அரசியல் முன்முயற்சியைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் பிற தனியார்மய - தாராளமய நடவடிக்கைகளுக்கு எதிராக நாடெங்கும் தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், மறுகாலனிய எதிர்ப்பு என்ற அரசியல் கண்ணோட்டமோ, இந்த அரசியலமைப்பைத் தூக்கியெறிய வேண்டுமென்ற இலட்சியமோ அத்தகைய போராட்டங்களுக்கு இல்லை. அத்தகைய அரசியல் முழக்கங்களை முன்வைத்து மக்களைத் திரட்டுவதுதான் கம்யூனிஸ்டுகளின் கடமை. புரட்சிக்கு மக்களை அணிதிரட்டுவது என்பதன் பொருள் இதுதான். இப்படிப்பட்ட புரிதலோ, இவ்வாறு புரட்சிக்கு மக்களை அணிதிரட்ட முடியும் என்ற நம்பிக்கையோ மாவோயிஸ்டுகளிடம் இல்லை. அரசுக்குத் 'தொந்திரவு' தரும் தமது இராணுவ சாகச நடவடிக்கைகளின் மூலம், மக்கள் விழிப்புற்று புரட்சிக்கு அணிதிரண்டு விடுவார்கள் என்று மாவோயிஸ்டுகள் இன்னமும் குருட்டுத்தனமாக நம்புகிறார்கள்.

சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு எதிராகப் போராடும் சட்டிஸ்கர் பழங்குடியின மக்கள்.



அரசியல் போராட்டத்தின் முதிர்ந்த வடிவம்தான் ஆயுதப் போராட்டம் என்பதையும், அரசியல் போராட்ட அனுபவத்தினூடாக ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை மக்கள் உணரச் செய்ய வேண்டும் என்பதையும் அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். அவர்களது இராணுவ சாகசவாத நடவடிக்கைகள் அனைத்தும், ஆளும் வர்க்கங்கள் தம்மை தேசத்தைப் பாதுகாக்கும் நாயகனாகக் காட்டிக் கொள்ளவும், தமது பயங்கரவாத நடவடிக்கைகளை நியாயப்படுத்திக் கொள்ளவும், புரட்சியாளர்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தித் தாக்கவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. மிகப் பெரிய உள்நாட்டுப் போர் நாட்டு மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள சூழலில், அதற்கெதிராக அனைத்துப் புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரண்டு போராட வேண்டிய நிலையில், மாவோயிஸ்டுகளின் நடவடிக்கைகள் புரட்சிக்கு பெரும் பின்னடைவைத்தான் ஏற்படுத்தி வருகின்றன.

● பாலன்

# கோவா குண்டு வெடிப்பும் "இந்துக்களின்" கள்ள மௌனமும்

தீபாவளிக்கு முதல் நாள் - அக்டோபர் 16 அன்று கோவா மாநிலத்திலுள்ள முக்கியமான வர்த்தக நகரான மார்காவோவின் மையப் பகுதியில் இரு சக்கர வாகன மொன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது. இக்குண்டு வெடிப்புக்குக் காரணமான சதிகாரர்கள் யார் என்பது இந்நேரம் தெரியாமல் போயிருந்தால், முசுலீம் தீவிரவாதிகளைக் குற்றஞ்சுமத்தி போலீசும், தேசியப் பத்திரிகைகளும் 'புலனாய்வு' நடத்தியிருப்பார்கள். கோவா சுற்றுலா மையம் என்பதால், இந்தியாவின் வளர்ச்சியை விரும்பாத பாகிஸ்தானின் சதி இது என மைய அரசும் சாமியாடியிருக்கும்.

எனினும், இக்குண்டு வெடிப்பு சம்பவத்தில் ''விதி'' வேறு மாதிரி விளையாடிவிட்டது. அந்தக் குண்டு திடீரென வெடித்துவிட்டதால், அந்தக் குண்டைத் தமது இரு சக்கர வாகனத்தில் வைத்துக் கடத்தி வந்த மால்குண்டா பாட்டீல், யோகேஷ் நாயக் என்ற இரு இளைஞர்களும் சம்பவம் நடந்த இடத்திலேயே படுகாயமடைந்து போலீசிடம் மாட்டிக் கொண்டனர். அந்த இரு இளைஞர்களும் சிகிச்சைப் பலனின்றி இறந்து போய் விட்டாலும், அவர்கள் இருவரும் ''சனாதன் சன்ஸ்தா'' என்ற இந்து மத அடிப்படைவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகியிருக்கிறது.

அந்த இளைஞர்கள் எதற்காகக் குண்டு வைக்க வந்தார்கள் என்பது குறித்துப் பல ஊகங்கள் கூறப்படுகின்றன. எனினும், இந்தக் குண்டு வெடிப்புகளுக்குக் காரணமான குற்றவாளிகள் சனாதன் சன்ஸ்தா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது நிரூபணமாகியிருப்பதால், வேறு வழியின்றி அவ்வமைப்பின் ஆசிரமத்தைச் சோதனையிட்டுள்ள கோவா மற்றும் மகாராஷ்டிர மாநில போலீசார், அங்கு குண்டு தயாரிக்கத் தேவைப்படும் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். சனாதன் சன்ஸ்தா, ஆசிரமம் என்ற பெயரில் குண்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தி வந்திருப்பது இதன் மூலம் அம்பலமாகியுள்ளது. மேலும், இச்சோதனையின்பொழுது, இக்கும்பல் கோவாவின் சங்கோலே நெடுஞ்சாலை வழியாக வெடிகுண்டுகளைக் கடத்திச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டு, அக்குண்டுகள் வெடிப்பதற்கு முன்னதாகவே போலீசாரால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன.

சனாதன் சன்ஸ்தா கோவாவை மையமாகக் கொண்டு இயங்கி வருவதோடு, மகாராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு மாநில நகரங்களிலும், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் அதற்குக் கிளைகள் இருக்கின்றன; முசுலீம் வெறுப்பைக் கக்குவதற்காக தர்மசக்தி சேனா, இந்து ஜன ஜாக்ருதி சமிதி போன்ற சகோதர அமைப்புகளையும் நடத்தி வருகிறது. அறிவியல் அடிப்படையில் இந்து மதக் கருத்துக்களைப் போதிப்பதாக இந்த அமைப்பு கூறிவரும் பொய்யைப் பாமர மக்களைப் போலவே, புலனாய்வுப் போலீசும் இக்குண்டுவெடிப்பு நடைபெறும் வரை நம்பி வந்ததாகக் கூறப்படுவதுதான் நமக்கு ஆச்சரியமாக உள்ளது.

ஏனென்றால், கோவாவிற்கு அருகிலுள்ள மகாராஷ்டிரா மாநிலத்தில் நடந்த சில குண்டு வெடிப்புகளிலும், சில முசுலீம் எதிர்ப்புக் கலவரங்களிலும் சனாதன் சன்ஸ்தா அமைப்பிற்குப் பங்கு இருப்பது ஏற்கெனவே அம்பலமாகியுள்ளது. மகாராஷ்டிராவின் தானே நகரில் நடந்த ஒரு குண்டு வெடிப்புக்குப் பின், அம்மாநிலத்தின் தீவிரவாத எதிர்ப்புப் படைப் பிரிவின் தலைவராக இருந்தவரும், கடந்த ஆண்டு முசுலீம் தீவீரவாதிகள் மும்பய் நகரைத் தாக்கியபொழுது, அவர்களுடன் நடந்த மோதலில் கொல்லப்பட்டவருமான ஹேமந்த் கர்காரே சனாதன் சன்ஸ்தா அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என கடந்த ஜூன் 2008-லேயே அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்.

கடந்த செப்டம்பர் மாதம் மகாராஷ்டிராவிலுள்ள மிரஜ் நகரில் முசுலீம் எதிர்ப்புக் கலவரம் நடந்தது.

கோவா மாநில மார்காவோ நகரில் குண்டு வெடித்த இடத்தில் சிதைந்து போய்விட்ட ஸ்கூட்டர்: இந்துமத பயங்கரவாத அட்டூழியம்.



முசுலீம்கள் மீது வெறுப்பை உமிழும் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு, அவற்றை மிரஜ் எங்கும் விநியோகித்ததோடு, கடைகளை மூடச் சொல்லி ஒரு கும்பல் மிரட்டியதுதான் அக்கலவரத்தின் துவக்கப் புள்ளியாக அமைந்தது. அக்கலவரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்கள் சனாதன் சன்ஸ்தா அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை கோவா குண்டு வெடிப்புக்குப் பின் முதலாளித்துவப் பத்திரிகைகள்கூட ஆதாரங்களோடு அம்பலப்படுத்திச் செய்திகளை வெளியிட்டுள்ளன. குறிப்பாக, கோவா குண்டு வெடிப்பில் இறந்து போன மால்குண்டா பாட்டீல் மிரஜிலும், மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள மற்றொரு நகரான சங்கிலியிலும் முசுலீம் எதிர்ப்புக் கலவரங்கள் நடந்தபோது, அந்நகரங்களில் தங்கியிருந்ததற்கான ஆதாரங்கள் இருப்பதாக போலீசார் இப்பொழுது தெரிவித்துள்ளனர்.

மகாராஷ்டிராவைச் சேர்ந்த சந்தோஷ் பவார் என்றொரு நாடக இயக்குநர், மகாபாரதக் கதையை நவீன காலத்துக்கு ஏற்ப, ஒரு பீடா கடையை சொந்தமாக்கிக் கொள்ள இரண்டு நடுத்தர வர்க்கத்து குடும்பங்கள் போடும் சண்டையாக மாற்றி, ''ஆம்ஹி பச்புடே'' என்ற பெயரில் நாடகமாக உருவாக்கியிருந்தார். இந்த நாடகத்தை நடத்தக் கூடாது என இந்து மதவெறி அமைப்புகள் அந்த இயக்குநரை மிரட்டி வந்தன. இதனையும் மீறி அந்நாடகம் மகாராஷ்டிராவின் தானேயிலும், வாஷியிலும் நடைபெற இருந்த சமயத்தில், அந்நாடகம் நடக்கவிருந்த இரண்டு அரங்குகளிலும் குண்டுகள் வெடித்தன. இது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நால்வரும் சனாதன் சன்ஸ்தாவின் சகோதர அமைப்பான இந்து ஜன ஜாக்ருதி சமிதியைச் சேர்ந்தவர்கள் என்பதும், இவர்கள் குண்டு வைப்பதற்கான சகல வசதிகளையும் சனாதன் சன்ஸ்தா அமைப்புதான் ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது என்பதும் ஏற்கெனவே மகாராஷ்டிரா போலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



சனாதன் சன்ஸ்தா, மகாராஷ்டிராவின் மிரஜ் நகரில் நடத்திய முசுலீம் எதிர்ப்புக் கலவரம். (கோப்புப் படம்).

இக்குண்டு வெடிப்புகளுக்கு முன்னதாக, பென் நகர நெடுஞ்சாலையில் உள்ள ஒரு மசூதியைக் குண்டு வைத்துத் தகர்க்க முயன்ற வழக்கிலும் இந்த நால்வருக்கும் தொடர்புண்டு என்பதும்; மகாராஷ்டிராவின் ரத்னகிரி பகுதியைச் சேர்ந்த ஒரு 'இந்து'க் குடும்பம் கிறித்தவ மதத்திற்கு மாறியதற்காக, அவர்களது வீட்டில் குண்டு வைத்த வழக்கில் இந்த நான்கு இந்து பயங்கரவாதிகளுள் ஒருவனான மங்கேஷ் நிகம் என்பவனுக்குத் தொடர்பிருப்பதும் தெரிய வந்திருக்கிறது.


இக்கும்பல், பென் நெடுஞ்சாலைப் பகுதியில் உள்ள ஒரு ஆற்றங்கரையிலும், சதாரா நகரிலும் ஜெலட்டின் குச்சிகள், குண்டுகளை வெடிக்கச் செய்வதற்குத் தேவையான மின்னணுச் சாதனங்களைப் பதுக்கி வைத்திருந்தும் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், செப்டம்பர் 2008-இல் மகாராஷ்டிராவின் மாலேகான் நகரில் மசூதிக்கு அருகே ஆர்.டி.எக்ஸ். இரகக் குண்டுகளை வெடிக்கச் செய்த பெண் துறவி பிரக்யா சிங்கிற்கும், சனாதன் சன்ஸ்தா அமைப்பிற்கும் இடையே ஏதாவது தொடர்பிருக்கிறதா என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முசுலீம் தீவிரவாத அமைப்புகள் குண்டு வெடிப்பு நடத்தியிருக்கலாம் எனச் சந்தேகப்பட்டாலே, குண்டு வெடிப்பு நடந்த பகுதியில் வாழும் ஏழை முசுலீம்களை போலீசு நிலையத்திற்கு இழுத்துப் போய், சட்டவிரோதக் காவலில் வைத்து விசாரிப்பதையும்; போதிய ஆதாரம் இல்லையென்றால் கூட, அது பற்றியெல்லாம் கவலைப்படாமல் அப்பாவி முசுலீம் இளைஞர்கள் மீது பல்வேறு கருப்புச் சட்டங்களின் கீழ் வழக்குப் போடுவதையும் எவ்விதத் தயக்கமுமின்றிச் செய்து வரும் அரசும் போலீசும், இக்குண்டு வெடிப்பு விவகாரத்தில் மிகவும் மென்மையாகவே நடந்து வருகின்றன.

சனாதன் சன்ஸ்தா பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைத்த பிறகும், அந்த அமைப்பைத் தடை செய்வதற்குப் போலீசும் அரசும் தயாராக இல்லை. சனாதன் சன்ஸ்தா அமைப்பு, தனக்குத் தேவையான வெடி மருந்துப் பொருட்களை மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்துதான் கடத்தி வந்திருக்கிறது. ஆர்.எஸ்.எஸ்.-இன் சகோதர அமைப்பான பஜ்ரங் தள் மகாராஷ்டிராவிலுள்ள நாண்டேட் நகரில் நடத்திய குண்டு வெடிப்பு தொடர்பாக புலன் விசாரணை நடந்து வருகிறது.

இதன் பின்னணியில் ஆர்.எஸ்.எஸ்.-க்கும் சனாதன் சன்ஸ்தாவுக்கும் இடையிலான உறவு பற்றி விசாரணை நடத்துவது குறித்து போலீசு அதிகாரிகள் பேசவே மறுக்கிறார்கள். மார்காவோ குண்டு வெடிப்பில் இறந்து போன இரண்டு இந்து தீவிரவாதிகளின் மீது வழக்கு போட்டுள்ள போலீசார், அவ்வமைப்பைச் சேர்ந்த மற்ற நிர்வாகிகள் மீது இதுவரை ஒரு பெட்டி கேசைக்கூடப் பதியவில்லை.

இதுவொருபுறமிருக்க, கோவாவை ஆளும் காங்கிரசு கூட்டணி அரசில் போக்குவரத்து அமைச்சராக இருக்கும் மகாராஷ்டிரவாதி கோமந்தக் கட்சியைச் சேர்ந்த சுதின் தவாலிகர் குடும்பத்திற்கும் சனாதன் சன்ஸ்தா அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருவதும் தற்பொழுது நிரூபணமாகியிருக்கிறது. சுதின் தவாலிகரின் மனைவி ஜோதி தவாலிகர் சனாதன் சன்ஸ்தா அமைப்பின் கணக்கு வழக்குகளைப் பார்க்கும் பொறுப்பில் இருந்து வருவதை, அமைச்சரே இக்குண்டு வெடிப்புக்குப் பின் ஒப்புக் கொண்டுள்ளார். ஜோதி, நாடெங்கும் குண்டு வைப்பதற்கு ஆன செலவைத் தணிக்கை செய்து வந்தாரா, இல்லை ஆன்மீக அன்பர்கள் கொடுக்கும் காணிக்கைகளை எண்ணிக் கொண்டிருந்தாரா என்பதை போலீசார்தான் சொல்ல வேண்டும்.




மதச்சார்பின்மை பேசி வரும் காங்கிரசோ, சுதின் தவாலிகரைப் பதவி விலகும்படிக் கூற மறுத்து வருகிறது. அமைச்சரோ, சனாதன் சன்ஸ்தா அமைப்பின் பயங்கரவாத நடவடிக்கைகள் அம்பலமான பிறகும், அவ்வமைப்பு இந்து மதத்திற்காகவும், தேசிய கவுரவத்திற்காகவும் செயல்பட்டு வருவதாக நற்சான்றிதழ் அளித்துள்ளார். எனவே, போலீசார் நடத்தும் விசாரணை, பூனையை மடியில் கட்டிக் கொண்டு சகுனம் பார்த்த கதையாக முடிந்து விடவும் வாய்ப்புண்டு.

முசுலீம் தீவிரவாத அமைப்புகள் பல்வேறு பெயர்களில் இயங்கி வருவதைப் போலவே, இந்து மதவெறி அமைப்புகளும் யோகா கற்றுக் கொடுக்கிறேன், மூச்சுப் பயிற்சி சொல்லிக் கொடுக்கிறேன் என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு, பல்வேறு பெயர்களில் இயங்கிக் கொண்டு, ஆர்.எஸ்.எஸ்.க்கு ஆள்பிடிக்கும் வேலையைச் செய்து வருகின்றன. ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட இந்து மதவெறி அமைப்புகள் முசுலீம் எதிர்ப்புக் கலவரங்களைத் தூண்டிவிட்டு நடத்தி, கும்பல் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவது மட்டுமின்றி, குண்டு வைத்துக் கொல்வது போன்ற பயங்கரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன என்பதும் நிரூபணமாகி வருகிறது. குண்டு வைத்துப் பொதுமக்களைக் கொல்லும் முசுலீம் தீவிரவாதிகளைக் கருணையின்றித் தண்டிக்கக் கோரும் ''இந்து'' நடுத்தர வர்க்கம், குண்டு வைப்பது உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்து மதவெறி பயங்கரவாதிகளையும் இரக்கமின்றித் தண்டிக்கக் கோர வேண்டும். அத்தகைய நடுநிலையான போராட்டங்கள் மூலம் மட்டும்தான், ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல இருக்கும் இந்து-முசுலீம் தீவிரவாதத்தை ஒழித்துக் கட்ட முடியும்.

● செல்வம்

---

**தலையங்கம் தொடர்ச்சி**

பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பட்டா போட்டுக் கொடுத்ததில் நடந்த முறைகேடுகள் காரணமாகத்தான் அவரது சொத்து மதிப்பு 1000 மடங்கு அதிகரித்திருக்கிறது. இந்த இலஞ்சப் பணத்தைக் கொண்டு, அவர் வெளிநாடுகளில் செய்துள்ள முதலீடுகள் குறித்து இப்பொழுது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்திய அரசுக்குச் சொந்தமான ஹைட்ரோகார்பன் இயக்குநரகத்தின் தலைவரான வீ.கே.சிபலின் மகளுக்கு, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவரான முகேஷ் அம்பானி மும்பய் நகரில் மிக நவீனமான வீடொன்றை வாங்கிக் கொடுத்திருக்கிறார். கோதாவரி படுகையில் கிடைக்கும் எரிவாயுவைப் பகிர்ந்து கொள்வதில் அம்பானி சகோதரர்களுக்கு இடையே நடந்து வரும் தகராறில், முகேஷ் அம்பானிக்கு சாதகமாக வீ.கே.சிபல் நடந்து வருவதற்காகக் கொடுக்கப்பட்ட சிறு அன்பளிப்புதான் இந்த வீடு. இந்த அன்பளிப்பு பற்றி இப்பொழுது மையப் புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது.

தனித்தனியாகத் தெரியும் இந்த மூன்று ஊழல்களுக்கும் இடையே இருக்கும் பொதுவான அம்சம் தனியார்மயம். தனியார்மயத்தின் பின், பொதுச் சொத்துக்களை விற்பதற்கு எடுக்கப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஊழலும் மோசடிகளும் நடந்திருப்பதற்குப் பல ஆதாரங்கள் கொட்டிக் கிடக்கின்றன. இந்த மோசடிகள் மூலம் கிடைத்த எலும்புத் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்ட அதிகாரிகளும், ஓட்டுக்கட்சிகளும் அம்பலமான அளவிற்கு, கறித்துண்டு முழுவதையும் விழுங்கி ஏப்பம் விட்ட தரகு முதலாளிகள், பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி அடக்கியே வாசிக்கப்படுகின்றன. எனவே, ஊழலை ஒழிக்க வேண்டும் என்றால், அதிகாரிகளையும் அமைச்சர்களையும் தண்டிக்கக் கோரினால் மட்டும் போதாது; ஊழலின் ஊற்றுக் கண்ணாக இருக்கும் தனியார்மயத்தையும் ஒழிப்பதற்குப் போராட வேண்டும். ●

## தமிழக எம்.பி.க்களின் ஈழச் சுற்றுலா:

# துரோகிகளுக்குப் புரியுமா மக்களின் அவலம்?

**ராஜபக்சேவிற்கு நற்சான்றிதழ் வழங்குவதே, தமிழக எம்.பி.க்களின் ஈழப் பயணத்தின் நோக்கம்.**

ஈழப் போருக்குப் பின், முகாம்களில் வதைபடும் ஈழத்தமிழ் மக்களின் நிலைமையை அறியும்முகமாக ஐந்து நாட்கள் பயணமாக தமிழக எம்.பி.க்கள் கடந்த மாதத்தில் இலங்கைக்குச் சென்று வந்துள்ளனர். மேள தாள வரவேற்பு, மாலை மரியாதைகள், ஆடல்-பாடல்கள் எனத் திருமண விழாவுக்கு வருபவர்களைப் போல, தமிழக தூதுக் குழுவினருக்கு ராஜமரியாதை கொடுத்து அழைத்தது, சிங்கள அரசு. அவலத்தின் நடுவே இத்தகைய ஆடம்பர வரவேற்பு எதற்காக என்று கேட்டு, தமிழக எம்.பி.க்கள் அதனைத் தவிர்க்கவில்லை. மாறாக, புன்முறுவல் பூத்தபடியே சிங்கள அதிகாரிகளின் விரல் பிடித்து நடந்தார்கள்.

ஈழத்திலுள்ள நலன்புரி மையங்களை - அதாவது, வதைமுகாம்களைப் பார்வையிட்டு, மக்களின் அவலங்களை நேரில் கண்டுணர்ந்து, அந்த அவலங்களைப் போக்க ஏதாவது செய்வார்கள் என்று ஈழத்தமிழ் மக்கள் பெரிதும் எதிர்பார்த்தார்கள். ஆனால், ஈழத்துக்குச் சுற்றுலா சென்று வந்ததைப் போலவே தமிழகத்தின் பத்து எம்.பி.க்களின் பயணம் அமைந்தது.

யாழ் பொது நூலகத்தில் நடந்த கலந்துரையாடலில் கருத்துக் கூறியவர்களை அதட்டி உட்கார வைத்தும், முகாம்களில் வதைபடும் மக்களின் அவலத்தைப் பற்றிப் பேசுவதைத் திசைதிருப்பியும், நேரமில்லை என்று தட்டிக் கழித்தும் தூதுக்குழுவின் தலைவரான டி.ஆர்.பாலு சிடுமூஞ்சித்தனமாக நடந்து கொண்டார். இதை, ''இலங்கைக்கு முன்பு அனுமன் வந்தான். இப்போது டி.ஆர்.பாலு என்ற சனீஸ்வரன் வந்துள்ளான்'' என்று வலம்புரி நாளேடு தலையங்கம் தீட்டி கடுமையாகச் சாடியுள்ளது. சுருக்கமாகச் சொன்னால், இந்தியக் குழுவினரின் யாழ் வருகை ஈழத்தமிழ் மக்களுக்கு எந்தவிதத்திலும் நம்பிக்கையூட்டவில்லை.

இலங்கையின் எதிர்க்கட்சிகளையோ, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையோ, இலங்கை அல்லது வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையோ இந்த நலன்புரி முகாம்களைப் பார்வையிட இன்றுவரை அனுமதிக்காத பாசிச ராஜபக்சே அரசு, தமிழகத்திலிருந்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை ராஜமரியாதையுடன் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்று, உபசரித்து விருந்தளித்துப் பரிசுகளும் தந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட சில முகாம்களை மட்டும் பார்வையிட அனுமதிக்கக் காரணம் என்ன?

முகாம்களில் நடக்கும் கொடுமையும் மக்களின் அவலமும் ஊடகங்களில் தொடர்ந்து அம்பலமாகி வருவதால், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய உலகம், இலங்கையைத் தனது மேலாதிக்கத்தின் கீழ் இருத்தி வைக்க, மனித உரிமையைச் சாக்காக வைத்து, ''முகாம்களில் வதைபடும் மக்களை உடனடியாக விடுவிக்காவிட்டால், இலங்கைக்கு அளிக்கப்படும் பொருளாதார உதவிகள் நிறுத்தப்படும்'' என்று எச்சரிப்பது போல பாசாங்கு செய்கின்றது. இந்நிலையில், ஈழத்தமிழ் மக்கள் முகாம்களிலிருந்து அவர்களின் வாழ்விடங்களுக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும், தமிழக தூதுக் குழுவின் வருகையைக் காட்டியும், அவர்கள் சாதகமாக அறிக்கை வெளியிட்டுள்ளதைக் காட்டியும், ராஜபக்சே அரசு உலக நாடுகளை நம்பவைக்க முயற்சிக்கிறது. அந்த நோக்கத்தை ஈடேற்றும் வகையில்தான் நாடாளுமன்றக் குழுவின் செயல்பாடுகளும் இருந்தன. ''தமிழக எம்.பி.க்களின் வருகையின் மூலம் தவறான பிரச்சாரங்கள் குறித்து உலகம் தெளிவடைய முடியும்'' என்று ராஜபக்சே கூறியிருப்பதே, இந்தியத் தூதுக்குழு எதற்காக அனுப்பப்பட்டது என்ற உண்மையைப் போட்டு உடைத்து விட்டது.



ஈழத்தமிழ் மக்களைக் குண்டு போட்டுக் கொன்றொழித்ததைக் களிப்போடு தூதுக் குழுவினரிடம் விளக்குகிறாரோ ராஜபக்சே?

இக்குழுவினர் பார்வையிட்ட இடங்களில் ஈழத்தமிழ் மக்கள் எவ்வாறு தமது குமுறல்களைக் கொட்டியழுதார்கள் என்பதை இலங்கையிலிருந்து வெளிவரும் வீரகேசரி, உதயன், வலம்புரி ஆகிய நாளேடுகள் வேதனையுடன் குறிப்பிட்டுள்ளன. ஆனாலும், இக்குழுவில் பங்கேற்ற காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பன் வீரகேசரி நாளேட்டுக்கு அளித்த பேட்டியில், ''சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டே இலங்கையில் அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு மக்களின் பாதுகாப்புக்காகவே முட்கம்பி வேலி போடப்பட்டுள்ளது'' என்று கூறியிருக்கிறார். மற்றொரு காங்கிரசு உறுப்பினரான ஜே.எம்.ஆருண், ''இந்திய ஊடகங்களில் தெரிவிப்பதைப் போன்று இடம் பெயர்ந்த மக்கள் அவலங்களை எதிர்நோக்கவில்லை'' என்று ராஜபக்சேவின் குரலையே எதிரொலித்துள்ளார்.



இலங்கைக்குச் சென்ற கடனுக்காக, முள்வேலி முகாமுக்குள் அடைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களின் வேதனைகளைக் கேட்கும் திருமாவளவன்.

ஏற்கெனவே 22.9.09 அன்று செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி, ''இலங்கையில் தமிழர்களின் மறுவாழ்வு தொடர்பான நடவடிக்கைகள் குறித்து வெளிவரும் தகவல்கள் நமக்குத் திருப்தியை அளிக்கின்றன'' என்றார். பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கை சென்று வந்த பிறகு, முகாம்களில் உள்ள மக்களின் துன்பங்கள் குறித்தும், அவர்களை மறுகுடியமர்த்துவது குறித்தும் அதிபர் ராஜபக்சேவிடம் இக்குழுவினர் கூறியதாகவும், முகாம்களிலுள்ள மக்களை அவரவர் ஊர்களுக்கு இரு வார காலத்திற்குள் தமது அரசு அனுப்பும் என்று அவர் உறுதியளித்ததாகவும் அறிக்கை வெளியிடப்பட்டது. தற்போது, முகாம்களில் வதைபடும் மக்களில் ஒரு பகுதியினரை அவரவர் ஊர்களுக்கு அனுப்புவதும் நடந்துள்ளது. அவர்கள் தமது சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டார்களா, அல்லது வேறு வதைமுகாம்களுக்கு அனுப்பப்பட்டார்களா என்று தெரியாது. மொத்தத்தில் போர்க்குற்றவாளியான பாசிச ராஜபக்சேவுக்குச் சாதகமான அறிக்கை அளிப்பதற்காகவே இந்தக் குழு இலங்கைக்குச் சென்று வந்துள்ளது. இதை இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சரான ரோஹித் பொகல்லகமா, ''ராஜபக்சே மீதான இந்தியாவின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழகக் குழுவின் வருகை அமைந்துள்ளது'' என்று பெருமையுடன் கூறியுள்ளார்.

தேர்தலுக்கு முன்பு, ''காங்கிரசுக் கட்சியை இருக்கும் இடமே தெரியாமல் அழிக்க வேண்டும்'' என்று சவடால் அடித்து, போர் நிறுத்தம் கோரி உண்ணாவிரத நாடகமாடிய திருமாவளவன், இப்போது நாற்காலி பதவிக்காக காங்கிரசு கூட்டணியுடன் முரண்பட விரும்பாமல், இக்குழுவில் பங்கேற்று இலங்கைக்குச் சென்று வந்துள்ளார். ''நல்ல பிள்ளையாகப் போய்விட்டுத் திரும்ப வேண்டும்'' என்று கருணாநிதியே அவருக்கு அன்புக் கட்டளை போட்டிருந்தார். எனவே, இந்த நாடகம் பற்றி அவர் அறிந்தேதான் தூதுக்குழுவில் பங்கேற்றார். திருமாவளவனைச் சுட்டிக் காட்டி, ''இவர் பிரபாகரனின் நண்பர்; இவரின் நல்லகாலம் இவர் பிரபாகரனுடன் இருக்கவில்லை; இருந்திருந்தால் இவரையும் போட்டுத் தள்ளியிருப்போம்'' என்று எகத்தாளமாக ராஜபக்சே கிண்டலடிக்க, வேறுவழியின்றி திருமாவும் அதை அசட்டுச் சிரிப்புடன் ஏற்றுக் கொண்டு வந்துள்ளார்.

இத்தூதுக் குழுவின் சார்பில் ராஜபக்சேவுக்குச் சாதகமான அறிக்கை வெளியிட்டு அமைதி காத்ததை எதிர்த்து விமர்சனங்கள் பெருகத் தொடங்கியதும் அவர், ''தமிழகத்தில் இலங்கைத் தூதரகம் இருக்கக் கூடாது'' என்று அவசரமாக ஆர்ப்பாட்டம் நடத்தினார். முகாம்களில் வதைபடும் ஈழத்தமிழ் மக்களின் அவலம் பற்றியும், ராஜபக்சேவைச் சாடியும் ஊடகங்களுக்கு நேர்காணல் அளித்துக் கொண்டிருக்கிறார். புலம்பெயர்ந்த தமிழர்கள் திருமா மீது வைத்திருந்த அரைகுறை நம்பிக்கையையும் அவரது இப்போதைய இரட்டை நாடகம் அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

ஈழத் தமிழரின் குலையறுக்கும் கொடிய போரை நடத்திய சூத்திரதாரியான இந்திய மேலாதிக்க அரசு, இப்போது போருக்குப் பின்னரும் ஈழத் தமிழ் மக்களை வதைத்துக் கொண்டிருக்கும் ராஜபக்சே அரசுக்கு ஜனநாயக சாயம் பூசும் வேலையாகவே தமிழக எம்.பி.க்களின் தூதுக்குழுவை அனுப்பியுள்ளது. அதற்கு விசுவாசமாகச் சேவை செய்துள்ளனர் துரோகிகளான இந்தத் தூதுக்குழுவினர். தொடரும் இத்தகைய துரோகங்களையும் இந்திய மேலாதிக்கத்தையும் எதிர்த்து முறியடிக்காவிட்டால், இனி தமிழன் சூடு-சொரணையற்றவன் என்ற தீராப்பழிதான் நம்மீது சுமத்தப்படும்.

● குமார்

## இந்தியா-ஏசியன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்:

# விவசாயிகளுக்குப் பேரிடி!

**இந்திய மென்பொருள் நிறுவனங்களின் இலாபத்திற்காக, தோட்டப்பயிர் விவசாயம் பலிகிடா ஆக்கப்பட்டுள்ளது.**

**தா**ராளமயம்-உலகமயப் பொருளாதாரக் கொள்கைகளை அமலாக்குவதில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அரசனை (அமெரிக்காவை) விஞ்சிய விசுவாசியாக இருக்கிறார். இதற்கு சமீபத்திய உதாரணமாக இந்திய அரசிற்கும் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்புக்கும் (ஏசியன் - Association of Southeast Asian Nations) இடையே கையெழுத்தாகியுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைக் குறிப்பிடலாம்.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகப் பேச்சுவார்த்தை என்ற அளவில் இருந்துவந்த இந்த ஒப்பந்தம், இந்தியாவின் 63-ஆவது 'சுதந்திர' தினத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாக முடிவு செய்யப்பட்டு, கையெழுத்தாகி, அடுத்த ஆண்டு ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரவிருக்கிறது. வழமை போலவே, இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பிறகுதான், இந்த ஒப்பந்தம் குறித்த விவரங்கள், இந்திய மக்களுக்கு மட்டுமல்ல, 'இறையாண்மை' மிக்க இந்திய நாடாளுமன்றத்திற்கும் தெரிய வந்தது.

இந்தியாவிற்கும், தென்கிழக்காசிய கூட்டமைப்பிலுள்ள நாடுகளுக்கும் இடையே நடந்து வரும் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம் 2019-ஆம் ஆண்டில் இரண்டு தரப்பிலும் எவ்விதமான சுங்க வரியோ, வேறு தடைகளோ இன்றி நடைபெறத் தொடங்க வேண்டும் என்பதுதான் இந்த ஒப்பந்தத்தின் நோக்கம். இந்த இலக்கினை அடைவதற்காக இந்த ஒப்பந்தம், இந்தியா-ஏசியன் நாடுகளுக்கு இடையே ஏற்றுமதி-இறக்குமதி மூலம் வர்த்தகப் பரிமாற்றம் செய்து கொள்ளப்படும் பொருட்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறது.

இந்த நான்கில் எதிர்மறைப் பட்டியல் என்ற பிரிவில் 489 உற்பத்திப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த 489 பொருட்களின் இறக்குமதிக்கு இந்தியா எவ்வித சுங்க வரிச் சலுகையும் அளிக்காது. இந்தப் பொருட்களின் இறக்குமதியின் மீது இன்று (இந்தியாவில்) எந்த அளவில் சுங்க வரி விதிக்கப்படுகிறதோ, அதே அளவில்தான் 2019-லும் சுங்க வரி விதிக்கப்படும். இந்த 489 பொருட்களில் 303 பொருட்கள் விவசாய உற்பத்திப் பொருட்கள்; 81 பொருட்கள் ஜவுளித் துறையையும், 50 பொருட்கள் தானியங்கி வாகனத் தொழிலையும், 17 பொருட்கள் இரசாயனத் தொழிலையும் சார்ந்தவை. இந்த எதிர்மறைப் பட்டியலைத் தவிர்த்து மீதமுள்ள மூன்று பட்டியல்களின் கீழ் வரும் 10,885 பொருட்களின் மீதான சுங்க வரி படிப்படியாகக் குறைக்கப்பட்டு 2019-இல் பூஜ்யமாக்கப்படும்; அல்லது மிகக் குறைவான அளவே வரி விதிக்கப்படும்.

தேயிலை, மிளகு, இரப்பர் உள்ளிட்ட பல்வேறு தோட்டப் பயிர்கள் உற்பத்தியிலும் மற்றும் ஜவுளி, தானியங்கி வாகனம், இரசாயனப் பொருட்கள் உற்பத்தியிலும் இந்தியாவைவிட ஏசியன் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகள் மிகுந்த திறன் கொண்டவையாக உள்ளன. அதனால்தான், இந்த ஒப்பந்தத்தில் எதிர்மறைப் பட்டியல் என்ற பிரிவு உருவாக்கப்பட்டு, அதில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளைச் சேர்ந்த 489 பொருட்கள் வைக்கப்பட்டு, அவற்றிற்கு வரி விலக்குப் பெற முடியாத வண்ணம் பாதுகாப்பு தரப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கும் பிரிவினரை, குறிப்பாக தோட்டப் பயிர்ப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள், இலகு ரக தொழில்துறை பொருட்களைத் தயாரிக்கும் சிறு முதலாளிகள் ஆகியோரைச் சமாதானப் படுத்திவிட முயலுகிறது, காங்கிரசு கூட்டணி அரசு.

எதிர்மறைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள இந்த 489 பொருட்களுக்கு சுங்க வரிச் சலுகை அளிப்பதில்தான் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதே தவிர, இப்பொருட்களை இறக்குமதி செய்ய முடியாது என இந்திய அரசு கூற முடியாது. இந்தியா

ஏசியன்-இந்தியா இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தான பின், அவ்வமைப்பின் பிரதிநிதியுடன் கைகுலுக்கும் இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா.



ஒவ்வொரு ஆண்டும் இப்பொருட்களைக் குறிப்பிட்ட அளவு இறக்குமதி செய்ய வேண்டும் என இவ்வொப்பந்தம் கூறுவதோடு, ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பொருட்களின் இறக்குமதிக்கான சந்தை வாய்ப்புகள் குறித்து இந்தியாவும் ஏசியன் நாடுகளும் பரிசீலிக்க வேண்டும் என்றும் இந்த ஒப்பந்தத்தில் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, இப்பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளும், சிறு தொழில் அதிபர்களும் எதிர்வரும் ஆண்டுகளில் கடுமையான போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். உலக வர்த்தகக் கழக நிபந்தனைப்படி, ஏற்கெனவே திணிக்கப்பட்டுள்ள தாராள இறக்குமதியின் காரணமாக நசிவடைந்து வரும் விவசாயிகள், சிறு தொழில் அதிபர்கள் தலைமீது மற்றொரு கல்லைத் தூக்கிப் போட்டிருக்கிறார் மன்மோகன் சிங் என்பதுபோகப்போகத் தெரிய வரும்.

இந்தியாவிலும் ஏசியன் நாடுகளிலும் இயங்கி வரும் ஹுண்டாய், தேவூ நிறுவனங்கள், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியத் தரகு முதலாளித்துவ நிறுவனங்களுக்கு இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் சாதகமானது எனக் கூறப்பட்டாலும், இந்த ஒப்பந்தத்தால் இந்தியாவைவிட ஏசியன் நாடுகளுக்குத்தான் அதிக இலாபம் என்பதை இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கும் அனைவருமே வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளனர். எனினும், சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிக்கும் வியாபாரத் தந்திரம் இந்த ஒப்பந்தத்தின் பின்னே உள்ளது. ஆதாயமில்லாமல் ஆற்றில் இறங்கக் கூடியவரா மன்மோகன் சிங்?

ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் நம்பியிருக்கும் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம், குறிப்பாக இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் துறை, உலகப் பொருளாதார வீழ்ச்சியினால் தேக்கமடைந்துவிட்டது. புதிய சந்தையை வளைத்துப் போடுவதன் மூலம் இந்தத் தேக்கத்தை உடைப்பது என்ற அடிப்படையில்தான், இந்தியா ஏசியன் நாடுகளோடு இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைப் போட்டுக் கொண்டுள்ளது. குறிப்பாக, தற்பொழுது கையெழுத்தாகியுள்ள இந்த ஒப்பந்தம் விவசாய மற்றும் தொழில்துறை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்திற்கு மட்டுமே பொருந்தும். இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, சேவைகளையும் மூலதனத்தையும் தடையின்றி ஏற்றுமதி - இறக்குமதி செய்து கொள்ளும் மற்றொரு ஒப்பந்தம் குறித்து இந்தியாவிற்கும் ஏசியன் நாடுகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இந்த இரண்டாவது தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் துறை நிறுவனங்களுக்குப் புதிய சந்தையை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, இந்தியாவிற்கே அதிக சாதகமானதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அதாவது, தகவல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த முதலாளிகளின் இலாபத்திற்காகப் தோட்டப்பயிர் விவசாயிகளின், சிறுதொழில் நிறுவனங்களின் நலன்களைப் பலி கொடுத்திருக்கிறார், மன்மோகன் சிங்.



ஏசியன் நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைக் கைவிடக் கோரி, கேரள மாநிலத்தில் நடந்த மனிதச் சங்கிலி போராட்டம்.

இந்த ஒப்பந்தம் தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, அதிலும் குறிப்பாக கேரளாவைச் சேர்ந்த தோட்டப் பயிர் விவசாயிகளுக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்பதை யாராலும் மறுக்க முடியவில்லை. இரப்பர், தேயிலை, மிளகு, ஏலக்காய் போன்ற தோட்டப் பயிர்களை எதிர்மறைப் பட்டியலில் சேர்த்திருந்தாலும்கூட, கேரளாவில் மட்டும் இப்பணப்பயிர் விவசாயத்தை நம்பியுள்ள 10 இலட்சம் விவசாயிகள்-விவசாயக் கூலிகள் இந்த ஒப்பந்தத்தால் பாதிப்படையக் கூடும் எனக் கூறப்படுகிறது. இந்தியா இலங்கையுடன் செய்துகொண்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் கேரளாவின் தென்னை விவசாயமும், தேங்காய்-கொப்பரை வியாபாரமும் கடும் போட்டியையும், அதனால் ஓரளவு நசிவடைந்திருப்பதையும் கேரள விவசாயிகள் முன்னுதாரணமாகச் சுட்டிக் காட்டுகின்றனர். அதனால்தான், இந்த ஒப்பந்தத்தை எதிர்ப்பதில் கேரள மாநிலம் முன்னணியில் உள்ளது.

இந்த ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் 2004-ஆம் ஆண்டு தொடங்கியே நடந்து வந்துள்ளன. பேச்சுவார்த்தைகள் நடந்த சமயத்தில் இடதுசாரிக் கட்சிகள், குறிப்பாக சி.பி.எம்., காங்கிரசுக்கு நெருங்கிய தோழனாக இருந்ததோடு, காங். கூட்டணி ஆட்சியும் இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவை நம்பித்தான் நடந்து வந்தது. அப்பொழுதே இவ்வொப்பந்தம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஒப்பந்தம் கையெழுத்தாவதைத் தடுத்து நிறுத்த முயலாத சி.பி.எம்., இப்பொழுது தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிறது.

மன்மோகன் சிங் இந்த ஒப்பந்தம் குறித்துத் தங்களிடம் கலந்து ஆலோசிக்கவில்லை எனக் குறைபட்டுக் கொள்கிறது, சி.பி.எம். சிங்குரிலும், நந்திகிராமத்திலும் விவசாயிகளைக் கலந்தாலோசித்துவிட்டா டாடாவோடும், இந்தோனேஷியாவின் (இந்தோனேஷியா, ஏசியன் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளில் ஒன்று) சலீம் குழுமத்தோடும் ஒப்பந்தம் போட்டுக் கொண்டீர்கள் என மன்மோகன் சிங் திருப்பிக் கேட்டால், சி.பி.எம். கட்சி தனது முகத்தை எங்கு வைத்துக் கொள்ளும்? சி.பி.எம்.-இன் எதிர்ப்பில் தனது வாக்குவங்கியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஓட்டுக்கட்சிகளுக்கே உரிய சுயநலன்தான் இருக்கிறதேயொழிய, வேறெந்த ''வெங்காயமும்'' கிடையாது.

● ரஹீம்

## ஆந்திர முதல்வர் நாற்காலிச் சண்டை:

# திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளின் சவால்!

**ஜெகன்மோகன் ரெட்டி ஆந்திர முதல்வராவதை அவரது விசுவாசிகள் மட்டுமல்ல, தரகு முதலாளிகளும் ஆதரிக்கிறார்கள்.**

ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி விமான விபத்தில் உயிரிழந்ததையடுத்து, யாரை முதல்வராக்குவது என்ற நாய்ச்சண்டை அங்கே ஆரம்பித்தது. அவரது மகன் ஜெகன்மோகன் ரெட்டியை முதல்வராக்கும் முயற்சிகள் சாவுச்செய்தி அறிவிக்கப்படும் முன்பே தொடங்கின. ராஜசேகர ரெட்டியின் இரங்கல் கூட்டத்தில் ஜெகன்மோகனின் ஆதரவாளர்கள் கலாட்டா செய்ததால் கூட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இருப்பினும், காங்கிரசு மேலிடம் ஆந்திர காங்கிரசின் மூத்த தலைவரான ரோசய்யாவை தற்காலிக முதல்வராக்கியது.

ஜெகன்மோகனின் ஆதரவாளர்களோ 120 எம்.எல்.ஏ.க்களிடமும், 40 எம்.பி.க்களிடமும் அவரை முதல்வராக்க விரும்புவதாகக் கையெழுத்து வாங்கியும், சோனியாகாந்திக்குத் தந்தியடித்தும் மேலிடத்தை மிரட்டினர்.

அம்மாநில அமைச்சர்கள், ரோசய்யா கூட்டிய எந்தவொரு கூட்டத்திலும் கலந்து கொள்ளாமல் தவிர்த்தனர். சில அமைச்சர்கள் தங்களது பதவியை இராஜினாமா செய்யப்போவதாக மிரட்டினார்கள். ஆந்திராவில் நோய் வாய்ப்பட்டும், வேறுகாரணங்களால் தற்கொலை செய்து கொண்டும் இறந்து போன 420 பேர்கள், ராஜசேகர ரெட்டியின் சாவினால் அதிர்ச்சியடைந்தும், தற்கொலை செய்து கொண்டும் இறந்ததாக அறிக்கை ஒன்றைத் தயாரித்து சுற்றுக்கு விட்டனர். இதன் மூலம் மக்களிடையே ராஜசேகர ரெட்டிக்கு மிகப் பெரிய செல்வாக்கு இருப்பதாகவும், மக்கள் அனைவரும் ஜெகன்மோகன்தான் அடுத்த முதல்வராக வேண்டும் என விரும்புவதாகவும் சித்தரித்தனர். மேலும், தங்களது தரப்பை வலியுறுத்த டெல்லியில் முகாமிட்டு, காங்கிரஸ் மேலிடத்திடம் ஆதரவு திரட்டும் வேலையிலும் இறங்கினர்.

தரகுப் பெருமுதலாளிகளால் தூக்கி நிறுத்தப்படும் ராஜசேகர ரெட்டியின் வாரிசு ஜெகன்மோகன் ரெட்டி.



ஆனால் இதற்கெல்லாம் மசியாத சோனியாகாந்தி, ''புதிய உத்தரவுகள் வரும் வரை ரோசய்யாவே முதல்வராக நீடிப்பார்'' என அறிவிக்கச் செய்தார். இதனால் பிரச்சனை தற்காலிகமாக ஓய்ந்தாலும், ஜெகன்மோகன் ஆதரவாளர்கள் தக்க தருணத்துக்காகக் காத்துள்ளனர்.

தற்போது முதல்வராக முன்னிறுத்தப்படும் ஜெகன்மோகன் ரெட்டி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது அரசியலில் குதித்தவர்; தெலுங்கில் ஒழுங்காகப் பேசக்கூடத் தெரியாதவர்; ஆறு மாதங்களுக்கு முன்பு வரை அரசியலுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை; தான் ஒரு முதலாளி எனக் கூறிவந்தவர். இவ்வாறு கட்சியிலோ, மக்களிடமோ செல்வாக்கில்லாத, அரசியலுக்கு வந்து வெறும் நூறு நாட்களே ஆன ஒருவர் காங்கிரஸ் கட்சியின் தலைமையையே மிரட்டுகிறார் என்றால், அவருக்கு இவ்வளவு துணிவும் ஆற்றலும் எங்கிருந்து வந்தது?

ராஜசேகர ரெட்டி கடந்த முறை முதல்வராக இருந்த போது, ஆந்திராவில் தொழில் தொடங்கிய முதலாளிகளுடன் மறைமுகமாக நட்பும் கூட்டும் கொண்டிருந்தார்; அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வாரி வழங்கினார். மோசடி பேர்வழி சத்யம் ராஜு, பொது மக்களுக்கு இலவசக் காப்பீடு என்று கூறிப் பல ஆயிரம் கோடிகளை ஏமாற்றிய ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ், இன்னும் இது போன்ற பல கார்பரேட் நிறுவனங்கள் மற்றும் சுரங்க முதலாளிகள் என ராஜசேகர ரெட்டியின் நட்பு வட்டாரமும் கள்ளக்கூட்டுகளும் நீண்டது.

இவ்வாறு பன்னாட்டு முதலாளிகளும், தரகு முதலாளிகளும் அரசை தங்களது நோக்கங்களுக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்ளும் இந்த ஏற்பாடு, ராஜசேகர ரெட்டியின் மரணத்திற்குப் பிறகும்

தடங்கலின்றித் தொடர்வதற்கு, இவர்களுக்குக் கிடைத்தவர்தான் ஜெகன்மோகன். ராஜசேகர ரெட்டி முதலாளிகளிடமிருந்து வாங்கிய பல்லாயிரம் கோடி லஞ்சப் பணத்தை பல்வேறு தொழில்களில் முதலீடு செய்வதும், பினாமிகள் மூலமாக பல நிறுவனங்களைத் தொடங்கி நடத்துவதும், ஜெகன் மோகனின் வேலையாக இருந்தது.




ராஜசேகர ரெட்டியின் இரங்கல் கூட்டத்தில், ஜெகன்மோகன் ரெட்டியை முதல்வராக்கக் கோரி அவரது ஆதரவாளர்கள் நடத்தும் கலாட்டா.

சந்தூர் பவர் லிமிடெட், ஜகதி பப்ளிகேசன்ஸ், இந்திரா டிவி, சாக்ஷி செய்தித்தாள், மொரீசியஸில் இரு கம்பெனிகள் என 14 கம்பெனிகளை இவர் நடத்தி வந்தார். இவரே ஒரு முதலாளி என்பதால், ராஜசேகர ரெட்டி உயிரோடு இருந்தபோதே, இவர் முதலாளிகளுடன் நெருக்கமாக இருந்தார். எனவே முதல்வர் பதவியில் வேறு யாரேனும் அமர்வதற்குப் பதில், இவர் வருவதுதான் முதலாளிகளுக்கு உவப்பானதாக இருந்தது. அதனால்தான், இவரால் ஆந்திரக் காங்கிரசுக் கட்சியின் பழம் பெருச்சாளிகளையெல்லாம் ஓரங்கட்டி விட்டு, முதல்வர் பந்தயத்தில் முந்திக்கொண்டு ஓட முடிந்தது.

ஆனால் காங்கிரசு மேலிடத்திற்கோ, இது தனது அதிகாரத்தை எதிர்க்கும் குறுநில மன்னரின் பிரச்சனை. முதல்வர் நாற்காலியில் அமர வைக்க, கட்சித் தலைமை சொல்வதை அப்படியே கேட்டு நடக்கக்கூடியதொரு பொம்மைதான் காங்கிரசுக்குத் தேவை. ஜெகன்மோகன் அத்தகையவர்தானா என சோதித்தறியும் வரை, அவரை முதல்வராக்குவதில்லை என மேலிடம் முடிவு செய்துள்ளது.

இனிமேல், மாநிலத்தின் முதல்வராக ஒருவர் வருவதற்கு, மக்களிடமோ தனது கட்சியிலோ செல்வாக்குப் பெற்றிருக்கத் தேவையில்லை; நான்கைந்து ஏகபோக முதலாளிகள் நினைத்தால் போதும், யாரை வேண்டுமானாலும் முதல்வராக்கலாம் என்ற நிலைமை உருவாகியுள்ளதை இது எடுத்துக் காட்டுகிறது.

அரசியல் அரங்கில் புல்லுருவிக் கூட்டமாக புதுப்பணக்கார கழிசடை சக்திகள் வளர்ந்துவருவதைத்தான் ஆந்திராவில் நடந்துவரும் காங்கிரசு கோஷ்டிச் சண்டை எடுத்துக் காட்டுகிறது.

ஓட்டுச் சீட்டு அரசியலில் முன்பெல்லாம் கட்சிகள் ஒவ்வொன்றும், மக்கள் நலனில் அக்கறை கொண்டவை தாங்கள்தான் எனப் பரப்புரை செய்யும் தேவையும் இருந்தது. இன்று அம்மாதிரியான பாசாங்குகள் எவையும் தேவையில்லை. அப்பட்டமாக தரகு முதலாளிகளே அரசியலில் இறங்கி ஆட்சியைக் கட்டுப்படுத்தத் தொடங்கி விட்டனர். என்.டி.ராமராவுக்குக் கூட, முதல்வராவதற்கு, சினிமாவில் நடித்து பல லட்சம் மக்களைக் கவரவேண்டியிருந்தது. ஜெகன்மோகனுக்கு அது கூடத் தேவையில்லாமல் போய்விட்டது. கலைஞரின் மனசாட்சி என்றும், மாநில சுயாட்சி பற்றிய கொள்கையை வகுத்தவர் என்றும் முரசொலி மாறன் தூக்கி நிறுத்தப்பட்டதைப் போன்ற பிம்பங்களெல்லாம், நவீன கார்ப்பரேட் முதலாளி தயாநிதி மாறனுக்குத் தேவைப்படவில்லை. கொல்லைப்புறமாக நுழைந்த மு.க.அழகிரி இன்று தமிழகத்தின் தென்மாவட்டங்களை விலைபேசும் திடீர் அரசியல் தலைவராக வளர்ந்து விட்டார். முதலாளித்துவ ஊடகங்களும் இத்தகைய புதுப்பணக்கார அரசியல் வாரிசுகளை ''திறமைசாலி'', ''சிக்கல்களைத் தீர்க்கும் சூத்திரதாரி'', ''புதிய திட்டங்களை வகுத்துத் துணிவோடு செயல்படுத்தும் இளைஞர்'', ''எளிமையானவர்'', ''கடின உழைப்பாளி'' என்றெல்லாம் ஒளிவட்டம் போட்டு துதிபாடுகின்றன.

இலவசத் திட்டங்களைப் பற்றி வாய்ப்பந்தல் போட்டும், தலைக்கு முன்னூறு, ஐநூறு என விலை வைத்து வாக்குகளை வாங்கி விடுவதாகவும் ஓட்டுக் கட்சிகளின் அரசியல் மாறி விட்டது. ஜெகன் மோகன், தயாநிதி மாறன், அழகிரி முதலான இத்தகைய புதுவகையான கோடீஸ்வர அரசியல் வாரிசுகள், மக்களிடமிருந்து அரசியலை அகற்றி பிழைப்புவாதத்தை பொதுப் புத்தியாக்கி வருகின்றனர். இவர்கள் பணபலம், குண்டர் பலம், சாதிய பலத்தோடு கணிசமான அளவுக்கு எம்.எல்.ஏ.க்களையும் எம்.பி.க்களையும் தம் பிடியில்

வைத்துக் கொண்டு மாநில அளவில் செல்வாக்கு செலுத்தக் கூடியவர்கள். இவர்கள் சார்ந்துள்ள கட்சித் தலைமையால்கூட இவர்களைக் கட்டுப்படுத்த இயலாது. மாநில அரசியலையே ஆட்டிப் படைக்கும் இவர்கள், எந்த தேசியக் கட்சிக்கும் எதிரானவர்களல்ல. இன்னும் சொல்லப்போனால், எந்த தேசியக் கட்சியும் இவர்களது தயவு இல்லாமல் மத்தியில் ஆட்சி அமைக்கவோ, அதைத் தக்க வைத்துக் கொள்ளவோ முடியாது.

இத்தகைய கழிசடை அரசியல் என்பது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இழிந்த இறுதிநிலை மட்டுமல்ல; அதற்கே எதிரான அபாயகரமான போக்காகும். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் எல்லா போலித்தனங்களையும் வீசி எறிந்துவிட்டு, அப்பட்டமான பாசிச சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான அரசியல், சித்தாந்த, அமைப்பு அடிப்படைகளை இத்தகைய கழிசடை அரசியல் சக்திகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இத்தகைய கழிசடை அரசியலுக்கு கொள்கை - இலட்சியம் என்று எதுவும் கிடையாது. அது பொறுக்கி அரசியலும் கிரிமினல் அரசியலும் கலந்த வீரிய ஒட்டுரகம். அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக யாருடனும் கூட்டுச்சேரத் தயங்காத பிழைப்புவாதிகளின் கூடாரம். மறுகாலனியாக்கம் உருவாக்கியுள்ள இத்தகைய கழிசடை அரசியல் என்பது, பாசிசம் அரங்கேறுவதற்கான எல்லா அடிப்படைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் அபாயகரமான அரசியல் போக்காகும்.

ஆந்திராவில் நடந்துவரும் காங்கிரசு கோஷ்டிச் சண்டையை வழக்கமாக அக்கட்சிக்குள் நடக்கும் கூத்தாக ஒதுக்கிவிட முடியாது. அரசியல் அரங்கில் புல்லுருவிக் கூட்டமாக வளர்ந்துவரும் இப்புதுப்பணக்கார கழிசடை சக்திகளை அம்பலப்படுத்தி முறியடிக்காமல், பாசிசத்துக்கு எதிரான ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவும் முடியாது.

● தனபால்

# ஹோண்டுராஸ் இராணுவப் புரட்சியும் அமெரிக்காவின் நப்பாசையும்

**ஹோண்டுராஸில் நடந்த இராணுவப் புரட்சியின் பின்னே, அமெரிக்கா மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் நலன்கள் ஒளிந்துள்ளன.**

தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரிப்பது; இலவச ஆரம்பக் கல்வி அளிப்பது; போக்குவரத்துக் கட்டணத்தைக் குறைப்பது உள்ளிட்ட சில சில்லறை சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்க முயன்றதற்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அதிரடி இராணுவப் புரட்சி மூலம் தூக்கியெறியப்பட்ட ''அதிசயத்தை'' நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? மத்திய அமெரிக்காவில் அமைந்துள்ள ஹோண்டுராஸ் நாட்டில் கடந்த ஜூன் மாத இறுதியில் நடந்த அதிரடி இராணுவப் புரட்சி அப்படிபட்ட அதிசய நிகழ்வாகும்.


மத்திய அமெரிக்காவில் அமைந்துள்ள நிகரகுவா, ஈக்வடார், எல்சல்வடார் ஆகிய நாடுகளில் 1980-களில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்று வந்தபொழுது, அத்தேசிய விடுதலைப் போராட்டங்களைச் சீர்குலைக்கவும், ஒடுக்கவும் ஹோண்டுராஸ்தான் அமெரிக்காவின் கைக்கூலியாகச் செயல்பட்டு வந்தது. குறிப்பாக, நிகரகுவாவில் அமெரிக்காவுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி வந்த சாண்டினிஸ்டா போராளிகளை ஒழிப்பதற்கான மையமாக ஹோண்டுராஸை அமெரிக்கா பயன்படுத்தி வந்தது. அன்று தொடங்கி இன்று வரை ஹோண்டுராஸ் நாட்டு இராணுவத்திற்கும், அதன் தளபதிகளுக்கும் அமெரிக்காதான் பயிற்சியும் நிதியுதவியும் அளித்து வருகிறது. ஹோண்டுராஸ் நாட்டு இராணுவத்திற்கும், அந்நாட்டைச் சேர்ந்த முதலாளிகளுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் இருந்து வரும் பிணைப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தில்தான் அந்நாட்டு அரசியல் சாசனச் சட்டமே உருவாக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பின்னணி கொண்ட நாட்டில் நாடாளுமன்ற ஜனநாயகம் எந்த இலட்சணத்தில் செயல்பட்டிருக்கும் என்பதை விரிவாக விளக்க வேண்டிய அவசியமில்லை.

ஹோண்டுராஸில் 2006-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றிய ''லிபரல்'' கட்சி, நம் நாட்டு பா.ஜ.க.வைப் போன்று தீவிர வலதுசாரிக் கட்சிதான். அக்கட்சியின் சார்பாக அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மானுவேல் ஜெலையாவும் அந்நாட்டின் குறிப்பிடத்தக்க முதலாளிகளுள் ஒருவர்தான். வெனிசுலா, பொலிவியா போன்று தற்பொழுது ஹோண்டுராஸிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் உள்நாட்டு அடிவருடிகளுக்கும் எதிராக மக்கள் மத்தியில் வெறுப்பும் எதிர்ப்புணர்வும் பெருகி வருகிறது. இந்த எதிர்ப்புணர்வைப் பயன்படுத்திக் கொண்டுதான் லிபரல் கட்



சியும், அதன் அதிபர் ஜெலையாவும் 2006 தேர்தலில் வெற்றியடைந்தனர்.

இந்த எதிர்ப்புணர்வைத் தனது வாக்கு வங்கியாக மாற்றிக் கொள்ள முயன்ற ஜெலையா, அதற்காகச் சில பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கினார். அவரது சில்லறை சீர்திருத்த நடவடிக்கைகளைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியாத லிபரல் கட்சியின் தீவிர வலதுசாரிப் பிரிவும், இராணுவமும், பெரு முதலாளிகளும் கைகோர்த்துக் கொண்டு இந்த அதிரடிப் புரட்சியை நடத்தியுள்ளனர்; அதிபர் ஜெலையாவையும் சட்ட விரோதமாக நாடு கடத்திவிட்டனர்.



இராணுவப் புரட்சியை எதிர்த்து பிரேசில் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ள ஹோண்டுராஸ் அதிபர் மானுவேல் ஜெலையா.

தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த முயன்றதோடு மட்டுமின்றி, அரசின் கட்டுப்பாட்டில் இருந்த தொலைபேசித் துறையைத் தனியார்மயமாக்க அதிபர் ஜெலையா மறுத்தது; வெனிசுலா மற்றும் கியூபா தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள ''அமெரிக்க நாடுகளுக்கான பொலிவரியன் மாற்று'' (Bolivarian Alternative for the Americas) என்ற அமைப்பில் ஹோண்டுராஸையும் இணைக்க அதிபர் ஜெலையா எடுத்த முடிவு; ஹோண்டுராஸில் குறைவான விலையில் மருந்துப் பொருட்களை விற்பதற்காக கியூபாவுடன் உருவாக்கப்பட்ட ஒப்பந்தம்; அமெரிக்க ஏகாதிபத்தியம் 1982-இல் திணித்த அரசியல் சாசனச் சட்டத்தில் திருத்தம் செய்ய அதிபர் ஜெலையா செய்த முயற்சி — இவையனைத்தும் ஜெலையா அரசு இடதுசாரிப் பாதையில் பயணம் செய்வதைப் போலவும், ஹோண்டுராஸ் இன்னொரு வெனிசுலா ஆகப் போவதைப் போலவும் பிற்போக்குக் கும்பலிடம் ஏற்படுத்திய பீதிதான், இந்த இராணுவப் புரட்சிக்குப் பின்னணியாக அமைந்தது.

ஹோண்டுராஸ் நாட்டின் தொலைபேசித் துறையான ''ஹோண்டுடெல்'' நிறுவனத்தை அமெரிக்காவைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்களிடம் விற்பதற்கு அதிபர் ஜெலையா மறுத்தவுடனேயே, அவரது அரசுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. தொலைபேசித் துறையில் அதிக முதலீடுகளைச் செய்துள்ள ஓட்டோ ரெய்ச் என்ற முதலாளிதான் இந்த ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் மூளையாகச் செயல்பட்டுள்ளார்.

இராணுவ ஆட்சியாளர்களின் அச்சுறுத்தல் - அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல், ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து ஹோண்டுராஸ் மக்கள் நடத்தும் தெருப் போராட்டம்.



ஓட்டோ ரெய்ச், கியூபா வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கக் குடிமகன் என்பதோடு, கியூப எதிர்ப்பிலும் முன்னணியாகச் செயல்படும் முதலாளி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜெலையா அரசில் சபாநாயகராக இருந்த ராபர்டோ மிக்கலெட்டிதான், ஆட்சிக் கவிழ்ப்புக்குப்பின் அதிபராக இராணுவத்தால் முடிசூட்டப்பட்டுள்ளார். இவர், 1990-களில் ஹோண்டுடெல் நிறுவனத்தின் பொது மேலாளராகப் பணிபுரிந்தவர் என்பதோடு, தீவிரமான அமெரிக்க விசுவாசி என்பதாலேயே அதிபர் பதவி பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின் பதவியேற்றுள்ள மிக்கலெட்டி அரசில் என்ரிக் ஓர்டெஸ் என்பவர் வெளியுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். என்ரிக் ஓர்டெஸ், அமெரிக்க நாடுகளுக்கான பொலிவரியன் மாற்று அமைப்பில் சேருவதென ஜெலையா எடுத்த முடிவைக் கடுமையாக எதிர்த்தவர் என்பது மட்டுமின்றி, அவரது பின்னணி அதனைவிடவும் சுவாரசியமானது. 1980-களில், நிகரகுவாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி வந்த சாண்டினிஸ்டா போராளிகளுக்கு எதிராக ''காண்ட்ராஸ்'' என்ற எதிர்ப்புரட்சிக் கும்பலை அமெரிக்கா வளர்த்துவிட்டது. இந்த எதிர்ப்புரட்சிக் கும்பல் சாண்டினிஸ்டா போராளிகளைத் தாக்குவதற்கான தளமாக ஹோண்டுராஸைப் பயன்படுத்தி வந்தது. இந்த எதிர்ப்புரட்சிக் கும்பலுக்குத் தேவையான ஆயுதங்களைக் கடத்தி வந்த கும்பலில் முக்கியமானவர் என்ரிக் ஓர்டெஸ்.

அதிபர் ஜெலையாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதில் ஹோண்டுராஸைச் சேர்ந்த ரஃபேல் நோடார்ஸே என்ற பத்திரிகை அதிபருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இவரது வியாபார வெற்றியின் இரகசியத்தைத் தோண்டினால், அதில் ஹோண்டுராஸ் இராணுவ அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதைக் காண முடியும். இது மட்டுமின்றி, அமெரிக்காவின் சி.ஐ.ஏ. 1960-களில் கியூபாவின் காஸ்ட்ரோ அரசைத் தூக்கியெறிவதற்காக இரகசியமாக நிறுவிய ''ஸ்வான்'' வானொலி நிலையத்தோடு நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தவர் ரஃபேல் நோடார்ஸே; கியூபா அரசால் பயங்

கரவாதியெனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள லூயில் போஸாடாவிற்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்த திலும் ரஃபேல் நோடார்ஸேக்குப் பங்குண்டு.

ஹோண்டுராஸ் நாட்டில் புழக்கத்தில் இருக்கும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களில் 80 சதவீதம் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுக ளைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்களால்தான் தயா ரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. அதிபர் ஜெலையா அமெரிக்க நாடுகளுக்கான பொலிவரியன் மாற்று அமைப்பில் இணைந்தவுடன் கியூபாவில் இருந்து மருந்துப் பொருட்களைக் குறைந்த விலையில் இறக்குமதி செய்து கொள்ளும் ஒப்பந்தத்தை உருவாக் கினார். இந்த ஒப்பந்தத்தால் பாதிப்படையக்கூடிய கிளாஸ்ஸோ, ஸ்மித்கிளைன், ஸநோ ஃபி, ஃபைஸர், நோவார்டிஸ், அவெந் திஸ் உள்ளட்ட சில ஏகபோக மருந்து நிறுவனங்கள் இந்த இராணுவப் புரட் சியை ஆதரித்திருப்பதாக மத்திய அமெரிக்க சமூகக் கூர்நோக்கு மையம் குற்றஞ்சுமத்தியுள்ளது.




மக்கள் நல அரசு என்ற கருத்தாக்கத்தைத் தனியார்மயம் – தாராளமயம் ஏற்றுக் கோள்வதில்லை என்பதைத்தான் ஹோண்டுராஸில் நடந்துள்ள இராணுவப் புரட்சி எடுத்துக் காட்டுகிறது.

ஹோண்டுராஸ் அரசியல் சாசனச் சட்டப்படி, அந்நாட்டின் அதிபராகப் பதவியேற்பவர் இரண்டாம் முறை யாக அதிபர் தேர்தலில் போட்டியி டவோ அதிபராகவோ முடியாது. ஜெலையா, அரசியல் சாசனச் சட்டத் தில் திருத்தம் கொண்டுவந்து இதனை மாற்ற முயன்றதோடு, அத்திருத்தத்தை அங்கீகரிக்கக் கோரி, பொதுஜன வாக் கெடுப்பு நடத்தவும் திட்டமிட்டார். ஜெலையாவின் இந்த முயற்சியை அந்நாட்டு இராணுவம், தனக்கு விடப்பட்ட நேரடியான சவாலாகவே கருதி, அத்திருத்தத்தையும் பொதுஜன வாக்கெடுப்பையும் எதிர்த்தது. இரா ணுவத்தைப் போலவே அந்நாட்டு உச்ச நீதிமன்றமும் இத்திருத்தத்தை எதிர்த்ததோடு, பொதுஜன வாக்கெ டுப்பு நடத்துவதற்குத் தடையும் விதித் தது. இராணுவத்துக்கும் உச்சநீதி மன் றத்துக்கும் பணிந்து போகாத ஜெலை யா, அரசினைக் கட்டுப்படுத்தாத பொதுஜன வாக்கெ டுப்பை நடத்தத் திட்டமிட்டிருந்த ஜூன் 28 அன்றுதான், அவரது அரசு இராணுவப் புரட்சி மூலம் தூக்கியெறியப் பட்டதோடு, அவரும் சட்டவிரோதமான முறையில் நாடு கடத்தப்பட்டார்.

தென் மற்றும் மத்திய அமெரிக்க நாடுகள் அனைத் தும் இந்த இராணுவப் புரட்சியைக் கண்டித்திருப்ப தோடு, ஜெலையாவைத்தான் ஹோண்டுராஸ் அதிபராக அங்கீகரித்து வருகின்றன. ஆனால், ஹோண்டுராஸ் இரா ணுவமோ ஜெலையா கடந்த ஜூலை 5 அன்று நாடு திரும்ப மேற்கொண்ட முயற்சியைத் தடுத்துவிட்ட தோடு, அவருக்கு ஆதரவாக உள்நாட்டில் நடைபெற்று வரும் போராட்டங்களையும் மிருகத்தனமாக ஒடுக்கி வருகிறது. இதனையும் மீறி, கடந்த செப்டம்பர் மாத இறுதியில் ஹோண்டுராஸுக்குள் நுழைந்துவிட்ட ஜெலையா, அந்நாட்டிலுள்ள பிரேசில் தூதரகத்தில் தற் பொழுது தஞ்சமடைந்துள்ளார்.

அமெரிக்காவின் அதிபர் ஒபாமா இந்த இராணுவப் புரட்சியைக் கண்டிப்பதாகக் கூறினாலும், அமெரிக்க அரசிற்கோ இராணுவத்திற்கோ தெரியாமல் இந்த புரட்சியே நடந்திருக்க முடியாது என்பதுதான் உண்மை. அதிபர் ஜெலையா அமெரிக்க நாடுகளுக்கான பொலி வரியன் மாற்று அமைப்பில் ஹோண்டுராஸை இணைப் பதென முடிவை எடுத்தவுடனேயே, அவருக்கும் அமெ ரிக்காவுக்கும் இடையே முறுகல் ஏற் படத் தொடங்கிவிட்டது. ஹோண்டு ராஸ் இராணுவ அதிகாரிகள் பொது ஜன வாக்கெடுப்புக்கு எதிராக நடத் திய ஆலோசனைக் கூட்டங்களில் ஹோண்டுராஸுக்கான அமெரிக்கத் தூதர் ஹுகோ லொரென்ஸும் பங்கு கொண்டதாகவும், அவர் சட்டபூர்வ மான வழிகளில் அதிபர் ஜெலையா வின் ஆட்சியைக் கவிழ்த்துவிடுவ தற்கு ஆலோசனைகள் வழங்கியதாக வும் தற்பொழுது செய்திகள் வெளி வந்துள்ளன.

ஹோண்டுராஸ் நாட்டின் பொருளா தாரம் அமெரிக்க அரசு அளிக்கும் நிதி யுதவிகளைத்தான் பெருமளவு சார்ந் துள்ளது. அந்நாட்டில் நடந்துள்ள இரா ணுவப் புரட்சியை ஏற்க மறுப்பதாகக் கூறும் அமெரிக்கா, இந்த நிதியுதவி களை நிறுத்தி இராணுவத்திற்கு நெருக்கடி கொடுக்க மறுத்து வருகிற து. மேலும், அமெரிக்க அடிவருடியும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவ ரும் தற்போதைய கோஸ்டா ரிகா நாட் டின் அதிபருமான ஆஸ்கர் ஏரியாஸி டம், ஹோண்டுராஸில் சமாதானம் ஏற் படுத்தும் பொறுப்பை ஒப்படைத் துள்ளது, அமெரிக்க ஏகாதிபத்தியம். இந்த சமாதானத்தின் நோக்கம் ஆட்சிப் பொறுப்பை மீண்டும் ஜெலையாவிடம் ஒப்படைப்பதல்ல எனச் சூச கமாகக் கூறியுள்ளார், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன். ஹோண்டுராஸ் இரா ணுவம் நிறுவியுள்ள பொம்மையாட்சியைச் சட்டபூர்வ மாக்கிவிட வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் உள்ளார்ந்த நோக்கம். இதன் மூலம், தென் மற்றும் மத் திய அமெரிக்க நாடுகளில், தனது ஆதிக்கத்திற்கு எதி ராக விடப்படும் சவால்களைத் தடுத்துவிடவும் திட்டம் போடுகிறது, அமெரிக்க ஏகாதிபத்தியம்.

● குப்பன்

# திராவிட-தமிழினக் கட்சிகளின் சமூக நீதி: ஊழலின் கவசமா?

**நிலமோசடிப் பேர்வழி நீதிபதி தினகரனைப் பாதுகாக்க, சமூக நீதியைக் கேடாகப் பயன்படுத்துகிறார், தி.க. வீரமணி.**

ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்களின் சொத்துக்களைத் தனது உயர்பதவியைப் பயன்படுத்தி அபகரிக்கும் நபரும் ஒடுக்கப்படும் சாதியைச் சேர்ந்தவராய் இருந்தால், 'சமூக நீதி' பேசும் பிழைப்புவாதிகள் யார் பக்கம் நிற்பார்கள் என்பது நீதிபதி பி.டி.தினகரன் விவகாரத்தில் வெட்ட வெளிச்சமாகி விட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணி வட்டத்தைச் சேர்ந்த காவேரிராஜபுரம் என்ற ஊரிலிருக்கும் தரிசு நிலங்கள், ஏரிகள், நீர்நிலைகள் மற்றும் அரசு புறம்போக்கு நிலம் என 600 ஏக்கர் வரையிலான நிலத்தை கர்நாடக நீதிமன்ற நீதிபதி தினகரன் வளைத்துப் போட்டிருக்கிறார். இப்படிப்பட்டவர், அண்மையில் உச்சநீதிமன்ற நீதிபதியாவதற்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தார். இதையடுத்து வருமானத்துக்கு அதிகமாக இவர் சொத்து சேர்த்திருப்பதை விசாரிக்கக் கோரி வழக்குரைஞர்கள் குரல் எழுப்பினர். பிரபல வழக்குரைஞரான சாந்தி பூஷண் ''தினகரன் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார். அப்படிப்பட்டவரை உச்ச நீதிமன்றத்துக்கு எப்படி நீதிபதியாக நியமிக்கலாம்?'' எனக் கேட்டிருந்தார்.

முன்னாள் அரசு அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், தினகரனுடன் இணைந்து செய்திருக்கும் இந்த நில மோசடிகளை அரசு விசாரிக்க வேண்டும் எனக் கோரி, சி.பி.எம். கட்சியின் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், கடந்த செப்டம்பர் 22 அன்று திருவள்ளூரில் ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றது. அதைத் தொடர்ந்து, அவ்வமைப்பின் முன்னணியாளர்கள் உள்ளிட்ட 100 பேர்களை போலீசு கைது செய்தது. ஆனால் மோசடி நீதிபதி மீது 'சூத்திர' கருணாநிதி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

''நீதிபதி, அவரின் மனைவி மற்றும் அவரின் மகள்கள் பெயரில் நிலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நிலங்களுக்குப் பாசன வசதிக்கென தனியாக 4 டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது அப்பட்டமாக நில உச்ச வரம்பை மீறிய செயலாகும். அந்நிலங்களுக்குச் செல்லும் சாலைக்குத் தினகரன் பெயரே சூட்டப்பட்டுள்ளது'' என்று விவசாயிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. இந்நிலப்பறிப்பில் ஏரிகளும் ஓடைகளும் பறிபோனதால் அருகிலுள்ள ஊர்க்காரர்கள் கூட பொது நீர்நிலைகளைப் பயன்படுத்த இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளது. சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட அந்நிலங்களில் கால்பதித்த கிராம மக்கள் மீது மாங்காய் திருடியதாகப் பொய்வழக்குளைச் சோடித்து இந்த அநீதி அரசர் அச்சுறுத்தியுள்ளார். அக்கிராமத்தின் கால்பங்குக்கும் மேலாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அந்நிலங்களைச் சுற்றிப் போடப்பட்டிருந்த வேலிகளை அகற்ற முயன்ற ஆர்.டி.ஓ., தொலைபேசியில் நீதி 'அரசரால்' மிரட்டப்பட்டார்.

இது குறித்து உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன், தினகரனை அழைத்து விசாரித்தார். அரக்கோணத்தில் தனக்கு 48 ஏக்கர் நிலம்தான் உள்ளது என்றும், நீதிபதியானபோது அதைக் கணக்கில் காட்டவில்லையே தவிர, மற்றபடி அரக்கோணம் பகுதியில் ஏராளமான ஏக்கர் நிலத்தை வளைத்ததாக யார் சொன்னாலும் அதில் உண்மையில்லை என்றார் தினகரன்.

இருப்பினும் தலைமை நீதிபதி, தமிழ்நாடு அரசிடம் இதுகுறித்து அறிக்கை தருமாறு கேட்டார். திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் விசாரணை நடத்திக் கிடைத்த ஆதாரப்படி, 197 ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது தெரியவந்தது. இந்த ஆதாரத்தை அரசு, தலைமை நீதிபதிக்கு அனுப்பிய பின்னர் தினகரனின் பதவி உயர்வு தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த அநீதிபதி மோசடியாய் வளைத்துப் போட்டிருக்கும் நிலங்களைக் கைப்பற்றித் தங்களுக்கு வழங்க வேண்டும் என்று அக்கிராம மக்கள் 94 பேர் கையெழுத்திட்டு மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு கொடுத்துள்ளனர்.

'சமூக நீதி' பிழைப்புவாதிகளால் ஆதரிக்கப்படும் ஊழல்-மோசடி 'அ'நீதிபதி பி.டி. தினகரன் .



இவ்வாறு நீதியரசர் செய்த ஊழல்கள் அப்பட்டமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கையில், தினகரனை ஆதரிக்க சாதியைக்

கையில் எடுத்துக் களமிறங்கினார் திராவிடர் கழகத்தின் வீரமணி. தினகரன் மீது பொய்யான புகார்களை எழுப்பியுள்ளதாகவும், ஒரு தாழ்த்தப்பட்டவர், உச்சநீதி மன்ற நீதிபதியாக நியமிக்கப்படக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு அவதூறு பரப்பப்படுவதாகவும், உச்ச நீதிமன்ற நீதிபதியாக பி.டி.தினகரனை அமர வைக்கும் வரை இந்தப் பிரச்சினையை தி.க.உட்பட சமூகநீதி அமைப்புகள் விடப் போவதில்லை, ஓயப் போவதில்லை என்றும் வீரமணி அறிவித்தார்.



காவேரிராஜபுரத்தில் பி.டி. தினகரனால் சட்டவிரோதமாக வளைத்துப் போடப்பட்டுள்ள நிலம் மற்றும் அவரால் எழுப்பப்படும் கட்டிடம்.

‘‘தினகரன் பரம்பரையாக வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். நீதிபதி ஆனபிறகு சொத்து சேர்க்கவில்லை’’ என சாட்சிக்கு வந்தார் வீரமணி. ஆனால் காவேரிராஜபுரம் மக்களோ ‘‘18 ஆண்டுகளுக்கு முன்புதான் இக்கிராமத்தில் அவர் கால்பதித்தார்’’ என்று நீதிபதியின் பரம்பரைச் சொத்தின் ரகசியத்தைப் போட்டு உடைக்கின்றனர். பரம்பரையாகவே வந்திருப்பினும், உச்சவரம்புச் சட்டத்தை மீறி 600 ஏக்கரை நீதி அரசர் ஒருவரே வைத்திருக்கலாமா என்பதை இந்த ‘சமூக நீதி அரசர்’ விளக்கவே இல்லை.

# “அப்பன் சொத்து பிள்ளைக்கு!”

## - பார்ப்பன இந்துத்துவ பாதையில் பீடுநடை போடும் கி.வீரமணி

திராவிடர் கழகம் எனும் தனியார் கம்பெனியின் தலைமை நிலையச் செயலாளராக கி.வீரமணியின் மகன் அன்புராஜ் நியமிக்கப்பட்டிருக்கிறார். அக்டோபர் 10 அன்று தஞ்சாவூரில் கூட்டப்பட்ட தி.க.வின் பொதுக்குழுவில் பேசிய கி.வீரமணி ‘‘எனது உடல் நிலை மோசமாகிக் கொண்டே போகிறது. இனிமேல் மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்வதைத் தவிர்க்கப் போகிறேன். முன்பு மாதிரி என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்’’ என்று பேசி உட்கார்ந்தார். அவர் ஏற்கெனவே ஏற்பாடு செய்திருந்த கைத்தடிகள் உடனே ‘‘தலைவர் உடல்நிலைதான் முக்கியம். இனிமேல் கட்சிப் பொறுப்புகளை அன்புராஜ் மாதிரியான இளைஞர்களுக்கு கொடுக்கணும்’’ எனக் கோரியதும், உடனே தனது மகனுக்கு மகுடம் சூட்டி விட்டார்.

வீரமணியின் வாரிசான அன்புராஜ் ஏற்கெனவே தொழிலதிபர். அவர் தி.க.வின்போராட்டங்களில் பங்கேற்றதில்லை; கட்சிப் பொறுப்புகளில் இருந்ததுமில்லை. கட்சித் தொண்டர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவருமில்லை. ஆனாலும் அவர் கட்சியின் தலைமை நிலையச் செயலாளராக்கப் பட்டுள்ளார்.

1916-ஆம் ஆண்டு கூட்டுப் பங்கு நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்ட ‘‘தென்னிந்திய மக்கள் சங்கம் லிமிடெட்’’ எனும் நிறுவனத்தின் அரசியல் பிரிவாக ஆரம்பிக்கப்பட்ட ‘‘தென்னிந்திய நலவுரிமை சங்கம்’’தான்,




பின்னாளில் பெரியாரால் ‘‘திராவிடர் கழகம்’’ எனும் மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டது. அது இப்போது மீண்டும், வீரமணி குடும்பத்தாருக்கு மட்டுமேயான ‘பிரைவேட் லிமிடெட்’ கம்பெனியாக்கப்பட்டுள்ளது. ஒரு தேர்ந்த முதலாளி தனது நிறுவனத்தை வாரிசுகளுக்குக் கைமாற்றித் தரும் காரியத்தைத்தான் வீரமணி இப்போது செய்திருக்கிறார். மேலும், ‘‘அப்பன் சொத்து பிள்ளைக்கு’’ என்ற பார்ப்பன இந்து தர்மத்தையும் நிலைநாட்டியுள்ளார்.

இந்நிலையில், தன்மானமுள்ள பெரியார் தொண்டர்கள் இனியும் இந்தத் துரோகத்தையும் அவமானத்தையும் சகித்துக் கொண்டிராமல், வீரமணியின் மடத்தை விட்டு வெளியே வரவேண்டும். மார்க்சிய-லெனினிய புரட்சியாளர்கள்தான் பெரியாரின் கொள்கைகளைச் சமரசமின்றி முன்னெடுத்துச் செல்கின்றனர் என்பதை உணர்ந்து பார்ப்பனியத்தை வீழ்த்த ஓரணியில் திரள வேண்டும்.

● முத்து



எந்தவொரு அயோக்கியத்தனமானாலும், ''அதனைப் பார்ப்பனரல்லாதோர் செய்தால் ஆதரிப்போம்; அதனை மூடிமறைக்க 'பார்ப்பனர்கள் சூழ்ச்சி' என்று முத்திரை குத்துவோம்'' என்பதுதான் தி.க. வீரமணி உள்ளிட்ட திராவிட மற்றும் தமிழினவாதிகளின் எளிய சித்தாந்தம்.

தினகரனின் திருவிளையாடலால் நிலங்களை இழந்தவர்களில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினர் என்பதை மறைத்துவிட்டு 'வசதியானவர்களின்' சமூகநீதியை மட்டும் கோருகிறார் வீரமணி. தினகரன் தாழ்த்தப்பட்டவர் என்றாலும், அவர் பறித்ததும் தாழ்த்தப்பட்டவர்களின் நிலங்களைத்தான் என்ற உண்மை அப்பட்டமாய்த் தெரிவதால், ஒரு சில பிழைப்புவாத - பெயர்ப்பலகை அமைப்புகளைத் தவிர, அவருக்கு ஆதரவாக தலித் இயக்கங்கள்கூட குரல் கொடுக்க முன்வரவில்லை.

திராவிட இயக்கங்கள் தனது சந்தர்ப்பவாதத்தை மூடி மறைத்து, நியாயப்படுத்த நீண்டகாலமாகப் பயன்படுத்திவரும் வாதமான 'பார்ப்பன சூழ்ச்சியை'த்தைத்தான் வழக்கம் போல வீரமணி, தினகரனின் நிலமோசடியிலும் எடுத்து விட்டிருக்கிறார். ஆட்சிக் கவிழ்ப்பாகட்டும், கட்சித் தாவலாகட்டும் அனைத்துக்கும் 'பார்ப்பன சதியும் சூழ்ச்சியுமே' திராவிட இயக்கங்களால் காரணமாகக் கற்பிக்கப்பட்டன. இன்று, இது மிகவும் மலினப்படுத்தப்பட்டு அனைத்து சமூக அநீதிகளையும் நியாயப்படுத்தும் கவசமாக்கப்பட்டு விட்டது.

1987-89 ஆண்டுகளில், பஞ்சாப்-ஹரியானா உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த, நீதிபதி ராமசாமி பல்வேறு அதிகார முறைகேடுகள் செய்து, பல லட்சரூபாய் அரசுப்பணத்தைச் சூறையாடியது அம்பலமானது. 'சூத்திர' ராமசாமி மீது நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் (இம்பீச்மென்ட்) வந்தபோது அதனை ''பிற்படுத்தப்பட்டோருக்கு எதிரான பார்ப்பனர்களின் சதி'' என்றும், ''ராமசாமிக்காக தூக்கில் தொங்கவும் தயார்'' என்றும் அறிவித்து, இந்த ஊழல் பெருச்சாளிக்கு முட்டுக் கொடுத்தார் வீரமணி. இவ்வாறு புழுத்து நாறிய ஊழலை சமூகநீதிப் போர்வையால் மறைக்கும் தந்திரத்தை ஏற்கெனவே செய்தவர்தான் இவர்.

2001 தேர்தலில் 4 தொகுதிகளில் வேட்புமனு செய்ததால் தகுதி இழந்த ஜெயலலிதாவை அரசியல் சட்டத்துக்கு விரோதமாக முதல்வராக்கினார் அப்போதைய ஆளுநர் பாத்திமா பீவி. இதன் பின்னணியில் பல கோடிகள் கைமாற்றப்பட்டதாக அப்போதைய எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. அப்போது ஜெயாவின் தலைமைப் பூசாரியாக இருந்த வீரமணியோ, பாத்திமா பீவியைக் காப்பாற்ற ''சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதனால்தான் ஆளுநர் மீது அபாண்டமாகப் பழி போடுகின்றனர்'' என்று அறிக்கை விட்டார்.

இவ்விசயத்தில் வீரமணிக்கு தமிழினவாதிகள் சற்றும் சளைத்தவர்களில்லை. அடுத்தவன் மனைவியை அபகரிப்பதற்காக கூலிப்படை வைத்துக் கொலை செய்த சரவணபவன் அதிபர் ராஜகோபால் கைதைக்கூட, தமிழ்ச்சான்றோர் பேரவையின் 'நந்தன்வழி', பார்ப்பனச் சதி என்றது. 'மூலிகை பெட்ரோல் மோசடி' செய்த ராமர்பிள்ளையின் பித்தலாட்டங்கள் பத்திரிக்கைகளிலும் ஐ.ஐ.டி.யிலும் அம்பலமானபோது, தமிழினவாதிகள் ''பார்ப்பனிய சூழ்ச்சியால் தமிழ் விஞ்ஞானியின் சாதனைகள் மறைக்கப்படுகின்றன'' என்று சமூகநீதிக் கவசம் ஏந்தினார்கள். சேத்துப்பட்டுப் பகுதியை நடுங்க வைத்துக்கொண்டிருந்த தங்கையா என்ற ரவுடியை எதிர்த்து ம.க.இ.க. களமிறங்கியபோது ''ஒரு தலித் தலைவரை ம.க.இ.க. எதிர்ப்பதன் பின்னணி என்ன?'' என்று தலித் பிழைப்புவாதிகள் எதிர்வாதம் புரிந்தனர். வி.பி.சிங்கின் அரசியல் பித்தலாட்டங்களை விமர்சித்தால், உடனே ''இது பார்ப்பனியம்'' என்று முத்திரை குத்த இன்றைய சமூகநீதிக் காவலர்கள் ஓடோடி வருகின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால், எந்த விசயமானாலும் எந்த அயோக்கியத்தனமானாலும் ''பார்ப்பனரல்லாதோர் செய்தால் அதனை ஆதரிப்போம்; இது நம்ம ஆளு என்று நியாயப்படுத்துவோம்; அந்த அயோக்கியத்தனங்களை மூடிமறைக்க 'பார்ப்பனர்கள் சூழ்ச்சி' என்று முத்திரை குத்துவோம்'' என்பதுதான் இவர்களின் எளிய சித்தாந்தம். இதில் வீரமணி முதல் தமிழினவாதிகள் வரை பலதரப்பினரும் ஒன்று சேர்கிறார்கள். இவ்வாறு சமூகநீதி இவர்களால் மலினப்படுத்தப்பட்டிருப்பதால், பார்ப்பன சக்திகள் செய்யும் மிகப்பெரிய சூழ்ச்சிகள்-சதிகள்-ஊழல்கள் கூட மறைக்கப்பட்டுவிடுகின்றன.

● செங்கதிர்

# இது இன்னும் நீடிக்கலாமா?

பு.ஜ. இதழின் 25-ஆம் ஆண்டு தொடங்குவதை முன்னிட்டு, கடந்த கால பு.ஜ. இதழ்களில் வெளியான முக்கியமான, இன்றைய சமூக நிகழ்ச்சிப் போக்குக்கும் பொருந்தக் கூடிய சமூக - அரசியல் - பொருளாதார விமர்சனக் கட்டுரைகளை இவ்விதழ் தொடங்கி மீண்டும் வெளியிடுவது என முடிவெடுத்திருக்கிறோம். இக்கட்டுரைகள், பு.ஜ.வின் புதிய மற்றும் இளம் வாசகர்களுக்குக் கடந்த கால அரசியல் நிகழ்வுகள் குறித்த விவரங்களைத் தருவதாகவும்; பு.ஜ.வின் நீண்டநாள் வாசகர்களுக்கு ''மலரும் நினைவு''களாக அமைவதாகவும் இருப்பதோடு, அந்நிகழ்வுகள் குறித்த பு.ஜ.வின் முடிவுகள் கால ஓட்டத்தில் சரியென நிரூபிக்கப்பட்டிருப்பதை இரு தரப்பும் உரசிப் பார்த்துக் கொள்ள உதவும் என நம்புகிறோம்.

இந்த அடிப்படையில் பு.ஜ.வின் முதலாம் ஆண்டு, முதல் இதழில் வெளியான ''இது இன்னும் நீடிக்கலாமா?'' என்ற கட்டுரை இங்கு மீண்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ''அரசுதான் மிகப் பெரிய ஆதிக்க - சுரண்டல் - அடக்குமுறை நிறுவனம்'' என்ற மார்க்சிய-லெனினிய கருத்தினை, நடைமுறை உதாரணங்களோடு எளிய முறையில் விளக்கும் இக்கட்டுரை, அன்று போலவே இன்றும் காலப் பொருத்தத்துடன் இருப்பதை, வாசகர்கள் படிக்கும்பொழுது அறிந்து கொள்வார்கள்.

— ஆசிரியர் குழு

மிட்டாமிராசுகளும், முதலாளிகளும் கொள்ளையடிக்கும்போது கோபமடைகிறோம்.

வட்டிக் கடைக்காரர்களும், வியாபாரிகளும் மோசடி செய்யும்போது ஆத்திரப்படுகிறோம்.

சாதி, மத, இன வெறியர்கள் மக்களைப் பிளவுபடுத்தி மோதவிட்டு மனித ரத்தம் குடிக்கும்போது உள்ளங் கொதிப்படைகிறோம்.

ஆபாச, அராஜக வன்முறை கலாச்சாரக் கேடுகளால் மாணவர்கள் இளைஞர்கள் சீரழியும்போது வேதனைப் படுகிறோம்.

இவையாவும் நியாயமானதே! போலி கம்யூனிஸ்டுகளும், முதலாளித்துவ சீர்திருத்தவாதிகளும் கூட இவற்றுக்கெதிராக எப்போதாவது குரல் எழுப்புகின்றனர்.

ஆனால் சிரத்தையுடனும், ஆழமாகவும் தொகுப்பாகவும் பார்க்கத் தவறுவதால் பரந்துபட்ட மக்களில் பலரும் தம் கண்ணுக்கு முன்னமேயே நடக்கும் சில உண்மைகளை அறிவதில்லை. சிலர் தெரிந்ததும் சும்மா இருக்கின்றனர்.

முதலாளித்துவ சீர்திருத்தவாதிகளும் போலி கம்யூனிஸ்டுகளும் வேண்டுமென்றே இந்த உண்மைகளை மூடி மறைக்கின்றனர். பிரச்சினைகளைத் திசை திருப்பி அவற்றை அறியாதவாறு செய்கின்றனர்.

இதை நீங்கள் பார்க்கவில்லையா? எந்தவொரு தனி நபர், குழு, வர்க்கத்தையும் விட மிகப்பெரிய மோசடி, கொலை, கொள்ளை, சாதிமத - இனவெறி சமூகக் கலாச்சார சீரழிவு நிறுவனமே அரசுதான்.

நீதி ஒழுங்கு, அமைதி ஆகியவற்றை நிர்வகிப்பதாகக் கூறிக் கொள்ளும் அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் அடங்கிய அரசுதான் அவற்றுக்கு நேரெதிரான மிகப் பெரும் நிறுவனம்.

அரசின் அன்றாட செயல்பாடுகளைப் பாருங்கள். இந்த உண்மைகள் துலாம்பரமாக விளங்கும்.

அரசு மிகப்பெரிய அடக்குமுறை நிறுவனம்: பிக்பாக்கெட் குற்றவாளியை இரு சக்கர வாகனத்தில் கட்டி இழுத்துச் சென்று வதைக்கும் போலீசின் மிருகவெறி; கண்ணியமான படித்த வர்க்கத்தையும் பதம் பார்க்கும் போலீசு தடியடி.





அரசு - தனிப்பெரும் சுரண்டல் நிறுவனம்

● அரசு, பஸ்-லாரி போக்குவரத்துக் கழகங்கள் நடத்துகிறது. பல தவணைகளில் தன் விருப்பம் போல் கட்டணங்களை உயர்த்திக் கொள்கிறது.

● அரசு, ரயில், தபால்-தந்தி நிறுவனங்களை நடத்துகிறது. ஆண்டுதோறும் கட்டணங்களை உயர்த்திக் கொள்கிறது.

● அரசு மின் வாரியம் நடத்துகிறது. மீட்டர் வாடகை மற்றும் மின் கட்டணங்களை எதேச்சையாக ஏற்றிக் கொள்கிறது.

● இரும்பு, எஃகு, நிலக்கரி, இராசயன உரம், மருந்து, மின்னணு, தொலைபேசி, தொலைக் காட்சி, புகைப்படச் சுருள், பால், ரொட்டி இப்படிப்பட்ட சகல துறைகளிலும் உற்பத்தி செய்வதோடு, ஏகபோகமாக இருந்து கொள்ளையடிக்கிறது. 'பொதுத்துறை', 'அரசுடைமை', 'தேச உடைமை' என்று சொல்கிறது. இதனால் மக்களுக்கும் நன்மை இல்லை; இந்நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் நன்மை இல்லை. அதிகார வர்க்கம் ஊதிப் பெருக்கவே இவை உதவுகின்றன.



அரசின் போலி மதச்சார்பின்மை:
இந்து முறைப்படி குத்து விளக்கேற்றி அரசு விழாவைத் தொடங்கி வைக்கும் பிரதமர் மன்மோகன் சிங்.

● கூட்டுறவுகள் கூட்டுக் கொள்ளை நிறுவனங்களாகியுள்ளன. எந்தக் கூட்டுறவிலும் பங்குதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது இல்லை. நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் லஞ்ச, ஊழல் லாவண்யங்கள் தான் நடக்கின்றன.

● அரசு, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் நடத்துகிறது. அதிலும் கூட லாப வேட்டையாடுகிறது. மதுரை பல்கலைக்கழகத்திற்கு அஞ்சல் வழிக் கல்வியில் மட்டும் ஆண்டுதோறும் இரண்டு கோடி ரூபாய் நிகர லாபமாம்!

● பால், மீன், முட்டை, கறி இவற்றை மலிவு விலைக்கு மக்களுக்கு வழங்குவதாக நிறுவனங்கள் தொடங்கினர். ஆரம்பத்தில் மலிவாக இவற்றைத் தந்தார்கள்; இப்பொழுதோ 50 மில்லி சூடான பால் 75 காசு; 50 மில்லி இனிப்புத் தயிர் ஒரு ரூபாய்; 100 மில்லி குளிர்ந்த பால் ரூபாய் 1.20; 'டீக்கடை'க்காரனும், கசாப்புக் கடைக்காரனும்கூட இரக்கமுடையவனாக இருப்பானோ என்று சந்தேகமெழுகிறது.

இப்படி அரசு உற்பத்தித் துறையானாலும், சேவைத் துறையானாலும் கொள்ளை மோசடிதான். அதுவும் பல துறைகளில் ஏகபோக ஆதிக்கம் வகிப்பதால் அரசு சண்டப்பிரசண்டம் செய்கிறது. மக்களை ஏமாற்ற சில்லறைத்தனமான பொறுக்கித்தனமான சிலுமிச வேலையும் செய்கிறது.

தபால் கட்டணத்தை உயர்த்தி விட்டு (ஸ்டேஷனரி) தபால் செய்யும் பொருட் செலவு 5 பைசா என்று தனியே பிரித்து புதுப் பெயர் சொல்லி ஏய்கிறது.

உணவு விடுதியில், 'ரொட்டி விலை', 'குருமா விலை' என்று கூறி காசு பிடுங்கும் முதலாளியை விடக் கேவலமாக சில்லரைத் தட்டுப்பாடு என்று கூறி அடுத்த 50 பைசாவுக்கும், ரூபாயுக்கும் இரயில் கட்டணத்தைக் கூட்டியது; கட்டணத்தை உயர்த்த வில்லை. கூடுதல் கட்டணம் (சர் சார்ஜ்) என்று சொல்லி புதுப் பெயர் சூட்டிப் பிடுங்கிக் கொள்கிறது. துரித வண்டியை வேகத்தையோ, வசதியையோ கூட்டாமல் அதிவேக துரித வண்டி என்று புதுப் பெயர் சூட்டி கூடுதல் கட்டணம் பிடுங்கி கொள்கிறது.

இரயில் நிலையத்துக்குள் வந்தாயா? அதற்கும் கட்டணம் என்றது. அதையும் கூட்டிக் கொடு என்கிறது. அரசு பஸ் நிலையத்திற்குப் போனால் காலியாக, பஸ்ஸில் இடமிருந்தாலும் 'பதிவுச் சீட்டு' பெற வேண்டும். குறைவாக சுமை இருந்தாலும் எடை இரசீது பெற வேண்டும்; இப்படியும் இன்னும் பல வகையிலும் கொள்ளை.

இத்தனையும் போதாதென்று வரி போட்டு பிடுங்கிக் கொள்ளாத துறையோ, பொருளோ இல்லை. எம்.ஜி.ஆர். குலேபகாவலி சினிமாவில் பாடியது போன்று 'இட்லி வரி', 'சட்னி வரி', 'ஆம்பிளை வரி', 'பொம்பிளை வரி' போடாததுதான் பாக்கி. சிறுநீர் கழிக்கவும், சைக்கிள் நிறுத்தவும் கூட ஏலம் போட்டு பறித்துக் கொள்கிறது.

அரசு-தனிப்பெரும் சமூகக் கலாச்சார கேடுடைய நிறுவனம்

● அரசு, லாட்டரிக் குலுக்கல் நடத்தி நேரடிக் கொள்ளையில் ஈடுபடுவதுடன் மக்களைச் சூதாட்ட வெறியில் தள்ளுகிறது.

● அரசு, வரி வந்தால் போதுமென்று ஆபாச, அராஜக வன்முறைத் திரைப்படங்களை அனுமதித்து கொள்ளையடிப்பதோடு மக்களை காமக் களிவெறியில் மூழ்கடிக்கிறது.

● அரசு மஞ்சள் பத்திரிகைகளுக்கு விளம்பரம், பிற சலுகைகள் அளித்து மக்களிடையே நஞ்சை விதைக்கிறது.

● அரசு, குதிரைப் பந்தயம் நடத்த அனுமதித்து வரிக் கொள்ளை அடிப்பதோடு, மக்களை சூதாட்ட வெறியில் ஆழ்த்தி வைக்கிறது.

● அரசு, 'கலை விழாக்கள்' என்ற பெயரில் ஆபாச நடன, சூதாட்ட விழாக்களை நடத்திக் கொள்ளையடிப்பதோடு சமூக விரோத சக்திகளை காத்து வளர்க்கிறது.

● அரசு, நட்சத்திர விடுதிகள் நடத்தி சுகபோகங்களை முதலாளிகள் அனுபவிக்கவும், அதிகாரிகள் கூட்டுச் சேரவும், இதற்கு மக்களை மறைமுகமாகக் கொள்ளை அடிக்கவும் உதவுகிறது. அந்நிய ஆபாசக் கலாச்சாரத்தையும் பரப்புகிறது.

ஆக, ஆபாசம், சாராயம், லாட்டரி, சூதாட்டம் என்று மக்களும் நாடும் எக்கேடுகெட்டுச் சீரழிந்தாலும் வருமானமே ஆதாயமாகக் கொண்டு சீரழிக்கிறது. அரசு, விபச்சாரம் நடத்தவும் தயங்காது என்ற நிலைக்குச் சென்றுள்ளது. ஏற்கெனவே நட்சத்திர விடுதிகள், அழகு நிலையங்களில் விபச்சாரமே முக்கியத் தொழில் என்றறிந்தும் உரிமம் வழங்கி ஆசீர்வதிக்கிறது.

தனிப்பெரும் சமூக கலாச்சார சீரழிவு நிறுவனமாக உள்ள இந்த அரசுதான் - 'சாத்தான்தான்' வேதம் ஓதுகிறது; 'குடி குடியைக் கெடுக்கும்', 'குடிப்பழக்கம் வீட்டைக் கெடுக்கும்', 'சிகரெட் பிடிப்பது உடல் நலத்துக்கு கேடு' என்று பிரச்சாரம் செய்வதை விதியாக்கியுள்ளது. இது எல்லாம் வேடம்! தெரிந்தே செய்யும் மோசடியல்லவா இது?

### அரசு – தனிப்பெரும் சாதி, மத, இனவெறி நிறுவனம்

● அரசு, சாதிய முறையை ஒழிப்பதற்கு பதில், ஒவ்வொருவரும் பதிவு செய்து முத்திரை குத்தி அங்கீகரித்து ஏற்கும்படி மக்களைக் கட்டாயப்படுத்துகிறது.

● அரசு, மதச் சார்பற்றதாகக் கூறிக் கொண்டாலும் மதங்களை ஆதரித்து, மத நிகழ்ச்சிகளை நடத்தி, மதச் சடங்குபூர்வமாக இயங்குகிறது. அரசு நிறுவனங்கள் ஆயுத பூசை நடத்துகின்றன. திரைப்பட விழாக்களும் பிற திறப்பு விழாக்களும், குத்து விளக்கேற்றி நடத்துகிறது. கல்லணை திறக்கவும் கலெக்டர், சாமிக்குப் பூசை போடுகிறார்.

● அரசு, சிறிய தேசிய இனங்களை ஒருபுறம் ஒடுக்கியும், பெரும் தேசிய இனவெறியைத் தூண்டியும், மொழியைத் திணித்தும் இனவெறிக்குத் தூபம் போடுகிறது!

● அரசு, சாதி-மத, இனவெறிப் படுகொலைக் குற்றவாளிகளை எந்த வழக்கிலும் தண்டிக்காது மன்னித்து அடைக்கலமளிக்கிறது.

● அரசு, கல்வி நிறுவனங்களையும், அறக்கட்டளைகளையும், சாதி, மத, இன ரீதியில் நடத்துவதற்கு அனுமதியளிக்கிறது. அவற்றுக்கு விசேச உரிமைகளும், சலுகைகளும் கூட அளிக்கிறது.

● அரசு, சாதி, மத இனத் தலைவர்களுக்குச் சிலை எடுக்கிறது. விழா நடத்துகிறது. போக்குவரத்துக் கழகங்கள், சாலைகள், மாவட்டங்கள் போன்றவற்றுக்கு அவர்களது பெயர் சூட்டுகிறது.

● அரசின் முக்கிய அங்கமான இராணுவமே சாதி, மத, இன ரீதியாகப் பிரிக்கப்பட்டு இயங்குகிறது.

● அரசு அதிகாரிகள், வாரியத் தலைவர்கள், அமைச்சர் கூட சாதி மத, இன ரீதியில் நியமிக்கப்படுகின்றனர்.

### அரசு–தனிப்பெரும் ஒடுக்குமுறை நிறுவனம்

● மக்கள் போராட்டங்கள் வெடிக்கும் எந்த பகுதியையும் கலவரப் பகுதியாக அறிவித்து, கண்டதும் சுடுகிறது அரசு.

● சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக முகாமிடும் இடங்களில் எல்லாம் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வெறியாட்டமாடுகின்றன, அரசின் பிரதான அங்கமான இராணுவமும், துணை இராணுவமும்.

● சிறை, காவல்நிலையக் கற்பழிப்புகள், கொலைகள் பெருகி வருவதோடு 'காவல்' துறையினரே கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

● அரசே கொலை, கொள்ளை, கற்பழிப்பு நடத்திவிட்டு அவற்றை மறைக்க சட்ட மீறல்கள் செய்வதாக பலமுறை நிரூபிக்கப்பட்டு விட்டன.

● அடக்குமுறை ஆயுதங்களை வைத்துக் கொள்ளும் ஏகபோக உரிமை பெற்றது அரசு.

● அரசினால் தவறாகத் தண்டிக்கப்பட்டவர்கள், பாதிப்புக்குள்ளானவர்கள் நட்ட ஈடு பெற முடிவதில்லை.

● எழுத்துரிமை, பேச்சுரிமை, சங்கம் வைக்கும் உரிமை இன்னும் பிற அடிப்படை உரிமைகள் ஏட்டளவில் இருப்பதையும் பிடுங்கிக் கொள்கிறது, அரசு.

● யாரையும் விசாரணை இன்றிச் சிறைப்படுத்துகிறது; எந்த இயக்கத்தையும் தடை செய்கிறது. எந்த இடத்தையும் உடமையையும் பறித்துக் கொள்கிறது.

● எந்த வழக்கிலும் மக்களுக்கு ஆதரவாக இருந்ததில்லை. முதலாளிகள், மிட்டாமிராசுகளுக்கே ஆதரவாக நிற்கிறது அரசு.

● அரசு நிறுவனத்தினரிடம் சாதாரண மக்கள் பதில் பேசத் துவங்கினாலே ''எங்கிட்டேயே சட்டம் பேசுகிறாயா?'' ''என்னையே எதிர்த்துப் பேசுகிறாயா?'' என்று கேட்டுத் தாக்குகிறது.




அரசே நடத்தும் சாராயக் கடை: நாட்டு மக்களை சாராய போதையில் சீரழித்துக் கொள்ளையடிக்கும் ஏற்பாடு.

● அரசு நிறுவன ஊழியர்களுக்கே ஜனநாயக, குடியுரிமை மற்றும் பிற உரிமைகளை மறுக்கிறது. பல ஆண்டுகளாகியும், 6 லட்சம் தபால்-தந்தி ஊழியர்கள் இன்னும் பிற அரசு அலுவலக, ஆலை ஊழியர்கள் நிரந்தரமின்றியும், சட்ட விரோதமாகவும், சங்கம் வைக்க உரிமை இன்றியும் நசுக்கப்படுகின்றனர். இவ்வாறு எந்த வகையில் பார்த்தாலும் மிகப் பெரும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, தேச விரோத நிறுவனம்தான் அரசு.

''அதிகார வர்க்கம்'' — நாட்டின் நிர்வாகப் பொறுப்பேற்றுள்ள மேதைகள்.

''போலீசு'' நாட்டின் — சட்ட ஒழுங்கு அமைதியின் காவலன்.

''இராணுவம்'' — தேசத்தின் எல்லைகளைக் காக்கும் புனிதம்.

''நீதிமன்றம்'' — அக்கிரமங்களை வீழ்த்தும் நீதியின் நிலைக்களன்.

''சிறைச்சாலை'' — குற்றவாளிகளைத் திருத்தி நல்ல குடிமகனாக்கும் பட்டறை.

இப்படி நம்ப வைக்க எத்தனையோ முயற்சிகள் நடக்கின்றன. இந்த அரசு விசுவாசமே, அரும்பியதிலிருந்து அந்திமக் காலம் வரை இந்தியக் குடிமகனின் மண்டையில் ஏற்றப்படுகிறது.

''இரண்டு தனிநபர்களுக்கிடையில், இரண்டு பிரிவுக் கூட்டத்திற்கிடையில், இரண்டு வர்க்கத்திற்கிடையில் தனிநபர் ரீதியிலோ, சாதி,மத இன ரீதியிலோ, வர்க்க ரீதியிலோ ஏற்படும் எல்லாத் தகராறுகளையும் தீர்த்து வைப்பதற்கானதுதான் அரசு; அல்லது சமரசப்படுத்துவதற்கானது அரசு. குடி தண்ணீர், சுகாதாரம், பாதை, கல்வி இன்னும் பிற பொதுக் காரியங்களை அனைத்து மக்களின் நலன் கருதி ஆற்றுவதுதான் அரசு.''

''உள்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி நாட்டில் அமைதி நிலவச் செய்வதும் அந்நிய ஆக்கிரமிப்பிற்கெதிராக, தேசத்தைக் காப்பதும் அரசு. ஆகவே, வரி போடுவதிலிருந்து, தனக்குக் கட்டுப்படாத எந்த ஒரு நபரையும் சுட்டுக் கொல்வது வரை சகல அதிகாரமும் அதற்கு இருப்பது எந்த வகையிலும் நியாயமானதே. இவை அதற்குள்ள புனிதமான உரிமைகள். அரசாங்க நிர்வாகத்திலுள்ள எம்.ஜி.ஆரோ, இந்திராவோ தவறு செய்யலாம்; அவர்களைக் கண்டிக்கலாம், விமர்சிக்கலாம், எதிர்க்கலாம். ஆனால் அரசை எதிர்ப்பதோ, விமர்சிப்பதோ அனுமதிக்க முடியாது. அது தேசத் துரோகம்; சட்ட விரோதம்.''

● இவைகள் கல்வி நிறுவனங்களில் நாளும் கற்றுத் தரும் பாடங்கள்.

● இவைதான் ஆளும் வர்க்க பிரச்சார பீரங்கிகள் முழங்கும் கோசங்கள்.

● இவைதான் தேர்தல் அரசியல் கட்சிகளின் மேடைப் பிரசங்கங்கள்.

இல்லை; அரசு ஓர் அதிகாரத் திமிர் பிடித்த கொலை-கொள்ளைக் கூட்டம் என்றே மக்களின் அன்றாட அனுபவங்கள் காட்டுகின்றன. ஆனால் இவ்வளவு பெரிய அரசில் அங்கேயோ, இங்கேயோ சில தவறுகள் நடக்கலாம். அதைச் சரி செய்து விடலாம் என்று முதலாளித்துவ சீர்திருத்தவாதிகள் மக்களுக்கு நம்பிக்கையூட்ட முயலுகின்றனர்.

போலி கம்யூனிஸ்டுகளோ, தாங்கள் தேர்தலில் வெற்றி பெற்று ஆளும் கட்சியாகி அரசாங்கம் அமைத்தால் போதும்; அரசு நல்ல பிள்ளையாகி விடும்; ஒழுக்க சீலனாகி உத்தம புத்திரனாகி விடும்; முதலாளிக்கும் - தொழிலாளிக்கும், நிலப்பிரபுவுக்கும்- விவசாயிக்கும் ஏற்படும் தகராறுகளில்கூட போலீசும் கோர்ட்டும் நடுநிலை வகிக்கிறது; முதலாளித்துவக் கட்சிகள் ஆட்சி நடத்துவதானால் தான் அது தவறு செய்கிறது என்று அந்த அரசாகிய வேசிக்கு முக்காடு போட்டு பத்தினியாகப் படம் பிடிக்கின்றனர்.

இவ்வளவு கடைகோடித்தனமாக கேடுகெட்ட அரசை நியாயப்படுத்தி, அது நீடிப்பதை இவர்கள் ஆதரிப்பது ஏன்?

இவர்கள் மறைமுகமாக தொண்டூழியஞ் செய்யும் ஆளும் வர்க்கங்களாகிய நிலப்பிரபுக்களின், தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் நலன்களைக் காக்கும் பெரும் பணியாற்றுகிறது அரசு. அதன் வீழ்ச்சி ஆளும் வர்க்கங்களோடு அதன் அடிவருடிகளுக்கும் மரண அடி கொடுக்கும்.

எனவேதான், நமது நாட்டின் மிகப் பெரும் சுரண்டல் ஒடுக்குமுறை சாதி, மத, இனவெறி மற்றும் சமூக கலாச்சார சீரழிவு நிறுவனமான அரசை அதன் பிரதான அங்கமாகிய அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதிமன்றம், சிறைச்சாலை அடங்கிய அரசு அமைப்பைத் தூக்கியெறிவது ஒன்றுதான் உண்மையில் புரட்சியாகும் என்று கம்யூனிசப் புரட்சியாளர்கள் பிரகடனப்படுத்துகின்றனர்.

● ஆர்.கே.

# "ஆயுத வழிபாடு விடுதலையைத் தராது!"

**ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் குறித்து, இலங்கையைச் சேர்ந்த மார்க்சிய இலக்கிய விமர்சகர் தோழர் சிவசேகரம் அளித்த நேர்காணல்.**

இலங்கையைச் சேர்ந்த மார்க்சிய இலக்கிய விமர்சகர் தோழர் சிவசேகரம் பு.ஜ.விற்கு அளித்த நேர்காணலின் இரண்டாம் மற்றும் இறுதிப் பாகம் இங்கு வெளியிடப்பட்டுள்ளது. தமிழீழக் குழுக்களின் சர்வாதிகாரப் போக்கு, அவற்றின் துரோகம் மற்றும் ஈழ சுயநிர்ணயப் போராட்டத்தில் இலங்கையைச் சேர்ந்த மா-லெ புரட்சியாளர்கள் செல்வாக்கு செலுத்த முடியாமல் போனதற்கான காரணம் உள்ளிட்ட பல முக்கிய கேள்விகளுக்கு, அவர் அளித்த பதில்கள் சுருக்கித் தரப்பட்டுள்ளன. அவரது நேர்காணல் குறித்து வாசகர்களின் கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.


— ஆசிரியர் குழு

பு.ஜ: கல்வியறிவு பெற்றவர்கள் எனக் கூறப்படும் யாழ்ப்பாணத் தமிழர்கள், விடுதலைப் புலிகளின் சர்வாதிகாரப் போக்கை எந்த அடிப்படையில் சகித்துக் கொண்டார்கள்? சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை என்ற அபாயம் காரணமாகவா? இல்லை, தமிழ்ச் சமூகமே ஜனநாயக மறுப்புத் தன்மையுடைதாய் இருந்து வருகிறதா?

சிவசேகரம்: எந்த ஒரு சமூகத்தை எடுத்துக் கொண்டாலும் கல்வியறிவு என்பது உயர் நடுத்தர வர்க்க, நடுத்தர வர்க்கங்களுக்கு மட்டுமே உரியதாக இருக்கிறது. யாழ்ப்பாண சமூகத்திலும் அப்படித்தான். யாழ்ப்பாணத்துப் பொருளாதாரமே முதலாளித்துவப் பொருளாதாரம் அல்ல. சிங்கள முதலாளிகளோடு ஒப்பிடும்போது, மஹாராஜா போன்ற ஓரிருவரைத்தான் யாழ்ப்பாணத்து முதலாளிகளாகச் சொல்ல முடியும். உற்பத்தியிலோ, வணிகத்திலோ யாழ்ப்பாணத்து சமூகம் ஓங்கியிருக்கவில்லை. உற்பத்தியில் சிங்கள முதலாளிகளும், வணிகத்தில் முசுலீம் மக்களும் முன்னிலை வகிக்க, அதன் பின்தான் தமிழ் மக்கள் வருகிறார்கள். தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வலுவான முதலாளி வர்க்கம் இல்லை. ஒரு இடைநிலை முதலாளி வர்க்கம்தான் உள்ளதாகச் சொல்லலாம்.

இந்நிலையில் படித்தவர்கள் என்பவர்கள் ஒரு சேவை செய்யும் நிலைமையில்தான் உள்ளனர். அரசு உத்தியோகஸ்தர்கள், தனியார் நிர்வாகிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் முதலான வேலைகள்தான் யாழ்ப்பாணத்து படித்தவர்க்கம் பார்த்து வந்த வேலைகள். தரப்படுத்தலுக்குப் பிறகும், போர்க் காரணங்களினாலும் இப்படித்த வர்க்கத்தினரின் பெரும்பகுதியினர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். சிறு பகுதியினர்தான் தனிப்பட்ட காரணங்களுக்காகவோ, நாட்டுப்பற்று காரணமாகவோ இங்கேயே தங்கினர். இதைத் தவிர்த்துச் சாதாரண மக்கள், ஏழை எளியோர், வெளிநாடு செல்ல முடியாத மக்களும் உள்ளனர்.

அடுத்து, இந்தக் கல்வியறிவே சமூக சீர்திருத்தத்தைக் கொண்டு வந்ததாகச் சொல்ல முடியாது. சில இடதுசாரி-முற்போக்கு பிரிவினரைத் தந்ததைத் தவிர, இந்தப் படித்த, வர்க்கம் சாதி ஆதிக்கம், பிற்போக்கு கண்ணோட்டத்தையே கொண்டிருந்தது. எனவே, அளவுக்கதிகமாக யாழ்ப்பாணத்துக் கல்வியறிவை மதிப்பிட முடியாது என நினைக்கிறேன்.




பு.ஜ: போராளிக் குழுக்களிடையே நடந்த சகோதரக் கொலைகளுக்கும், பல குழுக்கள் துரோகிகளாகச் சீரழிந்து போனதற்கும் இந்திய உளவு அமைப்பான ''ரா''வை மட்டும் குற்றஞ்சுமத்த முடியுமா?

சிவசேகரம்: சீனாவிலும், ஆப்கானிலும் இருந்த யுத்தப் பிரபுக்களைப் போலவே இந்த இயக்கங்களும் செயல்பட்டன. இவர்கள் ஒவ்வொருவரும் தமிழ் மக்களின் உரிமைகளைத் தாங்கள்தான் வென்றெடுக்க முடியும், மற்றவர்களால் முடியாது என்ற கருத்தை வைத்திருந்தனர். இது ஒரு வியாபாரப் போட்டி போல நடந்தது. இதன் காரணமாக இயக்கங்களிடையேயும், இயக்கங்களுக்குள்ளேயும் மோதல்கள் நடைபெற்றன. இந்த மோதல்களுக்கான அடிப்படை என்னவென்பது மக்களுக்குச் சொல்லப்படவில்லை. மேலும், மக்களிடையே இது தொடர்பான ஜனநாயக விவாதங்களுக்கு பல சந்தர்ப்பங்களில் வாய்ப்பு மறுக்கப்பட்டிக்கிறது.

**சீனாவிலும், ஆப்கானிலும் இருந்த யுத்தப் பிரபுக்களைப் போலவே தமிழீழ இயக்கங்களும் செயல்பட்டன.**

**கருணாவைத் தனிமனிதனின் துரோகமாக மட்டும் மதிப்பிட முடியாது. கருணாவுக்கும், டக்ளஸ் தேவானந்தாவிற்கும், ஆனந்த சங்கரிக்கும் வித்தியாசம் கிடையாது.**

தமிழ் காங்கிரஸ் காலத்திலிருந்தே ஜனநாயகம் என்பதே தமிழ் தேசிய இன வரலாற்றில் பலவீனமாகத்தான் இருந்து வந்துள்ளது. இடதுசாரிகளைத் தமிழ்த் தேசியத்தின் துரோகிகளாக முத்திரை குத்திய பிறகு, அவர்களுக்கு மறுக்கப்பட்ட ஜனநாயக உரிமை, பின்பு தொடர்ச்சியாக தேசியவாத முகாமுக்குள்ளாகவே மாற்று கருத்துக்களை விவாதிக்க முடியாது என்ற நிலைமையாகத் தொடர்ந்தது. இயக்கங்களுக்குள்ளாகவே கருத்து முரண்பாடுகள் வன்முறையால் தீர்க்கப்பட்டன. ஒரு இயக்கம் என்று விதிவிலக்கில்லாமல், எல்லா இயக்கங்களிலும் தலைமைப் போட்டி பல கொலைகளுக்குக் காரணமாக இருந்தது. இந்நிலைமைகளில், ஜனநாயக மரபு என்பது தமிழ் மக்களிடையே செழுமையாக வளரவில்லை என்பதையே நான் பார்க்கிறேன். சாதி, தீண்டாமைக்கெதிராக கம்யூனிஸ்டுகள் தொடங்கிய போராட்டத்தின் போது மக்களிடையே இருந்த ஜனநாயக மரபு, பின்பு தமிழ்த் தேசிய முகாமால் தடை செய்யப்பட்டது.

**பு.ஜ: கருணா வெளிப்படையாக வந்து பிரபாகரனின் சடலத்தை அடையாளம் காட்டுகிறார்; அமைச்சராக வலம் வருகிறார். இந்தத் துரோகத்தை ஈழத்தமிழ் மக்கள் எங்கனம் பார்க்கிறார்கள், சகித்துக் கொள்கிறார்கள்?**

சிவசேகரம்: சடலத்தை அடையாளம் காட்டியதைத் துரோகம் என்று சொல்ல முடியாது. மேலும், கருணாவை ஒரு தனி மனிதனின் துரோகமாக மட்டும் மதிப்பிடமுடியாது. அடிப்படையில் கருணாவின் செயலுக்கும் மற்ற இயக்கங்களின் செயல்பாடுகளுக்கும் வித்தியாசமில்லை. எல்லாருமே தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவதாகச் சொல்கிறார்கள். இறுதியில், அரசாங்கத்தோடு போய்ச் சேர்ந்து கொள்கிறார்கள். மற்றவர்கள் செய்யாத ஒன்றை இங்கே கருணா செய்துவிடவில்லை. ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், மற்றவர்கள் தமது ஆயுதத்தைக் கைவிட்டுவிட்டு அரசோடு சேர்ந்தார்கள்; கருணா ஆயுதங்களை வைத்துக் கொண்டு இராணுவத்தின் உதவியோடு போராடுகிறார். கருணாவுக்கும், டக்ளஸ் தேவானந்தாவிற்கும், ஆனந்த சங்கரிக்கும் அடிப்படையில் வித்தியாசம் கிடையாது. மற்றவர்களை விட, கருணா அரசாங்கத்திற்குக் கூடுதலாகப் பயன்பட்டார் என்று வேண்டுமானால் சொல்லலாம். இந்த இறுதிப்போரில்கூட கருணாவின் பங்களிப்பு அதிகமானதுதான். ஏனென்றால், புலிகளின் போர் தந்திரம் முதலான விசயங்கள் இவருக்கும் தெரியுமென்பதால், இராணுவம் நன்கு பயன்படுத்திக் கொண்டது.

கருணாவின் விசயத்தில் மட்டக்களப்பு-யாழ்ப்பாணத்து முரண்பாடு, கருணாவின் கூட்டாளிகளை அரசு வென்றெடுத்தது, கிழக்கு மாகாணத்தில் கருணாவுக்கு இருந்த செல்வாக்கு எல்லாமும் இருக்கிறது. கூடுதலாக அரசின் ஆதரவும் உள்ளது. கருணாவைவிட, பிள்ளையானுக்குத் தனிப்பட்ட செல்வாக்குக் கூடுதலாக உண்டு. இருப்பினும் கருணாவோ, பிள்ளையானோ அரசு அனுமதிக்கும் அளவில்தான் தமிழ் மக்களுக்கு ஏதோ சில உதவிகள் செய்ய முடியும். அதைத் தாண்டி அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது. இது அவர்களுக்கு மட்டுமல்ல; அரசாங்கத்தோடு இணைந்து செயல்படும் தமிழ் அரசியல்வாதிகள், முசுலீம் அரசியல்வாதிகள், மலையக அரசியல்வாதிகள் அனைவருக்கும் பொருந்தும்.

வடக்கு, கிழக்கு என்ற பிரதேசவாதத்திற்கும், சாதியவாதத்திற்கும் எதிராக அல்லது இந்தப் பிரச்சினைகளை, முரண்பாடுகளை புலிகள் சரியாகக் கையாளவில்லை. இவற்றை இடதுசாரிகள் முன்வைத்தபோதெல்லாம், அவர்கள்தான் இந்தப் பிரச்சினைகளை எழுப்புகிறார்கள் என்று பதிலளிக்கப்பட்டது. ஆனால், இருக்கும் யதார்த்தமான பிரச்சினைகளைத்தான் இடதுசாரிகள் முன்வைத்தார்கள். கருணாவின் பின்னே இப்படி ஒரு உண்மையும் இருக்கிறது. டக்ளஸ், கருணா முதலானவர்கள் தமக்குக் கிடைத்திருக்கும் வரம்புக்குட்பட்ட அரசு அதிகாரத்தைக் கொண்டு மக்களுக்கு சில உதவிகளைச் செய்து ஒரு சமூக அடித்தளத்தை - அது சிறுபான்மையாக இருந்தாலும் உருவாக்கிக் கொள்கிறார்கள். அதே சமயம், பொதுவில் தமிழ் மக்கள் இவர்களுடைய அரசியலில் நம்பிக்கை கொள்ளவில்லை அல்லது ஏற்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

இத்தகைய அரசு சார்பு குழுக்கள் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் புலிகளின் ஆதரவாளர்களைக் கொல்வதா

**சிங்கள இனவெறி பாசிஸ்டுகளால் கொல்லப்பட்ட பிரபாகரன் சடலத்தை அடையாளம் காட்டும் துரோகி கருணா. (கோப்புப் படம்).**



கவும் தெரிகிறது. அந்த நோக்கத்திற்காக இவர்கள் ஆயுதம் வைத்திருப்பதை அரசு அனுமதிக்கிறது. என்றைக்கு அந்த ஆயுதங்களுக்குத் தேவையில்லை என அரசு கருதுகிறதோ, அன்று அவர்கள் ஆயுதங்களை மீள அளிக்க வேண்டும்.

**பு.ஜ: ''பிரபாகரன் ஆயுதம் தாங்கிய அமிர்தலிங்கம்; அமிர்தலிங்கம் ஆயுதம் ஏந்தாத பிரபாகரன்'' - என இலங்கை புதிய ஜனநாயகக் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான தோழர் செந்தில்வேல் கருத்துக் கூறியிருக்கிறார். எதன் அடிப்படையில் அப்படி ஒரு ஒப்புமை செய்யப்பட்டு விமர்சிக்கப்பட்டது என விளக்க முடியுமா?**




''பிரபாகரன், ஆயுதம் ஏந்திய அமிர்தலிங்கம்; அமிர்தலிங்கம், ஆயுதம் ஏந்தாத பிரபாகரன்'' என்பதுதான் அவர்கள் இருவரின் அரசியலைப் பற்றிய மார்க்சிய - லெனினியவாதிகளின் வரையறை.

சிவசேகரம்: அண்மையில் ஒரு நேர்காணலில் தோழர் செந்தில்வேல் இப்படிக் கூறியுள்ளார். இதை முன்பே கூறியிருக்கலாம் என்றாலும், இப்போதுதான் நன்கு எடுபடுகிறது. ''போர் என்பது ஆயுதம் ஏந்திய அரசியல், அரசியல் என்பது ஆயுதம் ஏந்தாத போர்'' என மாவோ கூறியதன் அடிப்படையில் இந்தக் கூற்றை விளங்கிக் கொள்ளலாம்.

அமிர்தலிங்கம், பிரபாகரன் இருவருமே தமிழ் தேசியவாதத்தை முன்னெடுத்ததில் நிறைய ஒற்றுமைகள் இருக்கிறது. குறுந்தேசியவாதம், ஜனநாயக மறுப்பு, தமிழ்தேசியவாதத்திற்கெதிரான எல்லா மாற்றுக் கருத்துக்களையும் நிராகரிப்பது என நிறைய சொல்லலாம். துரையப்பாவின் கொலையை அமிர்தலிங்கம் ஆதரித்தவர், அதற்குக் காரணமாக இருந்தவர் என்று சொல்லக்கூடிய அளவில் அவருடைய நிலைப்பாடு இருந்தது. அமிர்தலிங்கம் கையில் துப்பாக்கி இருக்கவில்லையே தவிர, தனது நிலைக்கு மாறான அரசியல்வாதிகளுக்கு இயற்கையான மரணம் இல்லை என்றெல்லாம் கூட அவர் சொல்லியிருக்கிறார். இவற்றையெல்லாம் வைத்துப்பார்த்தால், இந்த உவமை பொருத்தமாகத்தான் இருக்கிறது.

தமிழீழ நிலைப்பாட்டுக்கெதிரான கொள்கையுடைவர்களை எந்தெந்த வகையில் அழிக்க முடியுமோ, அந்த வகையில் அழிப்பதை ஆதரிப்போம் என்பதே அமிர்தலிங்கத்தின் கொள்கை. இப்படி தனிநபர்களை அழிப்பதன் மூலம் ஒரு சமூகமாற்றம் வராது என்பதும், அப்படி ஒரு தனிநபரை அழிக்க வேண்டுமென்று ஒரு கருத்து வருவதாக இருந்தால், அது மக்களிடமிருந்தே வரவேண்டும். பிரபாகரனோ, அமிர்தலிங்கமோ அவர்களே முடிவு செய்வதை நியாயப்படுத்தினார்கள். தமிழரசுக் கட்சியின் நீட்சியாகத்தான் அமிர்தலிங்கமும், பிரபாகரனும் மற்ற பல இயக்கங்களும் தோன்றினார்கள். அரசியல் என்ற அடிப்படையில் இவர்களுக்கிடையே பெரிய வித்தியாசமில்லை. தமிழரசுக் கட்சியினர் அமைதி வழியில் போராடியது தீர்வைத் தரவில்லை என்பதால், இவர்கள் ஆயுதம் எடுத்துப் போராடினாலும் கொள்கை ஒன்றுதான்.

பிரபாகரன், அமிர்தலிங்கம் இருவரிடமும் தமிழீழத்தைத் தவிர, ஏகாதிபத்திய எதிர்ப்போ, மக்கள்திரள் அரசியல்வழியெல்லாம் கிடையாது. அமிர்தலிங்கத்தை விட பிரபாகரன் தீவிர கொள்கை பிடிப்புள்ளவர் என்பதை நான் ஏற்கிற அதே நேரம், அடிப்படையில் இருவருக்கும் வேறுபாடில்லை என்கிறேன். அமிர்தலிங்கம் பின்னாட்களில் எதிர்க்கட்சித் தலைவராக மாறி அரசுடன் சமரசம் செய்து கொண்டார். ஒருவேளை பிரபாகரன் சரணடைந்து கொல்லப்படாமல் இருந்திருந்தால், அவரும் இதையே செய்திருப்பார். இப்போது பிரபாகரனது வாரிசாக கருதப்படும் கே.பி கூட தமிழீழத்தைக் கைவிட்டிருக்கிறார். அவர்களால் முடிந்த போது தமிழீழமும், முடியாத போது சமரசமும்தான் அவர்களுடைய கொள்கை. அதில் பிரபாகரனுக்கும், அமிர்தலிங்கத்திற்கும் வேறுபாடில்லை.

**பு.ஜ: விடுதலைப் புலிகளின் அரசியல் மேற்குலக ஏகாதிபத்தியங்களுக்கோ, இந்தியாவிற்கோ எதிரானதல்ல; இருப்பினும் கிழக்கு திமோர், கொசாவோ போன்று தமிழ் ஈழ விடுதலையை ஏகாதிபத்தியங்கள் ஏன் அங்கீகரிக்கவில்லை? ஏகாதிபத்தியங்களால் முன் தள்ளப்பட்ட அமைதிப் பேச்சு வார்த்தையின் நோக்கம்தான் என்ன? அதன் தோல்விக்கு யார் காரணம்?**

சிவசேகரம்: புலிகளைப் பொறுத்தவரை அவர்களிடம் உழைக்கும் வர்க்கக் கண்ணோட்டமில்லை. அதன் காரணமாக ஏகாதிபத்திய, முதலாளித்துவ உற்பத்தி முறையை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவர்களுடைய கண்ணோட்டமென்பது, ஆக மிஞ்சினால் ஒரு நடுத்தர வர்க்கக் கண்ணோட்டமே. உலகமயமாக்கத்தை

**தமிழரசுக் கட்சியின் நீட்சியாகத்தான் அமிர்தலிங்கமும், பிரபாகரனும் மற்ற பல இயக்கங்களும் தோன்றினார்கள்.**

**ஏகாதிபத்தியங்களை விமர்சிக்காமல் தவிர்ப்பது, ஏகாதிபத்தியங்களைப் பகைப்பது நல்லதல்ல என்ற கண்ணோட்டமே புலிகளிடம் நிலவியது.**

ஆதரிப்பது, ஏகாதிபத்தியங்களை விமர்சிக்காமல் தவிர்ப்பது என்ற வகையில்தான் அவர்கள் செயல்பட்டார்கள். இன்றுவரையிலும் புலிகள், பாலஸ்தீன மக்களுக்காகவோ, ஈராக் மக்களுக்காகவோ குரல் கொடுத்தது கிடையாது. ஏகாதிபத்தியங்களைப் பகைப்பது நல்லதல்ல என்ற கண்ணோட்டமே புலிகளிடம் நிலவியது.

கிழக்கு திமோர், கொசாவோவைப் பொறுத்தவரை இரண்டும் வித்தியாசமான வரலாற்றைக் கொண்டவை. கிழக்கு திமோர் சுதந்திர நாடாக இருந்து, அமெரிக்காவின் ஆசியோடு இந்தோனேஷியாவால் ஆக்கிரமிக்கப்பட்டு, அதற்குக் காரணமான சர்வாதிகாரி வீழ்ந்ததற்குப் பிறகு, இரண்டு வருடங்களாகப் போராட்டம் நடந்து வந்தது. சுகர்த்தோவின் வீழ்ச்சிக்குப் பிறகு, இந்தோனேஷியாவில் நடந்து வந்த விடுதலைப் போராட்டங்கள் தீவிரமடைந்த நேரத்தில், கிழக்கு திமோரை அங்கீகரிப்பது ஏகாதிபத்தியங்களுக்குச் சாதகமாக இருந்தது. அதே நேரம் விடுதலை அடைந்த கிழக்கு திமோர் ஆஸ்திரேலியா, அமெரிக்காவால் நேரடியாக ஆதிக்கம் செய்யப்படும் நாடாகத்தான் இன்று உள்ளது.

கொசாவோவைப் பொறுத்தவரை, யூகோஸ்லாவியா நாடு செர்பியா, போஸ்னியா என்று பிரிக்கப்பட்ட பிறகு, செர்பியா மட்டும் ஒரு சோசலிசக் கண்ணோட்டம் கொண்ட நாடாக நீடிப்பது ஏகாதிபத்தியங்களுக்கு விருப்பமில்லை. எனவே, செர்பியாவை பலவீனப்படுத்துவதற்காக கொசாவோ விடுதலையை ஏகாதிபத்தியங்கள் அளித்தன. இன்று கொசாவோ நாடு அமெரிக்கா மற்றும் நேட்டோவின் தளமாக அந்த பிராந்தியத்தை ஆதிக்கம் செய்வதற்கு உதவுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை, ஏகாதிபத்தியங்கள் முழு இலங்கையையுமே தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க இயலும்போது, தனி ஈழத்தை அவர்கள் ஆதரிக்கவேண்டிய அவசியமில்லை. இந்தக் கருத்தில் இந்தியாவிற்கும் உடன்பாடு இருப்பதாலும், தனி ஈழம் அவர்களால் ஆதரிக்கப்படவில்லை. எந்தக் காலத்திலும் தமிழர்களுக்கென்று ஒரு பாரம்பரியப் பிரதேசம் உள்ளதென்பதை ஏகாதிபத்தியங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதை ஒரு அமெரிக்க தூதர் வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார். இந்தப் பின்னணியில்தான் அமைதிப் பேச்சுவார்த்தைகள் அவர்களால் பயன்படுத்தப்பட்டது. அதில் ரணில் விக்கிரமசிங்கே தேர்தலில் தோற்றது, அமெரிக்கா எதிர்பார்க்காத திருப்பம் ஆகும். இந்தப் பேச்சுவார்த்தை மூலம் புலிகளை நிராயுதபாணியாக்கலாம் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

இசுரேலுக்கும், பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கும் நடந்த பேச்சுவார்த்தையின் நோக்கமும் பி.எல்.ஓ.வை நிராயுதபாணியாக்கி, இசுரேலை பாலஸ்தீன மக்கள் அங்கீகரிக்கவேண்டுமென்பதே. இதை ஏற்றுக் கொள்ளாத வரை, விடுதலைக்காகப் போராடும் பாலஸ்தீன அமைப்புக்களை அமெரிக்கா பயங்கரவாதி என்றே சொல்லும்.

புலிகளுக்கும் அரசாங்கத்திற்கு இரண்டு பேச்சுவார்த்தைகள் நடந்து மூன்றாவதில்தான் சமஷ்டி தீர்வு என்பதில் உடன்பாடு ஒருமனதாக ஏற்கப்பட்டது. இதை இலங்கையில் உள்ள மார்க்சிய-லெனினியவாதிகளும் வரவேற்றனர். ஆனால் புலிகளின் இந்த முடிவு, மேற்கு நாடுகளில் இருக்கும் அவர்களது ஆதரவாளர்களால் ஏற்கப்படவில்லை. அவர்கள், தாங்கள் பணம் கொடுப்பது தமிழ் ஈழத்திற்காகத்தான்; சமஷ்டிக்கல்ல என்பதே அவர்கள் கருத்தாக இருந்தது. புலிகள் தாங்கள் பிரிவினையைக் கோரவில்லை, சமஷ்டியைத்தான் கோருகிறோம் என்பதாகப் பிரச்சாரத்தை எடுத்துச் சென்றிருக்கலாம். அப்படி செய்திருந்தால், உலக நாடுகளின் ஆதரவைக்கூட ஒருவேளை பெற்றிருக்கலாம். ஆனால், புலிகள் அப்படி ஒரு பிரச்சாரத்தை முன்னெடுக்கவில்லை. அரசாங்கமும் சிங்கள மக்கள் மத்தியில் இந்த சமஷ்டி குறித்த முடிவைக் கொண்டு செல்லவில்லை.

சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக நார்வே தூதுக் குழுவினரைச் சந்தித்து உரையாடும் பிரபாகரன் மற்றும் ஆண்டன் பாலசிங்கம். (கோப்புப் படம்).



பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட இருதரப்பும் இப்படி மக்களிடம் பிரச்சாரம் செய்யாமல் இருந்ததற்கு, இருதரப்பிற்குமே வேறு நோக்கங்கள் இருந்தன. யு.என்.பி. அரசுக்கு புலிகளை நிராயுதபாணியாக்கவேண்டும் எனவும், புலிகளைப் பொறுத்தவரை தங்களிடம் மட்டும் முடிந்தவரை அதிகாரங்கள் வரவேண்டுமெனவும் நோக்கங்கள் இருந்தன. அதனால்தான் சமஷ்டி குறித்த பருண்மையான ஆய்வு, கேள்விகளுக்குள் அவர்கள் செல்லவில்லை. மேலோட்டமாகவே பேசிவந்தார்கள். இதனாலேயே பேச்சுவார்த்தை தேக்கநிலையடைந்து போருக்கு இட்டுச் சென்றது.

**புலிப் போராளிகளில் பெரும்பான்மையினர் தலித் மற்றும் ஏழை மக்களாக இருந்த காலத்தில்கூட, புலிகளால் தீண்டாமையை ஒழிக்க முடியவில்லை.**

**பு.ஜ: தமிழீழம் பற்றி பொதுவிவாதம் நடத்தி வெல்லும் அளவிற்கு இருந்த புரட்சிகர கம்யூனிச அமைப்புகள், ஆயுதப் போராட்டம் நடந்த காலத்தில் செல்வாக்கு செலுத்த முடியாமல் போனதற்கு காரணம் என்ன?**

**சிவசேகரம்:** வடக்கு, கிழக்கில் குறிப்பாக யாழ் குடா நாட்டில்தான் இடதுசாரிகள் ஓரளவுக்கு செல்வாக்குடன் திகழ்ந்தார்கள். மற்ற இடங்களில் தொழிற்சங்கம் போன்றவை தவிர, கட்சி ரீதியான செல்வாக்கு இல்லை. யாழ் குடாநாட்டிலும் கூட 1966-ஆம் ஆண்டு மட்டுமே ஒரு கம்யூனிஸ்ட் வேட்பாளர் வெற்றி பெற்றிருக்கிறார். எனவே, ஆரம்பத்திலேயே இடதுசாரிகள் ஒரு வலுவான சக்தியாக இருக்கவில்லை. மற்றது, பாராளுமன்ற இடதுசாரிகள் செய்த துரோகங்கள் மக்களிடையே செல்வாக்கை இழந்ததற்கு முக்கியமான காரணமாகும். 1963 -ஆம் ஆண்டு தொழிலாளி வர்க்கம் நடத்திய மிகப்பெரும் போராட்டத்தை இவர்கள் காட்டிக் கொடுத்தார்கள். இப்படி தொழிலாளி வர்க்கத்திற்கே துரோகமிழைத்த பாராளுமன்ற இடதுசாரிகள், அதன் தொடர்ச்சியாகவே தமிழ் மக்களுக்குத் துரோகமிழைத்தார்கள் எனலாம். சந்தர்ப்பவாதிகள், ட்ராஸ்கியவாதிகள் செய்த தவறுகளெல்லாம், சரியான நிலைப்பாட்டில் இருந்த மார்க்சிய- லெனினியவாதிகளையும் உள்ளிட்ட ஒட்டுமொத்த கம்யூனிச அமைப்புகளின் தவறுகளாகவே மக்களால் கருதப்பட்டன. தமிழ் தேசிய அமைப்புகளும் அப்படியே பிரச்சாரம் செய்தன.

அடுத்த பிரச்சினை, சாதியம் தொடர்பானது. தமிழ் மக்கள் மத்தியில் சாதியத்திற்கு எதிராக இடதுசாரிகள் முன்னெடுத்த போராட்டத்திற்கு எதிராகவே, தேசியவாதத்தை முன்னெடுத்த உயர்சாதி-வர்க்கங்கள் இருந்தன. தமிழ் மக்கள் மத்தியில் தேசியவாதம் வேரூன்றிய பிறகு, அதை மீறுவது என்பது இடதுசாரிகளுக்குக் கடினமான விடயமாக இருந்து வந்தது. 1970-இல் நடந்த பிரச்சினையை வைத்து, 71-ஆம் ஆண்டு தரப்படுத்துதல், 72-ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு, 74-ஆம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதம், அதன் பிறகு அரசும், இராணுவமும், போலீசும் தமிழ் மக்ககளுடன் மோதல்... இப்படிப்பட்ட சூழ்நிலையில் உணர்ச்சியைக் கிளறிவிடக்கூடிய அரசியல் பெறும் வெற்றியை, ஒரு நிதானமான அரசியலை முன்வைக்கும் கருத்து வெற்றி பெற முடியாது என்பதே யதார்த்தம். இதனால் 1970 வரைக்கும் வளர்ச்சியில் இருந்த கம்யூனிச அமைப்புகள், அதன் பிறகு வளர முடியவில்லை. தமிழீழம் தேவையா என்ற விவாதத்தை இடதுசாரிகள் தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு சென்றதை, தமிழரசுக் கட்சி தடை செய்வதற்கு முயன்றது. அவர்களது ஆதரவாளர்கள் யாரும் இந்த விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இப்படி இடதுசாரிகளுக்கான ஜனநாயகவெளி தேசியவாதிகளால் தடை செய்யப்பட்டது.

மேலும் 1972 மற்றும் 78-ஆம் ஆண்டுகளில் கம்யூனிச கட்சிக்குள் நடந்த பிளவுகள் மக்களிடையே நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்தன. இப்படி தமிழ்தேசிய உணர்ச்சி அலை ஓங்கிய புறக்காரணம், சந்தர்ப்பவாதிகளின் தவறுகள் மற்றும் பிளவுகள் போன்ற அகக்காரணங்களால், இடதுசாரிகள் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்த முடியவில்லை.

**பு.ஜ: விடுதலைப் புலிகள் தலைமையில் ஒருவேளை தமிழீழம் அமைந்திருக்குமானால், அவர்கள் சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற முற்போக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த முன் வந்திருப்பார்களா? கிளிநொச்சி, வவுனியா உள்ளிட்ட பகுதிகளில் புலிகள் இணையான ஆட்சி நடத்தி வந்தபோது, எந்த வகையான பொருளாதார திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்தார்கள்?**

**சிவசேகரம்:** புலிகள் என்றில்லை; ஒட்டுமொத்த தமிழ்த்தேசிய அரசியலே எந்த வர்க்கங்களின் கண்ணோட்டத்தைப் பிரதிபலித்தது என்பதைப் புரிந்து கொண்டால், இந்தப் பிரச்சினையை புரிந்து கொள்ளலாம். புலிப் போராளிகளில் பெரும்பான்மையினர் தலித் மற்றும் ஏழை மக்களாக இருந்த காலத்தில் கூட, புலிகளால் தீண்டாமையை ஒழிக்க முடியவில்லை. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன முன்னணியால் எடுக்கப்பட்ட போராட்டத்தின் வீச்சால், தனிப்பட்ட முறையில் கூடச் சாதியைத் தெரிந்து கொள்வது தவறு என்ற அளவில் இருந்தது. உயர்சாதி மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தோர் தமது பிள்ளைகளைப் போராளிகளாக அனுப்பவில்லை. தலித் மற்றும் ஏழைகளின் குடும்பங்களிலிருந்தே போராளிகள் புலிப்படையில் சேர்ந்தார்கள். பெண்கள் கூட புலிப்படையில் சேர்ந்ததற்கு சமத்துவம் காரணமல்ல, துவக்கு தூக்க ஆளில்லை என்பதே பிரச்சினை.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இந்திய இராணுவம் வந்து சென்ற காலத்திற்குப் பிறகு, அவர்கள் ஆதிக்கம் செய்த பகுதிகளில் ஒரு வகையான சுயாதினமான பொருளாதாரத்தை புலிகள் வளர்க்க முயன்றார்கள். 2002 அமைதிப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, அதை கைவிட்டுவிட்டு நுகர்வு பொருளாதாரத்திற்கு மாறிக் கொள்கிறார்கள். இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மஹாராஜா மற்றும் கொக்கோ கோலா நிறுவனங்கள் செயல்படுவதற்குப் புலிகள் அனுமதி கொடுக்கிறார்கள். இவை இரண்டினாலும் மக்களுக்கு என்ன பயன்? கொக்கோ கோலாவினால் தண்ணீர் பற்றாக்குறை வரும். மஹாராஜா நிறுவனம் நடத்திவரும் சக்தி தொலைக்காட்சியினால் சீரழிவு பண்பாடு பரப்பப்பட்டு வந்தது. இப்படிப்பட்ட பணக்காரர்கள் இயங்குவதற்குப் புலிகள் அனுமதி தந்தார்கள்.

**பு.ஜ: நன்றி.** (முற்றும்)

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.







# “தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து போர்க்கால நடவடிக்கை எடு! விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கு!”

## –விவசாயிகள் விடுதலை முன்னணியின் ஆர்ப்பாட்டம்

தென்மேற்குப் பருவமழை பொய்த்துப் போனதால், தமிழகத்தின் பல மாவட்டங்கள் வறட்சியால் தத்தளிக்கின்றன. தருமபுரி மாவட்டத்தின் மேற்கேயுள்ள தேன்கனிக்கோட்டை வட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால் பயிர்கள் காய்ந்து கருகிவிட்டன. மேலும், வறட்சியால் காடுகளில் மேய்ச்சல் இல்லாமல் யானைகளும் காட்டுப் பன்றிகளும் விவசாயப் பயிர்களைத் தாக்கி அழிக்கின்றன. பல கிராமங்கள் குடிநீர் தட்டுப்பாட்டால் அவதிப்படுகின்றன. விவசாயிகளின் கால்நடைகளுக்கு மேய்ச்சலோ, தீவனமோ இல்லாமல் எலும்பும் தோலுமாகி நிற்கின்றன. தேன்கனிக்கோட்டை மட்டுமின்றி, தருமபுரி மாவட்டம் முழுவதும் வறட்சி பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது. இதே நிலைமை தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் நீடிக்கிறது.

தேன்கனிக்கோட்டை வட்டத்தில் சட்டமன்ற உறுப்பினராக, விவசாயிகளின் தோழனாகக் காட்டிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டு கட்சியின் பிரதிநிதி நீடித்த போதிலும், அக்கட்சியினர் செயலற்று முடங்கிக் கிடக்கின்றனர். இதர ஓட்டுக் கட்சிகளும் வாய்மூடிக் கிடக்கின்றன. இந்நிலையில், விவசாயிகளின் குமுறலை எதிரொலிக்கும் வகையில், இப்பகுதியில் இயங்கி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, வறட்சியால் காய்ந்து போன பயிர்களுக்கு நட்ட ஈடு கோரியும், தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவித்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கக் கோரியும் 26.10.09 அன்று வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக விவசாயிகளை அணிதிரட்டி எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், காய்ந்து சருகாகிப் போன ராகி பயிர்களைப் பார்த்து விவசாயப் பெண்கள் கதறி அழ, ‘‘அழுவதால் பிரச்சினை தீராது; போராடினால்தான் விவசாயிகள் தம்மையும் விவசாயத்தையும் தற்காத்துக் கொள்ள முடியும்’’ என்பதை உணர்த்தும் வகையில் காட்சி விளக்கம் நடத்திக் காட்டப்பட்டது. வறட்சியால் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்படும் விவசாயிகளைக் காப்பாற்ற ஏக்கருக்கு ரூ.30,00 வீதம் நட்ட ஈடு வழங்கவேண்டும், யானைகள் - காட்டுப்பன்றிகளால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், வறட்சி நிவாரணப் பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டும், கால்நடைகளுக்கு இலவசமாகத் தீவனம் வழங்க வேண்டும், கிராமங்களில் உடனடியாக குடிநீர் வசதி செய்து தர வேண்டும்முதலான கோரிக்கைகளை வலியுறுத்தி வி.வி.மு. நடத்திய இந்த ஆர்ப்பாட்டம் இவ்வட்டார மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் 13.10.09 அன்றும், பாலக்கோடு வட்டத்தில் 26.10.09 அன்றும் வி.வி.மு. இக்கோரிக்கைகளை முன்வைத்து, விவசாயத்தை அழிக்கும் அரசின் தாராளமய-உலகமயக் கொள்கைகளை எதிர்த்து வட்டாட்சியர் அலுவலங்கள் முன்பாக விண்ணதிரும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டங்கள் விவசாயிகளிடம் புதிய நம்பிக்கையை விதைத்து போராட அறைகூவுவதாக அமைந்தன.

தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் காய்ந்து கிடக்கும் பயிர்கள் சிறு நெருப்புப் பொறி பட்டாலே, பெருந்தீயாகப் பற்றிக் கொள்ளும் நிலையில் இருக்கின்றன. பயிர்கள் மட்டுமல்ல; குமுறிக் கொண்டிருக்கும் விவசாயிகளின் போராட்ட சிறு பொறியும் பெருந்தீயாகப் பற்றிப் படரக் காத்திருக்கிறது.



தேன்கனிக்கோட்டையில்...

— பு.ஜ.செய்தியாளர், தருமபுரி.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# குர்கான் தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சி: மறுகாலனியாதிக்க எதிர்ப்பில் புதிய அத்தியாயம்!



அரியானா மாநிலம் குர்கானில் உள்ள தொழிற்பேட்டையில் கடந்த அக்டோபர் மாதம் 20-ஆம் தேதியன்று நடந்த ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கண்டு இந்தியத் தரகு முதலாளி வர்க்கம் அரண்டு போயிருக்கிறது. அன்று நடந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் அத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள 60-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளைச் சேர்ந்த ஒரு இலட்சம் தொழிலாளர்கள் கலந்து கொண்டு, மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துள்ளனர். சாதி, மதம், மொழி, வேறு கம்பெனி தொழிலாளி என்ற வரம்புகளையெல்லாம் கடந்து, குர்கான் தொழிலாளி வர்க்கம் தனது வர்க்க ஒற்றுமையை, சகோதரத்துவத்தை அப்போராட்டத்தில் துலக்கமாக வெளிப்படுத்தியது. இந்த வர்க்க ஒற்றுமைதான் இந்தியாவெங்குமுள்ள தரகு முதலாளிகளை, பன்னாட்டு முதலாளிகளைக் கிலி கொள்ளச் செய்திருக்கிறது.

குர்கான் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ரிக்கோ என்ற தானியங்கி வாகன உதிரி பாகத் தொழிற்சாலையில் சங்கம் அமைக்க முயன்றதற்காக, அத்தொழிற்சாலையைச் சேர்ந்த 17 முன்னணி தொழிலாளர்கள் அதிரடியாக வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இதனையடுத்து, நீக்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணியமர்த்தக் கோரியும், சங்கம் அமைக்கும் உரிமை கோரியும் அத்தொழிற்சாலையைச் சேர்ந்த 3,500 தொழிலாளர்கள் கடந்த செப்டம்பர் 21-இல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். அரியானா மாநில அரசு அவ்வேலை நிறுத்தப் போராட்டத்தைச் சட்டவிரோதமென அறிவித்த பிறகும் அத்தொழிலாளர்களின் போராட்ட உறுதி குறையவில்லை; போராட்டமும் ஓயவில்லை.

கடந்த அக்டோபர் 18 அன்று அத்தொழிலாளர்கள் ரிக்கோ ஆலை வாயிலின் முன் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்தபொழுது, ரிக்கோ ஆலை நிர்வாகம் சதித்தனமான முறையில் ஒரு கலவரத்தைத் தூண்டிவிட்டது. இதனைப் பயன்படுத்திக் கொண்ட போலீசு கும்பல், நிராயுதபாணியான தொழிலாளர்கள் மீது தடியடியும் துப்பாக்கிச் சூடும் நடத்தியது. இந்தக் கலவரத்தில் அவ்வாலையைச் சேர்ந்த 26 வயதான இளம் தொழிலாளி அஜித் குமார் யாதவ் மண்டையுடைக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்; ஏறத்தாழ 40 தொழிலாளர்கள் படுகாயமடைந்தனர்.

அத்தொழிலாளியின் சாவுக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கக் கோரியும், அவரின் குடும்பத்திற்கு 50 இலட்ச ரூபாய் நட்ட ஈடு வழங்கக் கோரியும், வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணியில் அமர்த்தக் கோரியும் ரிக்கோ தொழிலாளர்கள் ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்தனர். குர்கான் தொழிலாளி வர்க்கம் இக்கோரிக்கைக்கு முழு ஆதரவு அளித்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு, இந்தியத் தரகு முதலாளி வர்க்கத்தையும், அவர்களின் அரசையும் நடுநடுங்க வைத்துவிட்டது. குர்கான் தொழிலாளி வர்க்கத்திடம் உருவாகிவரும் இவ்வர்க்க ஒற்றுமையின் காரணமாக, ''கோரிக்கைகள் முழுவதையும் வென்றெடுக்காமல் வேலைநிறுத்தத்தைக் கைவிடமாட்டோம்'' என ரிக்கோ தொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்.



குர்கான் தொழிலாளர்களிடம் உருவாகிவரும் இவ்வர்க்க ஒற்றுமையை முளையிலேயே கிள்ளியெறிந்துவிட வேண்டும் என இந்தியத் தரகு முதலாளிகளும், ஏகாதிபத்தியவாதிகளும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றனர். முதலாளிகளின் இந்த நப்பாசையை முறியடிப்பது மட்டுமல்ல; இவ்வர்க்க ஒற்றுமையை இந்தியாவெங்கும் ஏற்படுத்தி உறுதிப்படுத்துவதோடு, தொழிலாளர்களுக்குப் புரட்சிகர அரசியல் உணர்வையூட்டி, போல்ஷ்விக்மயமாக்குவதுதான் நம் முன்னுள்ள வரலாற்றுக் கடமை.